# வள்ளலார் - ஓர் அறிமுகம்

பேராசிரியர் மா. பா. குருசாமி
நெறியாளர்,
காந்தியப் படிப்பு - இராமலிங்கர் தத்துவத்துறை.

மதுரைப் பல்கலைக் கழகம்
ம து ரை - 625 021

# வள்ளலார் - ஓர் அறிமுகம்

பேராசிரியர் மா. பா. குருசாமி
நெறியாளர்,
காந்தியப் படிப்பு - இராமலிங்கர் தத்துவத்துறை.

மதுரைப் பல்கலைக் கழகம்
மதுரை - 625 021

முதற் பதிப்பு : பிப்ரவரி - 1977

இதனைத் தொடர்ந்து இந்தத் துறையின் ஆய்வு நூலாக, ''வள்ளலாரின் உயிரிரக்கக் கோட்பாடு'' என்னும் விரிவான நூல் வெளிவர இருக்கின்றது.

—மா. பா. குருசாமி

மதுரைப் பல்கலைக் கழக கூட்டுறவு அச்சகம், மதுரை-21.

# அணிந்துரை

பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு, அவர்கள்
துணைவேந்தர்,
மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை.

பேராசிரியர் மா. பா. குருசாமி அவர்கள் காந்தியச் சிந்தனையாளர், மிகச் சிறந்த காந்தியவாதி. வள்ளலாரின் சிந்தனையோட்டங்களுக்கும் காந்தியத்திற்கும் பற்பல ஒற்றுமைகளுண்டு. எனவே சென்ற நூற்றாண்டின் சிறப்பாகவும் இந்த நூற்றாண்டின் பெருமையாகவும் விளங்கும் இவ்விரு சிந்தனைகளுடனும் தொடர்புடைய பேராசிரியர் அவர்கள் எழுதிய 'வள்ளலார் ஓர் அறிமுகம்' என்ற இந்நூல் புதுமைகள் பல பெற்றுத் திகழ்கிறது.

வள்ளலார் வரலாறு, அவருடைய நூல்கள், அந்நூல்கள் பற்றி இதுவரை வெளிவந்துள்ள திறனாய்வுகள் அனைத்தையும் படித்துச் சிறந்ததோர் ஆய்வு நூலாக இது எழுதப்பெற்றுள்ளது. ஆசிரியரின் தெளிந்த சிந்தனையும் காந்தியப் பார்வையும் நுட்பநோக்கும் இந்நூல் முழுதும் தெளிவாகப் புலனாகின்றன.

முதற்கண் வள்ளலார் காலச்சூழல் பற்றிய பல்வேறு கருத்துக்களையும் தொகுத்துத் தந்து, நம்மை அக்கால நிலைபற்றி நன்கு உணர வைக்கிறார். அடுத்து வள்ளலாரின் வாழ்க்கையைப் பற்றியும் அவர் படைத்த நெஞ்சை உருக்கும் அருட்பாக்களைப் பற்றியும் அவற்றின் வழி அவர் செய்த சாதனைகளைப் பற்றியும் மிகத்திறம்பட எடுத்துரைக்கின்றார். அடுத்து வரும் பல்வேறு பகுதிகளிலும் வள்ளலார் வழங்கிய அருட்கொடை, தொண்டு, அவர் செய்த புரட்சி, அவர் காட்டிய ஆன்மிக வாழ்க்கை நெறிகள் ஆகியன பற்றி விரிவாகப் பேசப்படுகின்றன. இவை அனைத்தும் வள்ளலாரின் கொள்கை விளக்கமாக அமைகின்றன. இறுதி இயல் பாரதியார் - வள்ளலார் ஒப்பீடாக அமைவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

வள்ளலாரின் காலச்சூழ்நிலையையும் வாழ்க்கையையும் விளக்கும் வரலாற்று நூலாகவும் அவருடைய பாடல்களுக்கு ஓர் அறிமுக ஏடாகவும், அவரின் கொள்கைகள் பற்றிய விளக்கக் குறிப்புப் புத்தகமாகவும் அவரைப் பற்றிய சிறப்புக்களை இக்காலக் கருத்து வளர்ச்சியுடன் ஒப்பிட்டுக் காட்டும் ஆய்வுப் பெட்டகமாகவும் திகழும் இந்நூலைத் தமிழகம் பெரிதும் வரவேற்றுப் போற்றும் என்பது உறுதி. பொருத்தமானதோர் பொருள்பற்றித் தக்கார் ஒருவரால் சிறப்பாக எழுதப்பட்ட நூல் என்று இதனைப் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மதுரை 625021
25-6-1977

சை. வே. சிட்டிபாபு
துணைவேந்தர்,
மதுரைப் பல்கலைக் கழகம்

# முன்னுரை

''காந்தியடிகள் படிப்பு - இராமலிங்கர் தத்துவத்துறை''யின் சார்பில் தொடர்ந்து படிப்பு வட்டக் கூட்டங்களும் (*Study Circle Meetings*) கருத்தரங்குகளும் நடத்திக் கொண்டிருக்கின்றோம். கூட்டங்களும் கருத்தரங்குகளும், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் காந்தியடிகளையும் வள்ளலாரையும் பற்றி தெளிவாக அறிந்து கொள்ளவும், அவர்களைப் பற்றிச் சிந்திக்கவும் வாய்ப்பளிக்கின்றன.

இந்தப் படிப்பு வட்ட, கருத்தரங்குக் கூட்டங்களில் நான் வள்ளலாரைப் பற்றிப் படித்த கட்டுரைகளையும், தொடர்பாக எழுதிய வற்றையும் தொகுத்து "வள்ளலார் - ஓர் அறிமுகம்" என்ற இந்த நூலை உருவாக்கியிருக்கின்றேன். வள்ளலாரையும் அவரது கருத்துக் களையும் பல கோணங்களில் அறிமுகப்படுத்துவனவாகக் கட்டுரைகள் அமைந்திருக்கின்றன.

இதிலுள்ள கட்டுரைகள் ஆய்வுக்களிக்கப் பெற்ற விவரம்:-

அ) படிப்பு வட்டக் கூட்டங்களில் படிக்கப் பெற்றவை

1. வள்ளலாரும் பசிப்பிணியும் 17—8—73
2. வள்ளலாரும் பாரதியும் 12—9—73
3. வள்ளலாரின் ''ஜீவகாருணிய ஒழுக்கம்'' 11—2—74
4. வள்ளலார் வகுத்த வழிபாட்டு முறை 7—3—74
5. அருட்பெருஞ் சோதி 30—8—74
6. தனிப்பெருங் கருணை 30—10—74
7. வள்ளலார் வகுத்த வாழ்க்கை நடைமுறை 9—4—75
8. வள்ளலாரின் சாதனைகள் 16—4—75

ஆ) கருத்தரங்கக் கட்டுரைகள்

1. வள்ளலார் காலச் சூழல் 9—12—73
2. வள்ளலார் கண்ட சமரச சுத்த சன்மார்க்க நெறி 17—3—74
3. வறுமைத் துன்பம் 24—3—75

இ) இந்நூலுக்காக எழுதப் பெற்றவை

1. நெஞ்சையள்ளும் திருவருட்பா
2. மனுமுறை கண்ட வாசகம்
3. ஓர் ஆன்மீக வாழ்க்கை
4. வள்ளலார் செய்த புரட்சி

# உள்ளடக்கம்

முன்னுரை

1. வள்ளலார் காலச் சூழல் 1

2. ஓர் ஆன்மீக வாழ்க்கை 13

3. வள்ளலாரின் சாதனைகள் 27

4. நெஞ்சையள்ளும் திருவருட்பா 36

5. மனுமுறை கண்ட வாசகம் 44

6. வள்ளலாரின் ''ஜீவகாருணிய ஒழுக்கம்'' 53

7. தனிப்பெருங் கருணை 61

8. அருட்பெருஞ் சோதி 69

9. வள்ளலார் கண்ட சுத்த சன்மார்க்க நெறி 76

10. வள்ளலார் வகுத்த வழிபாட்டு முறை 85

11. வள்ளலார் வகுத்த வாழ்க்கை நடைமுறை 93

12. வறுமைத் துன்பம் 101

13. வள்ளலாரும் பசிப்பிணியும் 111

14. வள்ளலார் செய்த புரட்சி 121

15. வள்ளலாரும் பாரதியும் 132

# 1. 'வள்ளலார் காலச் சூழல்'

''ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமையுளராகி உலகியல் நடத்த வேண்டும்'', என்ற புதியதொரு சமுதாயத்தைப் பற்றிக் கனவு கண்ட திருவருட்பிரகாச வள்ளலார் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளை இன்றைய உலகம் முழுமையாக அறிந்து கொள்ளவில்லை. வள்ளலாரை சன்மார்க்க நெறியைப் போதித்த சமய ஞானியாக மட்டும் சிலர் எண்ணிப் பார்க்கின்றனர். அவரது திருவருட்பாவில் மூழ்கித் திளைப்பவர்கள் அவரை ஓர் அருட்கவிஞராக மட்டும் எண்ணி மகிழ்கின்றனர். சமுதாயச் சீர்திருத்தங்களில் ஆர்வங் கொண்டவர்கள் அவர் சாதி சமயச் சழக்குகளைச் சாடியவற்றை மட்டும் எடுத்தியம்புகின்றனர். இன்னும் சிலர் தாங்கள் எண்ணுகின்ற துறைகள் பற்றி எல்லாம் வள்ளலார் ஏதாவது கூறியிருப்பாரா வென்பதை அறியும் நோக்கில் அவரை அணுகுகின்றனர்.

ஆன்மீகத் துறையில் தனக்கென்றொரு நெறியை உருவாக்கிக் கொண்டு, அதன் வழி நடந்து, மற்றவர்களுக்கும் தான் கண்ட மெய் நெறியை விளக்கி வழிகாட்டி, எண்ணியதை எண்ணியாங்கெய்தியவர் வள்ளலார். அவர் வையத்துள் வாழ்ந்த வாழ்க்கையையும், அவர் கண்ட வாழ்க்கை நெறியையும், அவர் உருவாக்கிய தத்துவத்தையும் அவர் கூறிய கருத்துக்களையும் சரியாகப் புரிந்து கொள்ள அவர் வாழ்ந்த காலச் சூழலைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இன்றைய காலச் சூழல் வேறு; வள்ளலார் காலச் சூழல் வேறு. பாரதத்திலும், குறிப்பாகத் தமிழகத்திலும் அன்றிருந்த அரசியல், பொருளாதார, சமுதாய சமயச் சூழ்நிலைகள் இன்றிருப்பவற்றிலிருந்து பெரிதும் மாறுபட்டவை. வள்ளலாரின் மண்ணுலக வாழ்க்கை 5-10-1823இல் தொடங்கி 30-1-1874இல் நிறைவு பெற்றது. அவர் சித்தி பெற்ற பிறகு கடந்த நூறுண்டுக் காலத்தில் எத்தனையோ புற மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. புதிய சிக்கல்கள் உருவாகியிருக் கின்றன. இன்றைய மதிப்பீடுகளை வைத்து வள்ளலார் வாழ்க் கையைக் கணிக்க இயலாது. அவர் வாழ்ந்த பத்தொன்பதாம் நூற்றுண்டுச் சூழலில் அவரது வாழ்க்கை எப்படி மலர்ந்து, மணம் பரப்பியதென்பதை அறிவது நமக்குப் பயனுடையதாக இருக்கும்.

**வரலாற்றுப் பின்புலம்:** தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாண சுந்தரனர், ''இற்றைக்கு ஒரு நூற்ருண்டுக்கு முன்னர் நாட்டில் இருள் படரலாயிற்று. அவ்விருள் கடிய எழுந்த ஞாயிறு நம் இராமலிங்க சுவாமிகள்,''[1] என்று கூறுகின்ருர். நமது தாய்த்திரு நாட்டில் இருள் மெல்லப் பரவி, கனமாகக் கவிந்து கொண்டது. அதனே நமது நாட்டவர்கள் புரிந்து, விழித்தெழுந்து செயல்படுவதற்கு முன்னல் மக்களின் வாழ்க்கையிலும் நாட்டின் வரலாற்றிலும் எத்தனேயோ மாற்றங்கள், நிகழ்ச்சிகள் ஏற்பட்டு விட்டன.

ஒரு காலத்தில் பாருக்குள்ளே நல்ல நாடாகப் பாரதம் திகழ்ந்தது. வேதம் படைத்தது. பண்பாட்டின் நிலேக்களமாக இருந்தது. தமிழகத்தின் பழங்காலம் போற்றுதற்குரிய பொற்காலம். இறவாத இலக்கியங்களேப் படைத்து, கலே-இலக்கியம் வளர்க்கும் நாற்றங் காலாக தமிழ்க் கூறும் நல்லுலகம் விளங்கியது. எல்லாம் பழங்கதை-யாய் போகின்ற நிலேயில் நமது தாயகத்தின் இடைக்காலம் அமைந்தது.

ஆற்றல்மிக்க அரசர்கள் ஆண்ட பரந்து விரிந்த அரசுகள் துண் டாடப்பட்டு, குறுநில மன்னர்கள் கோலோச்சும் பூமியாகப் பாரதம் மாறியது. சண்டையிடும் உட்குழுக்கள் பெருகின. இங்கிருந்த சாதி சமயப் பிளவுகள் மக்களிடம் பிரிவுகளே வளர்த்தன. நீண்ட காலமாக மாருத கிராம சமுதாய அமைப்பும், மக்களின் வாழ்வில் வளத்தைச் சேர்க்காத பொருளாதார நிலேயும் பொதுவாக எங்கும் காணப்பட்டன. இத்தகைய பின்புலத்தில் பாரதபூமி வெளிநாட்டவரின் வேட்டைக் காடாக மாறியது.

போர்ச்சுக்கீசியர், டச்சுக்காரர்கள், பிரான்சு நாட்டினர், ஆங்கிலே-யர்கள் ஆகிய நான்கு இனத்தவர்கள் வாணிப நோக்கில் நமது நாட்டில் வேரூன்ற முயன்றனர். அவர்களுக்குள் ஏற்பட்ட போட்டி களும், அவர்கள் நடத்திய அரசியல் சூதாட்டங்களும், அதில் நமது நாட்டு குறுநில மன்னர்கள் பகடைக் காய்களாக உருட்டப்பட்டதும் நீண்ட வரலாறு. போராட்டங்களுக்கும், போர்களுக்கும் பிறகு ஆங் கிலேயர்களின் பிடிக்குள் நமது நாடு அகப்பட்டது.

இங்கிலாந்தில் இலாப நோக்கம் கொண்ட சில வெள்ளே வணி கர்கள் 1600-இல் 70.000 பவுன் மூலதனத்தோடு ''கிழக்கிந்தியக்

---

1. ''இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்'' - முன்னுரை ப.111

கம்பெனி'' என்ற நிறுவனத்தைத் தொடங்கினர். இந்த வாணிப நிறுவனம் 1639–இல் ''செயிண்ட் ஜார்ஜ்'' கோட்டையைக் கட்டியது 1687-இல் பம்பாயை விலைக்கு வாங்கியது. 1700-இல் கல்கத்தாவில் தனது தலைமையகத்தை அமைத்துக் கொண்டது. போராட்டத்தின் தொடக்கத்தில் ஓரளவு ஈடுகொடுத்த பிரெஞ்சுக்காரர்கள் சென்னை மாநிலத்தில் பாண்டிச்சேரியையும், கல்கத்தாவிற்கு வடக்கில் சந்திரா நகர் பகுதிகளையும் மட்டும்தான் காலப்போக்கில் தங்களுக்குரியவை களாக்கிக் கொள்ள முடிந்தது. மொத்தத்தில் இந்தியாவின் பெரும் பகுதி கிழக்கிந்திய நிறுவனத்தின் ஆட்சிக்குள் வந்தது. வணிகர்கள் ஆட்சியாளர்களாகவும் மாறி கோடி கோடியாகக் கொள்ளை இலாபம் குவித்தனர். நமது மக்கள் வயிற்றுக்குச் சோறின்றி வாடினர். இந்தியாவின் ''சிப்பாய்க் கலகம்'' என்று வரலாற்று ஆசிரியர்களால் குறிக்கப்பட்ட ''முதல் சுதந்திரப் போர்'' என்று நம்மவர்களால் போற்றப்பெற்ற 1857 எழுச்சிக்குப்பின் இந்தியா விக்டோரியா மகாராணியின் பிரகடனப்படி இங்கிலாந்துப் பேரரசின் நேரடி ஆட்சி யின் கீழ் வந்தது.

**தமிழக வரலாறு:** ஆங்கிலேயர்களின் ஆட்சி தமிழகத்தில் கால் கொள்வதற்கு முன்னல் தமிழகத்தில் நாயக்கர்களின் ஆட்சியும், தஞ்சையில் சரபோஜி மன்னர்களின் ஆட்சியும் இருந்தன. ஆங்காங்கு பல குறுநில மன்னர்கள் இருந்தனர். இவர்களில் பெரும் பாலான வர்கள் மக்களின் நலம் பேணுபவர்களாக இருந்தனரென்று கூற முடியாது. தந்நலம் பேணி தாய்த்திரு நாட்டின் பற்றின்றி, தங்கள் கால்களில் நிற்கும் ஆற்றலின்றி இருந்த மன்னர்களை கிழக்கிந்திய நிறுவனம் எளிதாகத் தங்களது கைப்பாவைகளாக்கிக் கொண்டது. விதிவிலக்காக அமைந்து வீரத்தோடு எதிர்த்து நின்ற வீரபாண்டியக் கட்டபொம்மனுக்கு 1799 ஆம் ஆண்டு அக்டோபர் 15–இல் தூக்குக் கயிறு பரிசாகக் கிடைத்தது. காளையார் கோவில் மருதுபாண்டியர்கள் முறியடிக்கப்பட்டனர். 'எட்டப்பர்கள்' மன்னர்களென்ற பெயரோடு பவனி வந்தனர். 1806-இல் வேலூரில் தோன்றிய கிளர்ச்சியும் ஒடுக்கப்பட்டது.

வள்ளலார் பிறந்த காலத்தில் தமிழகத்தில் கிழக்கிந்திய நிறுவனத்தின் ஆட்சி வலுவடைந்திருந்தது. அவர் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் எரிமலையாக ''சிப்பாய்க் கலகம்'' வெடித்தது. ஆங்கிலேய அரசின் ஆட்சி வந்தது. இங்கிருந்த குறுநில மன்னர்களின் ஆட்சிக் கும் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கும் மிகுந்த வேறுபாடு இல்லை.

இரண்டும் ''கருணை இலாதார்'' ஆட்சி. தமிழக மக்களிடம் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்படவில்லை. அவர்கள் ''இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன'' என்ற மனநிலையில் காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தனர். அவர்களுக்கிருந்த பொருளாதார, சமுதாய, சமயச் சிக்கல்கள், அவற்றிலேயே அவர்களை உழலச் செய்து கொண்டிருந்தன. பல அரசியல், பொருளாதார, சமுதாய, சமய மாற்றங்கள் வள்ளலாரின் காலத்திற்கு முன்பே தொடங்கின. ஆனால் அவை வள்ளலார் காலத்தில் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கின. இவற்றின் பாதிப்புக்களையும், விளைவுகளையும் வள்ளலாரின் வாழ்க்கையில் காணமுடிகின்றது.

*சமுதாய வாழ்க்கை:* ''சிதறுண்டு கிடந்த செந்தமிழ்நாடு ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் கீழ் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரே குடையின் கீழ் வந்தது''[2] என்ற ஒரு வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். மற்றுமொரு ஆசிரியர், ''வெவ்வேறு வகை நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம் முதலியன கொண்ட பல்வேறு மக்களினத்தை இந்திய இனம் என்று ஒன்று ஆக்கி, அதன் வழி 'ஓர் இனக் கொள்கை' (One Nation Theory) நிறுவிவிட்டனர் ஆங்கிலேயர்''[3] என்று கூறுகின்றார். ஆனால் இந்த அரசியல் இணைப்பு இங்கு நீண்ட காலமாகப் புரையோடிப்போன சமுதாயப் பிரிவுகளையோ, கண்மூடிப் பழக்க வழக்கங்களையோ குறிப்பிடத்தக்க வகையில் பாதிக்கவில்லை.

நான்கு வருணங்கள் பேசப்பட்டன. எண்ணற்ற சாதிகளும் இனங்களும் மக்களைக் கூறுபோட்டுக் கொண்டிருந்தன. தீண்டாமை புற்றுநோயாக வளர்ந்திருந்தது. இவற்றைப் பற்றி எண்ணுவதும் பேசுவதும் ''பாவம்'' என்ற மனப்பான்மை மக்களிடம் வளர்ந்திருந்தது.

''ஆன்மநேய ஒருமைப்பாட்டை'' மக்களுக்கு எடுத்துரைக்க எண்ணிச் செயல்பட்ட வள்ளலார் அக்காலச் சமுதாயச் சூழல் மனிதன் முழுமைபெறவே தடையாக இருப்பதனை உணர்கின்றார். இதனை அவர் தனது ''சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பத்தின்'' இறுதியில், ''இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடையாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்ப

2. தமிழக வரலாறு (அறுவர் சொற்பொழிவுகள்) - ஆங்கிலேயர் காலம் - - சி. இராமச்சந்திரன் ப. 309
3. தமிழக வரலாறு - அ. மு. பரமசிவானந்தம் - ப. 330

வற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்திற் பற்ருத வண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக் காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்;'' என்று கூறுவதிலிருந்து நன்கு புரிந்து கொள்ளலாம்.

ஆங்கிலேயர்களின் தொடர்பும், ஆங்கிலக் கல்வியும், பிற நாட்டுக் கருத்துக்களின் வளர்ச்சியும் நம்நாட்டாருக்குப் பொய்மைச் சாதிகளைப் புரிந்து போராடத் தூண்டின. ஆனல் இந்தச் சமுதாய சீர்திருத்த இயக்கத்திற்கு முன்னேடியாக, இந்த புறத்தூண்டுதல்களின்றியே, அகமலர்ச்சியின் காரணமாக சாதிப்பிரிவுகளை எதிர்த்துப் போராடியவர் வள்ளலார். அவர், ''தயவை விருத்தி செய்வதற்குத் தடையாக இருப்பன சமய ஏற்பாடு ஜாதி ஏற்பாடு முதலியவைகள். ஆதலால், இவைகளை விட்டொழித்துப் பொது நோக்கம் வந்தாலொழிய, காருண்ணியம் விருத்தி ஆகிக் கடவுள் அருளைப் பெற்று அனந்த சித்தி வல்லபங்களைப் பெறமுடியாது''[4] என்றும், ''திருவருட்பாவில்'',

*''சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே*
*சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே*
*ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்*
*அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழ கலவே''*[5] என்றும்
*''நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா*
*நவின்றகலைச் சரிதம்எலாம் பிள்ளைவிளை யாட்டே''*[6]

என்றும் இன்னும் பல இடங்களில் பலவாறும் சாதி வைப்பு முறையைச் சாடுவதைக் காணலாம்.

நமது நாட்டில் சாமுறையால் ஏற்பட்ட சீர்கேடுகள் இன்னும் தீர்ந்த பாடில்லை. வள்ளலார் காலத்தில் பல இந்துக்கள் கிறித்துவ சமயத்தை ஏற்றுக் கொள்ள சாதி அடிமைத்தனமே காரணமாக இருந்தது. இதனை, ''தாழ்ந்த சாதியார் எனப்படும் வகையில் உள்ள பலர் தென்தமிழகத்தில் அதிகமாக உயர்ந்தோரால் கொடுமை செய்யப் பெற்ற காரணமே அப்பகுதியில் இந்து சமயத்துக்கு மாறுபட்ட

4. உபதேசப் பகுதி ப. 63
5. திருவருட்பா - ''புனித குலம் பெறுமாறு புகலல்'' பாடல் 1
6. திருவருட்பா - ''அருள்விளக்கமாலை'' பாடல் 85

முகமதிய கிறிஸ்துவ சமயங்கள் வளர வாய்ப்பை உண்டாக்கித் தந்தது எனலாம்;''[7] என்று ஓராசிரியர் கூறுகின்றார். இந்தப் பின்புலத்தில் நோக்கினுல் வள்ளலாரின் சாதி ஒழிப்புக் கருத்து அக்காலத்தில் எவ்வளவு புரட்சிகரமானதாகக் கருதப்பெற்றிருக்க வேண்டுமென்பதை உணரலாம்.

*சமயச் சூழல்:* இந்து சமயத்தில் பல உட்பிரிவுகள் தோன்றின. சமயப் பெரியார்கள் சைவ சமயம், வைஷ்ண சமயமென்று பிரிந்து வாதிட்ட காலமிருந்தது. இவர்கள் பேசிய தத்துவக் கருத்துக்கள் சாதாரண மக்களுக்குப் புரியாத மொழியில், நிலையில் இருந்தன. இவற்றிற்குள்ளும் பல பிரிவுகளும், எண்ணற்ற சடங்குகளும் காணப் பட்டன. முகமதிய ஆட்சிக் காலத்தில் சிலர் முகமதிய சமயத்திற்கு மாறினர். இந்தியாவிற்கு வந்த கிறிஸ்துவப் பாதிரியார்கள் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். அப் பொழுது பரவிய கல்வி முறையும், அச்சு எந்திர வளர்ச்சியும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்தன.

வள்ளலார் சத்தியத்தைப் போதிக்கின்ற சமயங்களின் உள்ளார்ந்த பொருளில் வேறுபாட்டைக் காணவில்லை. சமயப் போர் பொருளற்றதாகத் தோன்றுகிறது. அவர்,

''சாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி''[8] என்று

கூறுவது குறிப்பிடத்தக்கது. வள்ளலார் கண்ட நெறியின் சாரமாக,

''அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி'' என்ற

மந்திர மொழி அமைகின்றது.

வள்ளலார் காலத்தில் வட இந்தியாவிலும் சமய மறுமலர்ச்சியும் சமய எழுச்சியும் ஏற்பட்டன. அவற்றில் மூன்று இயக்கங்கள் குறிப் பிடத்தக்கன. (1) இராசாராம் மோகன்ராய் (1774-1883) பிரம்ம சமாஜத்தின் மூலமும், (2) தயானந்த சரஸ்வதி (1824–1883) ஆரிய சமாஜத்தின் மூலமும் இந்து சமயத்தில் பெரிய மாறுதல்களை ஏற்படுத்த

7. தமிழக வரலாறு - அ. மு. பரமசிவானந்தம் ப. 342
8. அருட்பெருஞ்ஜோதி அகவல் 115-116 வரிகள்

முயன்றனர். (3) இராம கிருஷ்ண பரமஹம்சரின் (1836-1886) ஆன்மீக வாரிசான சுவாமி விவேகானந்தர் (1863-1902)இந்து சமயத்திற்குப் புத்தாக்கம் கொடுத்தார்.

வடக்கில் இராசராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, விவேகானந்தர் ஆகியோர் சமயச் சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்ட பொழுது அங்கு ஆங்கிலக் கல்வியின் மூலம் ஒரு வகை விழிப்புணர்ச்சி நகர்ப்புறங்களில் இருந்தது கவனிக்கத்தக்கது. இம்மூவரில் இராசாராம் மோகன்ராயும், சுவாமி விவேகானந்தரும் ஆங்கிலக் கல்வி பெற்ற வர்கள். வள்ளலார் தமது இயக்கத்தை வடலூர் என்ற சிற்றூரை மையமாகக் கொண்டு, தமிழ்க்கவிதையக் கருவியாக ஏற்றுத் தெருவெங்கும் ஒலிக்க திருவருட்பாவை இயற்றினர். சூழல்களும், இயக்கங்களின் தோற்றமும், வளர்ச்சியும் இயல்பால் வேறுபடுவதைக் கவனித்தால், வள்ளலாரைப் புரிந்துகொள்ள வழிபிறக்கும்.

ம. பொ. சிவஞானம் அவர்கள் இராம்மோகன்ராய், தயானந்தர், இராமகிருஷ்ணர் ஆகியவர்களோடு வள்ளலாரை விரிவாக ஒப்பிட்டு அவர்கள் மூவருக்கும் அவர்கள் காலத்திலேயே கிடைத்த புகழ் வள்ளலாருக்குக் கிடைக்காததைச் சுட்டிக்காட்டி, ''சாதி வெறியின்'' விளைவை இதுவெனக் கூறி, இறுதியில், ''இதற்குக் காரணம், பத்தொன்பதாம் நூற்றுண்டின் சூழ்நிலையில், வடக்கிற்கும் தெற்கிற்கு மிடையே வேற்றுமை இருந்ததுதான்''[9] என்று குறிப்பிடுகின்றுர்.

இங்கிருந்த சமய நிலையை, ''வள்ளற்பிரான் காலத்தில் தமிழ் நிலத்தில் சமயச் சண்டையும், சாதிப்பிணக்கும் கைகோத்துக் குலவின. உயிர்கள்பால் அருளுடைமை மறைந்து விட்டது; சகோதர நேயம் சாய்ந்துவிட்டது; உண்மைச் சமயநெறி மங்கிப் போலிச் சமயச் சடங்குகளும் மூடப் பழக்க வழக்கங்களும் தாண்டவமாடின, தமிழகத்தின் உயிர்ச்சமயமாம் சிவநெறியின் மாண்பு சீர்குலைந்து கிடந்தது; அயல் நெறிகள் மக்களுக்கு மயல் புரிந்தன. இக்குறைபாடுகளைப் போக்கி உண்மைச் சிவநெறியைப் பரப்ப முனைந்தவர் நம் இராமலிங்கமாவர்,'' என்று ஓர் ஆசிரியர் கூறுகின்றுர்[10]. இதேபோன்று எல்லோரும் போற்றவில்லை. மாருகத் தூற்றுவோர் கூட்டமொன்று உருவாகியது. ''அருட்பா மருட்பா'' போர் அவரை நீதி மன்றத்திற்கே இழுத்துச் சென்றது. அவரது புரட்சிகரமான

9. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு ப. 42
10. மறைமலையடிகள் வரலாறு - வித்துவான்மறை திருநாவுக்கரசு ப. 50

சமயக்கருத்துக்கள் பழமையில் ஊறிப்போன இந்து சமயவாதிகளை அச்சுறுத்தியது. அதன் விளைவு தான் புலவர் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் உருவில் தோன்றியது. இதிலிருந்து அக்காலத் தமிழகத்தின் சமயவாதிகளின் மனநிலையையும், சமயப் புத்தாக்கத்திற்கு இருந்த எதிர்ப்பையும் புரிந்து கொள்ளலாம். இத்தகைய சோதனைக்காலப் பின்புலத்தில் வள்ளலாரின் சாதனைகள் மகத்தானவை என்பதை உணர முடிகின்றது.

**பொருளாதாரச் சூழல்:** வள்ளலார் காலத் தமிழகம் அதற்கு முன்னால் எப்பொழுதும் கண்டிராத வாட்டும் வறுமைத் துன்பத்தில் வாடியது. அல்லற்பட்ட மக்களிடம் இரக்கம் கொள்ளாமல், வளத்தில் வாழ்ந்து கொண்டிருந்த சிலர் இருந்தனர். இறைவனைத் தனிப் பெருங்கருணையாக, அருளின் வடிவாக உணர்ந்த வள்ளலாரால் மக்களின் பொருளாதாரத் துன்பத்தைப் புறக்கணிக்க இயலவில்லை.

வள்ளலார் இந்த வையக வாழ்க்கையைத் தொடங்கிய காலத்தில் இந்தியாவில் நிர்வாகம் செய்து கொண்டிருந்த கிழக்கிந்திய நிறுவனத்தினர் பின்பற்றிய கொள்கைகளும் நடைமுறைகளும் வறுமைத் தீயை வளர்த்தன, வேளாண்மை நாடான இந்தியாவில் ''தேட்டில் சிறந்த'' சென்னை போன்ற நகரங்கள் ஆங்கிலேயரின் ஆட்சியில் செழித்து வளர்ந்தன. கிராமங்கள் சீர்குலைந்தன.

கிழக்கிந்திய நிறுவனம் வாணிபத்தில் மூலம் மட்டும் ஆதாயம் பெறுவதில் மனநிறைவு கொள்ளவில்லை. போர்ச் செலவுகளையும், உள்நாட்டு நிர்வாகச் செலவுகளையும் காரணமாகக் காட்டி வரிகளை விதித்தது. விவசாயிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். ''சென்னையில் நிலத்தின் மொத்த விளைச்சலில் பாதியை கிழக்கிந்திய நிறுவனம் நிலவரியாகப் பெற்றது'',[11] என்று பொருளாதார வரலாற்று அறிஞர் ஒருவர் குறிப்பிடுகிறார். முப்பதாண்டுகளுக்கு ஒரு முறை நிலவரியை மாற்றினர். எந்த அடிப்படையில் நிலவரியைக் கட்டினரென்பதை நிர்வாகத்தினர். கூறியதில்லை. அது விவசாயிகளுக்குப் புரியாத புதிராகவே இருந்தது. நிலத்தீர்வையைச் செலுத்தா விட்டால் விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். ''நிலையற்றதாக அமைந்த நிலவரி வேளாண்மையை முடமாக்கியது; சேமிப்பு உருவாகாமல் தடுத்தது, விவசாயியை கடனிலும் வறுமை-

11. The Economic History of India, Vol. I Ry Ramesh Dutt, P. XXVII

யிலும் மூழ்கிக் கிடக்கச்செய்தது,'' [12] என்று ரோமேஷ் டட் என்பவர் குறிப்பிடுகின்றார்.

அக்கால மக்களின் வறுமைத் துன்பத்திற்கு சில முக்கியமான காரணங்களைக் கூறலாம். முதலாவதாக, கிழக்கிந்திய நிறுவனம் தனது வாணிபத்தையும், வரி வருவாயையும் பெருக்கியதே தவிர மக்களின் நலனைப் பேணவில்லை. இரண்டாவதாக, நமது வேளாண்மை இயற்கையின் அருளால் நடைபெற்றது. மழை தவறிய காலத்தில் விளைச்சல் இல்லை. மூன்றாவதாக, இங்கிருந்த சில வசதியான மக்கள் கடன் கொடுத்து கடுமையான வட்டி வாங்குபவர்களாகவும், வெள்ளையர்களின் வழிச்செல்பவர்களாகவும் இருந்தனர். நான்காவதாக, சிறுதொழில்களின் சிதைவு மக்களின் வருவாயைப் பெரிதும் பாதித்தது. ஐந்தாவதாக, போக்குவரத்துக்கள் வளர்ந்து கொண்டிருந்தாலும், அவை மூலப்பொருட்களைத் தொழிற்சாலைகளுக்குக் கொண்டு செல்லப்பயன்பட்டனவேயன்றி, மக்களின் துன்பங்களைத் தீர்க்கத் துணை நிற்கவில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டைப் பஞ்ச நூற்றாண்டு எனலாம். ''பத்தொன்பதாம் நூற்றாண்டில் முதல் பாதியில் ஏழு கடுமையான பஞ்சங்கள் இருந்தன. இவற்றால் $1\frac{1}{2}$ மில்லியன் மக்கள் மாண்டனரென்று மதிப்பிடுகின்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் பகுதியில் 24 பஞ்சங்கள் தோன்றின (1851 முதல் 1875 வரை ஆறு; 1876 க்கும் 1900க்கும் இடையில் பதினெட்டு). அரசின் பதிவேடுகளின்படி 20 மில்லியன் பேர் இந்தப் பஞ்சங்களினால் இறந்தவர்'' [13] என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். கஞ்சி குடிப்பதற்கில்லாமலும், அதன் காரணத்தை அறியாமலும் மாண்டு மடிந்த மக்களுக்கிடையில் வாழ்ந்தவர் வள்ளலார். ''பசியினால் இளைத்தே வீடு தோறிரத்தும் பசியறாதயர்ந்த வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்'', என்று அவர் மனம் வாடிப் பாடிய சூழ்நிலை இது தான். இரந்தும் உயிர்வாழ எண்ணியவர்கள் பெருகியதும், ஈதல் அறம் குறைந்து வந்ததும், ஆன்மிகச் சோதனையில் ஈடுபட்ட, உயிரிரக்கம் கொண்ட வள்ளலாரை சத்திய தருமச்சாலையைத் தோற்றுவிக்கச் செய்தது.

---

12. Ibid.
13. British Paramountancy and Indian Renaissance (Part I) By R: C. Majumdar and K. K. Datta p. 836-837.

சமுதாயத்தின் பசிப்பிணியைப் போக்கும் பணியில் வள்ளலாரை போன்று அவருக்கு முன் தோன்றிய எந்தச் சமய ஞானியும் ஈடுபட-வில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். மக்களின் உலகியல் கவலை தீராத வரை ஆன்மீக மேம்பாடு இயலாதென்பதை வள்ளலாரைப் போன்று சுவாமி விவேகானந்தரும் உணர்ந்து வலியுறுத்தினர். அவர் "வயிற்றுக்கடவுள் பூஜையே இப்போது முதன்மையான தேவை-யாகும். வயிற்றுக்கடவுளை முதலில் திருப்தி செய்தாலான்றி உங்கள் சமய உபதேசங்களுக்கு யாரும் செவி கொடார். முதலில் இந்தக் கொடிய பட்டினியை நீக்குங்கள்"[14] என்று கூறியிருப்பதை எண்ணி பார்க்கலாம்.

கல்வி : வள்ளலார் தோன்றிய காலத்தில் கல்வி என்பது இன்று போல் எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதாக இல்லை. சமுதாயத்தில் மேலினத்தவர்களுக்கே அறிவு சொந்தமாக இருந்தது. அவர்களுக்கு அதற்கான வாய்ப்புக்கள் கிடைத்தன. மற்றவர்களில் செல்வர்களும், வாணிபம் தொழிலில் ஈடுபட்டவர்களும் தங்களுக்குத் தேவையான கணக்கு வழக்குகளை வைத்துக்கொள்ளும் அளவிற்கு எண்ணையும் எழுத்தையும் கற்றிருந்தனர். தங்களது பிள்ளைகளுக்கும் அத்தகைய கல்வியை வழங்கினர். ஆங்காங்கு திண்ணைப்பள்ளிகள் நடைபெற்-றன. அரசு கல்விக்காக மிகுதியாகப் பணம் செலவிடவில்லை.

வள்ளலார் வாழ்ந்த காலத்தில் கல்வியில் சில குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. கிறுஸ்தவப் பாதிரியார்களின் முயற்சியால் ஆங்காங்கு பள்ளிகளும் கல்லூரிகளும் தோற்றுவிக்கப்பெற்றன. தமிழகத்தில் வடக்கில் சென்னையிலும், தெற்கு தூத்துக்குடி, பாளையங்கோட்டை நகர்களிலும் இத்தகைய கல்வி நிறுவனங்கள் அமைந்தன.

இந்தியாவிலும் முதல் கல்லூரியாக 1817 இல் ஹிந்துக்கல்லூரி நிறுவப்பெற்றது. சென்னைப்பல்கலைக்கழகம் 1857 இல் தோற்றுவிக்-கப்பெற்றது. மெக்காலேயின் கல்வித்திட்டம் உருவாகி, செயல்பட லாயிற்று. அச்சுத்தொழிலின் வளர்ச்சி கல்விக்கு உறுதுணையாக அமைந்தது. ஆனால் இத்தகைய கல்வி நிலையங்கள் நகரங்களில் கிணறுகளாக அமைந்தனவே தவிர, கிராமங்களில் ஓடிச்செல்லவில்லை. இதனால் வளர்ந்து வந்த கல்வி ஒளி புகாத இருட்காடுகளாகவே அன்றைக் கிராமங்கள் இருந்தன.

---

14. நமது தாய் நாடு. ப. 48.

**இலக்கியம்:** பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழ் இலக்கியத்தில் மறுமலர்ச்சிக்கு வழி வகுக்கும் நிலேயில் இலக்கியக் களத்தைப் பயன்படுத்துக்கின்ற பணி தொடங்கியது, வடமொழி மோகம் வளர்ந்திருந்த நிலேயின் பிடி தளர, ஆங்கிலமோகம் படிப்படியாக படரத்தொடங்கியது. ஆங்கிலத்தில் புலமை பெற்றவர்கள் ''எல்லாம் ஆங்கிலத்தில் உள்ளன. இனித்தமிழுக்கு வாழ்வில்லே,'' என்று எண்ணிக் கொண்டிருந்தனர்.

தமிழகத்திலிருந்த வீரமா முனிவர் போன்ற ஆங்கிலப் பாதிரியார் கள் பழந்தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டனர். அவர்கள் நல்ல பல பழம் நூற்களேப் பதிப்பித்து வெளியிட்டனர். புதிய உரைநடை நூற்களேயும் இலக்கண நூற்களேயும் உருவாக்கினர்.

சென்ற நூற்றுண்டின் தமிழ் இலக்கியப்பணிகளேப்பற்றி, ''அச்சுப் பொறி தமிழ் நாட்டில் அமைக்கப்பட்டவுடன் பெரியோர் பலர் ஏட்டுச் சுவடிகளிலிருந்து தமிழ்நாட்டுப் பண்டைப் பெருநூல்களே அவை இறந்து விடாதபடி புதிய நூல்களாக இயற்றிக் காத்தனர், வித்துவான் தாண்டவராய முதலியார், விசாகப் பெருமாளேயர், மழவை மகாலிங்கையர், களத்தூர் வேதகிரி முதலியார் முதலானவர்கள் இத்துறையில் துவக்கத்தில் ஊக்கங்காட்டிய பெரியோர்களாவர்,''[15] என்று சிவ. இராமச்சந்திரன் குறிப்பிடுகின்ருர்.

வள்ளலார் ''ஒழிவிலொடுக்கம்'' (1851) ''தொண்டமண்டல சதகம்'' (1855) ''சின்மய தீவிகை'' (1857 ஆகிய நூற்களேப் பதிப்பித்தார். அவர் படைத்த உரைநடை நூல்களான ''மனுமுறை கண்ட வாசகம்'' ஜீவகாருண்ய ஒழுக்கம்'' ஆகிய இரண்டும் உரை நடை எழுதுவாருக்கும், தமிழ் மாணவர்களுக்கும் உற்ற துணேயாக இருந்தன. அவர் கண்ட உரைகள் அடிகளாரின் ஆழ்ந்த தமிழ் புலமைக்குச் சான்று பகர்கின்றது. அவரது ஒப்பற்ற ' திருஅருட்பா'' பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஈடு இணேயற்ற படைப்பாகத் திகழ்கின்றது.

அக்காலத்தில் தமிழ்ப்பற்றையும் தமிழ் இலக்கிய ஈடுபாட்டையும் வளர்க்க வேண்டிய நிலேயில் தமிழகம் இருந்தது. வள்ளலார் காலத்தேவையை நிறைவு செய்பவராக மட்டும் இல்லாமல், தமிழ் இலக்கியத்தில் புதிய யுகத்தைத் தோற்றுவிப்பராகவும் இருந்தார்.

---

15. தமிழக வரலாறு (ஆங்கிலேயர் காலம்) ப. 322.

வள்ளலாரின் வாழ்க்கை வரலாறு சென்ற நூற்றுண்டின் தமிழ் இலக்கிய வரலாருகவே அமைந்திருக்கின்றது. மரபு வழியில் பாக்கள் இயற்றிய வள்ளலார் புதிய மரபுக்கு வித்திட்டிருப்பதை திறனுய்வாளர்கள் உணர்த்துகின்றனர்.

*எதிர் நீச்சல்* : வள்ளலாரது காலத்தில் பின்புலத்தைப் புரிந்து கொண்டால், அவரது வாழ்க்கையும் பணிகளும் எதிர்நீச்சலாக அமைந்திருப்பதைக் காணலாம். காலத்தின் சூழ்நிலையை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல், அதில் மாற்ற வேண்டியவற்றை மாற்று-கின்ற வேட்கையோடும் உறுதிப்பாட்டோடும் செயல்பட்டவர் வள்ளலார்.

வள்ளலார் காலத்திலிருந்து இன்றையக் காலம் பலவற்றில் மாறியிருக்கின்றது. புது மாற்றங்கள் அகத்தில் ஒளியேற்றியிருக்-கின்றனவென்று கூற இயலவில்லை. இதனுல் வள்ளலார் காலத்தி-லிருந்த பல சிக்கல்கள் இன்றும் வெவ்வேறு உருவகத்தில், புதிய இயல்புகளோடு காணப்பெறுகின்றன. வள்ளலார் வாழ்ந்த வாழ்வை-யும், அவரது அருமருந்தான கருத்துக்களையும் புரிந்து கொள்ளுதல் இன்றையச் சிக்கல்களுக்குத் தீர்வு காணத்துணை செய்யும். *திறந்த உள்ளத்தோடு தெரிந்து கொள்வோம்; மன இருள் மறைய ஒளி-யாட்சி நிலைக்கக் காண்போம்.* □

# 2. ஓர் ஆன்மீக வாழ்க்கை

உலகம் உயர்நெறியில் செல்ல வழிகாட்டிய வள்ளுவப் பெருந்தகை,

> ''வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
> ஈண்டு முயலப் படும்''[1]

என்று கூறுகின்றார். வாழ்க்கையில் எண்ணியதை எண்ணியாங்கு பெற முயல்கின்றவர்களின் வாழ்க்கை தவவாழ்க்கையாக அமைகின்றது. அவர்களது சிந்தனையும் செயலும் ஒரே நோக்கத்தை மையமாகக் கொண்டே இருத்தலைக் காணலாம்.

வாழ்க்கையில் இறைவனைக் கண்டு, இறவா நிலையைப் பெற எத்தனையோ ஆன்ம ஞானிகள் முயன்றிருக்கின்றனர். அவர்களில் வெற்றி கண்ட ஒருவராகவும், மற்றவர்களுக்கெல்லாம் வழிகாட்டுகின்ற ஓர் ஆன்மீகச் செல்வராகவும் விளங்குபவர் வள்ளலார். ஓர் ஆன்மீக வேட்கையுடையவரின் வாழ்க்கை எப்படி உயர்ந்த நிலையில் அமையுமென்பதை வள்ளலாரின் வாழ்க்கையில் நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் காட்டுகின்றது.

*பிறப்பு:* ''வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில்'' ஒருவராகத் தோன்றிய இராமலிங்க சுவாமிகளின் பிறப்பிலேயே ஓர் அற்புதம் நிகழ்ந்ததாகக் கூறுகின்றனர். அவருடைய அன்னையார் ஒரு சிவனடியாரின் பசியைப் போக்கிய பொழுது, அந்த அம்மையாருக்கு "ஞானி ஒருவர் மகனாகப் பிறப்பாரென்று சிவனடியார் சொல்லிச் சென்றதாகவும், அதன்படியே பிறந்த குழந்தைதான் இராமலிங்கம் என்றும் கூறப்படுகின்றது.

இராமலிங்கத்தின் தந்தையார் பெயர் இராமையாபிள்ளை, அன்னையின் திருப்பெயர் சின்னம்மாள். பின்னால் வள்ளலார் என்று உலகம் போற்றிய இராமலிங்கம் 1823 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் ஐந்தாம் நாள் (சுபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் இருபத்தோராம்

---

1. *திருக்குறள் 265*

நாள்) தென்னூர்க்காடு மாவட்டத்தில் சிதம்பரத்திற்கு வடமேற்கேயுள்ள மருதூரில் பிறந்தார். இவருடைய தாய் இவரது தந்தைக்கு ஆருவது மனைவியாக வாழ்க்கைப் பட்டார். இராமலிங்கம் பெற்ருேருக்கு ஐந்தாவது பிள்ளையாகப் பிறந்தார்.

**இளமை வாழ்க்கை:** வள்ளலார் பிள்ளைப்பருவத்திலேயே இறையருள் பெற்று விளங்கியதை அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்கள் குறிப்பிடுகின்றனர். இராமலிங்கம் ஐந்து திங்கள் குழவியாக இருந்தபொழுது அவரைப் பெற்ருேர்கள் சிதம்பரத்திற்கு இறைவழிபாட்டிற்குக் கொண்டு சென்றனர். தில்லையம்பதியில் சிதம்பர இரகசியத்தைக் காட்ட திரையைத் தூக்கியபொழுது, கைக்குழந்தையாக இருந்த இராமலிங்கம் சிதம்பர ரகசியம் விளங்கப் பெற்று புன் முறுவல் பூத்தாராம். தனக்குக் குழந்தைப் பருவத்திலேயே சிதம்பர ரகசியத்தை இறைவன் விளக்கியதை வள்ளலார் திருவருட்பாவில்,

''தாய்முதலோ ரொடுசிறிய பருவமதில் தில்லைத்
தலத்திடையே திரைதூக்கத் தரிசித்த போது
வேய்வகைமேல் காட்டாதே என்றனுக்கே எல்லாம்
வெளியாகக் காட்டியஎன் மெய்உறவாம் பொருளே''[2]

என்று குறிப்பிட்டுருக்கின்ருர்.

இராமலிங்கம் தனது ஆருந்திங்களிலேயே தந்தையாரை இழந்தார். இவரது அன்னையார் பிள்ளைகளை எல்லாம் அழைத்துக் கொண்டு, பிழைக்க வழிதேடி மருதூரை விடுத்து தனது பிறந்த ஊரான பொன்னேரிக்குச் சென்ருர். பின்னுல் அங்கிருந்து சென்னையில் சென்று குடியேறினர்.

இராமலிங்கரின் அண்ணன் சபாபதிப்பிள்ளை முறையாகத் தமிழ் பயின்றவர். அவர் புராணச் சொற்பொழிவுகள் செய்து தேடி வந்த வருவாயைக் கொண்டு குடும்பம் நடந்தது. வளமான வாழ்க்கை அமையவில்லை. வறுமையிலும் செம்மையோடு அவர்களின் குடும்பம் வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது.

இராமலிங்கம் பள்ளி செல்லும் வயதை அடைந்தவுடன் அவரைப் பள்ளிக்கு அனுப்பினர். தம்பியும் நன்கு தமிழ் கற்று, சமய நூற்களில்

---
2. திருவருட்பா 4133

தேர்ச்சி பெற்று, தன்னைப் போல புராணப் பிரசங்கியாக வேண்டு-மென்று அண்ணன் விரும்பியிருக்கலாம்.

எண்ணையும், எழுத்தையும் ஓரளவு கற்றறிந்த இராமலிங்கத்தின் உள்ளம் ஏட்டுக் கல்வியில் ஈடுபட மறுத்தது. ஆதலால் பள்ளியில் கட்டுப்பட்டு நின்று பாடம் கேட்காமல் கோவிலுக்குச் சென்று அங்கே காலங்கழிக்கத் தொடங்கினார். அவரது ஆன்மீக வாழ்க்கை உலகம் அறியாப் பிள்ளைப் பருவத்தில் தொடங்கியதைப் பலரும் உணரவில்லை. ஆதலால் உலகியல் கண்ணோட்டத்தில் இராமலிங்கம் ஒழுங்காகப் படிக்கவில்லையே என்று அண்ணன் கவலைப்பட்டார்; கண்டித்தார். தனது தம்பியைப் படிப்பில் திருத்த எண்ணி. "ஒழுங்காகப் பள்ளி சென்று வந்தால் மட்டும் சோறுபோடு. அதற்கிடையில் உணவளிக்-காதே", என்று தனது மனைவியிடம் கூறிவிட்டார்.

இராமலிங்கத்தின் அண்ணியார் பெயர் பார்வதி அம்மாள். அவர் இராமலிங்கத்தின் மீது தாயன்பு கொண்டிருந்தார். கணவருக்குத் தெரியாது சிறுவன் இராமலிங்கத்தின் பசியமர்த்தி அன்பு காட்டினார்.

பள்ளி செல்ல விரும்பாத இராமலிங்கம் வேட்கையோடு சென்று பொழுதைக் கழித்த இடம் கந்த கோட்டம். அங்கிருந்த முருகனிடம் ஈடுபாடு கொண்ட அவர் கோவிலுக்குள் சென்று இறைவனைக் கண்டு களித்துக் காலம் கடத்திக் கொண்டிருந்தார். அந்தக் காலத்திலேயே அவரது உள்ளத்தில் கவிதை ஊற்றுத் திறந்தது. அதிலிருந்து பக்தி–ரசம் நனிசொட்டுகின்ற கவிதைகள் பொங்கின. இளமைக் காலத்தில் முதன் முதலில் அவர் பாடியது "தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி சண்முகத் தெய்வமணியே" என்று முடிகின்ற பாக்களைக் கொண்ட "தெய்வமணி மாலையாகும்". தெய்வமணி மாலையிலுள்ள பாக்கள் எல்லாம் இராமலிங்கரின் இளம் உள்ளத்தில் மலர்ந்த ஆன்-மீகத்தின் சிறப்பைக் காட்டும் வகையில் அமைந்துள்ளன.

**அன்பின் ஆற்றல்:** இராமலிங்கத்தின் வாழ்க்கையில் ஒரு திருப்-பத்தை அவருடைய அண்ணியாரின் அன்பு ஏற்படுத்தியது. பள்ளிக்குச் செல்லாமல் கோவிலைச் சுற்றிவந்த இராமலிங்கம் ஒரு நாள் வயிற்றுப் பசி மேலோங்க நேரங்கழித்து புறக்கடை வழியாக வீட்டிற்கு உணவுண்ண வந்தார். அன்றைய நாளில் வீட்டில் ஒரு சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அவருடைய தந்தையாரின் திதிக்காக வீட்டில் விருந்தளித்தனர். பலரும் உண்டு சென்ற வேளையில் வீட்டில்

உரிமையுடைய இராமலிங்கம் யாரும் அறியாமல் வந்து உணவுக்காக ஏங்கி நின்ற நிலையைக் கண்டு அவருடைய அண்ணியார் நெஞ்சுருகி நின்றார்.

அண்ணியார் இராமலிங்கத்துக்கு உணவளித்தார். ஆனால் அவர் கண்களிலிருந்து அருவியாக நீர் கொட்டியது. தன்னிடம் அன்னையைக் காட்டிலும் மிகுதியாக அன்பு செலுத்துகின்ற அண்ணியாரின் துன்பத்திற்கான காரணத்தை இராமலிங்கம் கேட்டார். ''அண்ணனின் சொற்கேட்டுப் பள்ளிக்குச் சென்றால், இப்படித் தெரியாமல் உணவு கொடுக்க வேண்டிய நிலை இருக்காதே'' என்று அண்ணியார் கூறினார். அண்ணியாரின் விருப்பப்படி, கோவில்களைச் சுற்றி வராமல் படிக்க உடன்பட்டார். ஆனால் பள்ளி சென்று பயில விரும்பவில்லை. வீட்டிலேயே அமர்ந்து படிக்க முடிவு செய்தார். இந்த ஏற்பாட்டை அண்ணனும் மகிழ்வோடு ஒப்புக் கொண்டார்.

**புதிய ஏற்பாடு:** மற்றவர்கள் கற்றதற்கும் இராமலிங்கம் கற்றதற்கும் வேறுபாடு இருந்தது. அவர் மாடியிலிருந்த தனியறையில் சென்று அமர்ந்து கொள்வார். அவர் கையில் சில ஏடுகள் இருக்கும். அறைக்குள் ஒரு நிலைக்கண்ணாடி, வழிபாட்டிற்குரிய பொருட்கள், விளக்கு ஆகியவை வைத்திருப்பார். அறையின் கதவைத் தாளிட்டுக் கொண்டு படிப்பதாகக் கூறிய அவர் அகமுகத் தியானத்தில் மூழ்கினார். அந்தப் பருவத்தில் முருகனையே வழிபடு கடவுளாகக் கொண்டிருந்தார்.

இராமலிங்கத்துக்கு சின்னஞ்சிறு பருவத்திலேயே இறைவனின் அருள் கிடைத்தது. ஒருமுறை திண்ணையில் படுத்திருந்த அவர் புரண்டு கீழே விழும் நிலையில் இறைவன் தன்னைத் தாங்கிக் கொண்டானென்று குறிப்பிடுகின்றார்.

மாடியறையில் 'தனி'த்திருந்த இராமலிங்கம் இறைவனை நேருக்கு நேர் காண வேண்டுமென்ற 'பசி'யோடு, அக மன 'விழி'ப்போடு இருந்தார். அப்பொழுது ஒரு நாள் கண்ணாடியில் ''சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும்'' விளங்க முருகன் காட்சியளிக்கக் கண்டார். இது இராமலிங்கத்தை மேலும் மேலும் ஆன்மீக நெறியில் செலுத்தத் துணை செய்தது.

**உள்ளொளி வெளிப்படல்:** இராமலிங்கருக்கு தனியாகக் கற்றுத் தர ஆசிரியர் இல்லை. ஆனால் இறையருளால் உள்ளொளி பெருகக்

கற்ருர். தனக்கு இறைவனே குருவாக இருந்த சிறப்பை சுட்டிக் காட்டும் வகையில்,

"கற்றதுநின் விடத்தேயின் கேட்டதுநின் னிடத்தே
கண்டதுநின் னிடத்தேஉட் கொண்டதுநின் னிடத்தே
பெற்றதுநின் னிடத்தேஇன் புற்றதுநின் னிடத்தே
பெரியதவம் புரிந்தேன்என் பெற்றிஅதி சயமே"[3]

என்று கூறுகின்ருர். இறையருளால் எல்லாம் உணர்கின்ற ஆற்றல் பெற்றிருந்தாலும், மொட்டுக்குள் மணம் அடங்கிக் கிடப்பதைப் போல, அவருடைய திறமை உலகிற்குத் தெரியாமல் மாடியறை-யிலேயே முடங்கிக் கிடந்தது.

மலரின் இதழ்விரிய மனம் பரவுதல் போல இராமலிங்கரின் ஆற்றல் வெளிப்படும் காலம் வந்தது. ஒருநாள் அண்ணன் சபாபதிப்-பிள்ளை உடல்நலமற்றிருந்தார். ஆதலால் அவரால் புராணப்-பிரசங்கத்திற்குச் செல்ல இயலவில்லை. சமயச் சொற்பொழிவுக்கு சோமு செட்டியார் என்பவர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். அந்த நிகழ்ச்சியை ஒத்திபோட இயலாத நிலையில் தனது தம்பியைச் சென்று சிறிது நேரமாவது சொற்பொழிவாற்றித் திரும்பும்படிக் கூறி அனுப்பி வைத்தார்.

சிறிபிள்ளையாக உருவத்தில் தோன்றிய இராமலிங்கரின் சொற்-பொழிவில் அரும்பெரும் கருத்துக்கள் வியக்கத்தக்க வகையில் வெளிப் பட்டன. அவரின் அருளாற்றலை, ஆன்மீகத் திறத்தை அந்தச் சொற் பொழிவின் மூலம் உலகம் புரிந்து கொண்டது. தொடர்ந்து இராம லிங்கரே வந்து சொற்பொழிவாற்ற வேண்டுமென சோமு செட்டியாரும் பிறரும் வேண்டிக் கொண்டனர். இதனுல் தம்பியின் சிறப்பை ஒரளவு உணர்ந்த சபாபதிப்பிள்ளை, ஒருநாள் தம்பியின் சொற்பொழிவை மறைந்து நின்று கேட்டார். அப்பொழுதுதான் தம்பியின் உள்ளொளி-யை அவரால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அதற்குப் பிறகு தம்பியைத் தனிவகையில் "இறைவன் பிள்ளை"யாகவே எண்ணி நடத்தினுர்.

இவரது இளமை வாழ்க்கை குறித்து, "முருகன் திருவருளால் இராமலிங்கருக்கு அன்பு இரக்கம் அமைதி நடுநிலை உண்மையறிவு

3 திருவருட்பா. 3044

முதலிய பண்புகள் வாய்த்தன; இவை உள்ளத்தில் பதிந்து வளரத் தாமும் வளர்ந்து வந்தார் இராமலிங்கர். முருக உபாசனை முதிர ஞானமும் முதிர்ந்து வந்தது. இவர் 'தன்னை மறந்து' தெளியும் பக்தி நிலையையும் அடைந்தார்; 'தன்னையறிந்து' தெளிவு பெறும் ஞான நிலையையும் அடைந்தார்''[4] என்று ஓர் ஆசிரியர் கூறுவது இங்கு சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

**ஆன்மீக வாழ்வின் அறிகுறிகள் :** இராமலிங்கர் இயல்பாகவே இறைவன்பால் அளவற்ற ஈடுபாடு கொண்டவராக இருந்தார். ''அடிகள் தமது பன்னிரண்டாம் அகவை முதல் முறையான ஞான வாழ்க்கையைத் தொடங்கினார்கள்''[5] என்று ஊரன் அடிகள் குறிப்பிடு கின்றார்.

இராமலிங்கரிடம் ஆன்மீகம் விளக்கமுற, விளக்கமுற உலகியல் பற்றுக் குறைந்து கொண்டே வந்தது. பெரும்பாலும் தனித்திருக்கவே விரும்பினார். எந்த உயிர் துன்பப்படுவதைக் கண்டாலும் அதற்காகத் தன்னுயிர் வருந்தக் கலங்குவார். அறுசுவை உணவுகளில் நாட்டம் தோன்றவில்லை. பசியாற்ற உண்டாரே தவிர 'ருசி'க்காக உண்ண-வில்லை. மண்ணாசையும் பொன்னாசையும் இல்லாத மாசற்ற மனத்தைப் பெற்றிருந்தார். அவரது எண்ணமெல்லாம் அருட்-செல்வத்தின் மீதே இருந்தது.

ஆன்மீக ஒளி பெற்று வளர்ந்து கொண்டிருந்த வேளையில் நாள்-தோறும் திருவொற்றியூர் செல்வார். அங்குக்கோவில் கொண்டிருந்த முருகனையும், தியாகப் பெருமானையும் வடிவுடையம்மையையும் வழி-பட்டு வந்தார். இக்காலத்தில் அவர் நிறையப் பாடல்களைப் பொழிந்து கொண்டிருந்தார்.

திருவொற்றியூரில் நடந்த ஒரு நிகழ்ச்சி அவருடைய ஆன்மீக வளர்ச்சியை விளக்குவதாக இருக்கின்றது. திருவொற்றியூர் தேரடித் தெருவில் ஆடை அணியாத ஒரு துறவி தங்கியிருந்தார். அவர் தெருவில் போகின்ற மக்களைப் பார்த்து, ''ஆடு போகிறது, மாடு போகிறது, நரி போகிறது, நாய் போகிறது, கழுதை போகிறது, பன்றி போகிறது,'' என்று கூறுவது வழக்கம். இராமலிங்கர் வழக்கமாகக் கோவிலுக்குத் தெற்கு மாடவீதி வழியாகச் செல்வார். ஒரு நாள்

4. *பி. ஸ்ரீ. இராமகிருஷ்ணரும் இராமலிங்கரும் ப. 21*

5. *இராமலிங்க அடிகள் வரலாறு ப. 41*

தேரடித் தெருவழியாகப் போனார். அவரைக் கண்ட ஆடையில்லாத துறவியார் ''இதோ ஓர் உத்தம மனிதன் போகின்றான்,'' என்று கூறித் தன்னுடைய ஆடையற்ற உடலைக் கையால் மூடிக் கொண்டார். இராமலிங்கர் அவரிடம் சென்று ஏதோ கூறிவிட்டுப் போனார். மறு-நாளிலிருந்து அந்தத் துறவி தேரடித் தெருவில் காணப்படவில்லை. அந்தத் துறவி ''உத்தம மனிதன்'' என்று இராமலிங்கரைப் போற்றியது அவரிடம் ஏற்பட்டிருந்த ஆன்மீக வளர்ச்சியைக் காட்டுகிறது.

இந்தக் காலகட்டத்தில் தான் இராமலிங்கர் ஒருமுறை திருவொற்றியூரிலிருந்து காலங்கடந்து வீடு திரும்பினார். வீட்டுத் திண்ணையில் பசியோடு படுத்திருந்தார். அப்பொழுது அவருடைய அண்ணியார் உருவில் வடிவுடையம்மையார் தோன்றி அமுதளித்துப் பசியைப் போக்கினார். சிறிது நேரங்கழித்து அண்ணியாரே வந்து உணவுண்ண அழைத்தபோது உண்மை விளங்கியது. இதனை அவர்,

''இருள்இரவில் ஒருமூலைத் திண்ணையில்நான் பசித்தே
இளைப்புடனே படுத்திருக்க எனைத்தேடி வந்தே
பொருள்உணவு கொடுத்துண்ணச் செய்வித்தே பசியைப்
போக்கிஅருள் புரிந்தஎன்றன் புண்ணியநற் றுணையே
மருள்இரவு நீக்கிஎல்லா வாழ்வும்எனக் கருளி
மணிமேடை நடுஇருக்க வைத்தஒரு மணியே
அருள்உணவும் அளித்தென்னை ஆட்கொண்ட சிவமே
அம்பலத்தென் அரசேஎன் அலங்கல் அணிந்தருளே''[6]

என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**உலகியல் சோதனையும் சாதனையும்:** உலகப் பற்றற்று ஓய்வின்றி முழுமுதல் பொருளில் இராமலிங்கர் நாட்டங் கொண்டிருந்ததைக் கண்ட அவருடைய அண்ணனும் உறவினரும் அவரை உலகியல் வாழ்வில் பற்றுக் கொள்ளச் செய்ய விரும்பினர். அதற்கு ஒரு வழியாக அவருக்குத் திருமணம் செய்து வைக்க முயன்றனர். இயல்பாகவே இல்வாழ்வில் பற்றின்றி துறவற ஈடுபாடு கொண்ட இராமலிங்கர் திருமணத்திற்கு உடன்படவில்லை. ஆனால் அவரது உற்றாரும் உறவினரும் அவர் திருமணம் செய்து கொண்டு உலகியல் வாழ்க்கை-யை நடத்த வேண்டுமென்று கட்டாயப் படுத்தினர். இறுதியில் 1850ஆம் ஆண்டில் அவருக்கு 27 வயதான நிலையில் அவர் உடன்பட

6. திருவருட்பா 4137

அவருடைய அக்கா உண்ணுமலையம்மையாரின் மகள் தனம்மாளைத் திருமணம் செய்து வைத்தனர்.

பெரியவர்கள் எண்ணியதைப் போல அவர் பெண்ணின்பத்தில் தன்னை மறக்கவில்லை. முதலிரவன்றே படுக்கையறையில் திருவாசகம் படித்துக் காலத்தைப் போக்கினுராம். எது அவருக்குச் சோதனையாக அமைந்ததோ அதனை வென்று அவர் சாதனையாக்கிக் கொண்டார். இதனைப்பற்றி ச. மு. கந்தசாமி பிள்ளை என்பவர், "உலகத்துள்ள மேதாவிகளின் சரித்திரங்களை ஆராய்ந்து அறிவார்க்கு இவ்வுண்மை புலனுகும். மேதாவிகள் அவ்வக்காலத்திய உலக நடைப் போக்குக் குட்பட்டவராய்ச் செல்லாது, தாம் அரிதிற்கொண்ட கொள்கையை நிறைவுறுத்துவதே ஆயுள்வரையு மமைந்த பெருந்தொழிலென்று துணிந்து ஒழுகுவர். சாதாரண மக்கள் கொள்ளும் இன்ப துன்பங்களிலே அவர்கள் மயங்காமல் பேரறிவுவண்ணமாய்க் காலங்கடந்தவர்களாய்த் திகழ்வர். அத்தகைய மேதாவிகளைச் சிற்றின ஆன்மாக்கள் தம் அறிவாற்றல் கொண்டு அளக்க ஆரம்பிப்பது எள்ளளவும் முடியாத காரியமாகும்,"[7] என்று கூறுகின்ருர்.

*சென்னையில் தமிழ்த் தொண்டு* : இராமலிங்கர் தனது முப்பத்தைந்தாம் ஆண்டுவரை சென்னையில் வாழ்ந்தார். இக்காலத்தில் இவர் சிறப்பாகத் தமிழ்த்தொண்டு செய்தார்.

தொழுவூர் வேலாயுத முதலியார் இவரது மாணவரானுர். அவரோடு சேர்ந்து வேறு சிலரும் அவரிடம் பாடங்கேட்டுப் பயனடைந்தனர். அறநூற்களைக் கற்றுக் கொடுத்ததோடு அமையாமல் ஒழிவிலொடுக்கம், தொண்ட மண்டல சதகம், சின்மயதீபிகை ஆகிய மூன்று நூற்களையும் சரிபார்த்துப் பதிப்பித்தார்.

பிறர் எழுதிய அருமையான நூற்களைப் பதிப்பித்தோடு, உரைநடை நூற்கள் போதுமான அளவில் இல்லாக் குறையைத் தீர்க்கும் வகையில் அவரே "மனுமுறை கண்ட வாசகம்" என்னும் நூலையும் படைத்தளித்தார்.

இராமலிங்கர் ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபாடு கொண்டிருந்தாலும் மக்களோடு கொண்டிருந்த தொடர்பை விட்டுவிடவில்லை. இது இவருடைய தனிச் சிறப்பாகும். எங்குச் சென்ருலும் தனது அன்பர்

7. இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் குறிப்புகள் ப. 9

குழாத்தோடு செல்வாராம். அவர்களது அறிவுக்கும் உணர்வுக்கும் அவருடைய கருத்துக்கள் அரிய உணவாக அமைந்தன.

**வெள்ளாடைத் துறவி :** ஆரவார மிகுந்த சென்னை வாழ்க்கை தனது ஆன்மீக வளர்ச்சிக்கு ஏற்றதில்லை என்ற எண்ணம் அடிகளுக்குத் தோன்றியது. ஒருவேளை குடும்பம் என்ற கூட்டினைவிட்டு 'விடுதலை' பெற்று வெளியேறவும் அவரது உள்ளம் விழைந்திருக்கலாம்.

1858–ஆம் ஆண்டில் 'தேட்டிலே மிகுந்த சென்னையை' விடுத்துப் புறப்பட்டார். காவியுடை உடுத்தவில்லை. வெண்ணிற ஆடையையே உடல் மறையக் கட்டிக்கொண்டு ஊர்வழிச் சென்றார். வழியில் கண்ட திருத்தலங்களிலெல்லாம் தெய்வங்களை வழிபட்டு பாடல்களும் இயற்றினார். தில்லைக்கு வந்து நடராஜரை வழிபட்டார். அவருடைய தலயாத்திரையில் அன்பர்கள் சிலரும் பங்கு பெற்றனர்.

**''திருவருட்பா'' வெளியாதல் :** தில்லை வந்த அடிகளார் வேங்கட-ரெட்டியார் என்பவரின் அழைப்பை ஏற்று கருங்குழியில் வந்து 1858 ஆம் ஆண்டில் தங்கினார். ஏறத்தாழ ஒன்பதாண்டுகள் கருங்குழியில் வேங்கடரெட்டியார் வீட்டிலமர்ந்து தனது ஆன்மீக வாழ்க்கையில் உயர்ந்து கொண்டிருந்தார்.

கருங்குழியில் வாழ்ந்த காலத்தில் திருவருட்பாவில் பெரும்பகுதி-யை அடிகள் எழுதினார். இங்குதான் தண்ணீரில் விளக்கெரிந்த அற்புதம் நிகழ்ந்தது. இடையிடையே தல யாத்திரையாகச் சென்று வந்தார். சிதம்பரம் அவரைக் கவர்ந்திழுத்தது. தில்லைக்கு அடிக்கடி சென்று வந்த நிலையில் அவரிடம் உள்ளார்ந்த வளர்ச்சி மேல் நிலையை எட்டியது. சமரச சுத்த சன்மார்க்கக் கோட்டை உருவாக்கி, வரை-யறுத்து உலகுக்கு வழங்கினார். அடிகளின் ஆன்மீக வளர்ச்சியின் வெளிப்பாடாக சன்மார்க்கக் கோட்பாடு அமைந்திருக்கின்றது. தான் உருவாக்கிய சன்மார்க்கத் தத்துவத்திற்குச் செயல்வடிவம் வழங்கும் நோக்கில் 1865 ஆம் ஆண்டில் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தைத் தோற்றுவித்தார்.

1867 ஆம் ஆண்டில் ''திருவருட்பா'' முதல் நான்கு திருமுறை-களோடு வெளிவந்தது. இந்நூலில் ஆசிரியர் பெயரை ''திருவருட் பிரகாச வள்ளலாரென்றும் சிதம்பரம் இராமலிங்கபிள்ளை'' என்று அச்சிட்டிருக்கின்றார்கள். இ ர ா ம லி ங் க சுவாமிகளை ''திருவருட்

பிரகாசர்'' ''வள்ளலார்'' என்று மக்கள் அழைத்தனர். மக்களிடம் அவருடைய பெயரும் புகழும் பரவத்தொடங்கின.

**மாற்றக்காலம்:** கருங்குழியில் வள்ளலார் தங்கியிருந்த காலத்தில் அவருடைய தனிப்பட்ட ஆன்மீக அகவாழ்க்கையிலும், பொதுமக்களோடு அவர் கொண்டிருந்த தொடர்புகளிலும் மகத்தான வியத்தகு மாற்றம் ஏற்பட்டது. வள்ளலாரின் தனிவாழ்க்கையில் அற்புதங்கள் பல நிகழ்ந்ததை அவருடைய அன்பர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். மற்றவர்கள் கண்ணில் படாமல் தனித்திருந்து அடிகளார் சில ஆன்மீகச் சோதனைகளைச் செய்திருக்கின்றாரென்றும் வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து அறிய முடிகின்றது.

சன்மார்க்க சங்கத்தை அமைப்பதற்கு முன்பே வள்ளலாரைப் பற்றிக் கேள்விப்பட்டு பலவகை மக்களும் அவரைப் பார்க்க வந்தனர். வந்தவர்களுக்கு அடிகளார் சில அறிவுரைகள் கூறியிருக்கின்றார். சிலரோடு விவாதங்கள் நடத்தியிருக்கின்றார். அவரைப் பார்க்க வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் அவருடைய கருத்துக்களைக் கேட்டு வாழ்க்கையில் பின்பற்ற வேண்டுமென்ற நோக்கத்தில் வரவில்லை. அவர் அற்புதங்கள் பல செய்யும் சித்தர் என்று கேள்விப்பட்டுப் பார்க்க வந்தவர்களும் தங்களது நோய்களைக் குணப்படுத்துவாரென்று தேடிவந்தவர்களும் மிகுதியாக இருந்தனர்.

எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம். ஓரன்பர் இரும்பினைப் பொன்னாக்கும் முயற்சியில் தனது செல்வத்தை எல்லாம் தொலைத்துக்கொண்டிருந்தார். அவர் வள்ளலாரைக் கண்டு இரும்பினைப் பொன்னாக்கிக் காட்டும்படி வேண்டினார். அடிகளாரும் தனது சித்தின் மூலம் இரும்பினைப் பொன்னாக்கிக் காட்டி, ''இது பயனற்ற பொருள்'' என்று கூறி, பொன்னைக் கிணற்றில் போட்டுவிட்டாராம். இதனைப் பண்டித ஆசலாம்பிகை அம்மையார்,

''செம்பினை இரும்பை ஈய மாமிவை செழும்பொ னாக்கும்
வம்பியில் வாதம் கற்கும் வகையினர்க் கெளிய தாகப்
பைம்பொனாய் மாற்றிக் காட்டி வீசுவர் பற்றி லாமல்
இம்பரின் ஆசை நீத்தார்க் கியல்வதிம் முறைகளென்றே''[8]

என்று கூறுகின்றார்.

8. இராமலிங்க சுவாமிகள் சரிதம் ப. 30

வள்ளலார் தனது ஆற்றலைக் காட்ட வேண்டுமென்ற நோக்கில் அற்புதங்கள் செய்யவில்லை. அற்புதங்கள் என்ற மாயைப் பேய் அவரைப் பிடிக்கவில்லை. அற்புதங்களை அளவுகோலாகக் கொண்டு ஆன்மீகத்தை அளக்க முயன்றவர்கள் இருந்தனர். ஆனால் வள்ளலாரோ சாதி, சமய, வருணாசிரம வேறுபாடுகளை எப்படிப் 'பிள்ளை விளையாட்டு' என்று கருதினாரோ, அப்படியே அற்புதங்களைச் செய்வதையும் கருதினார். ஆனால் உலகிற்கு அவரிடமிருந்த தெய்வீகத்தன்மையைக் காட்டுவதைப் போல அற்புதங்கள் நிகழ்ந்தன.

**சீவகாருண்யம்:** வள்ளலாரின் தத்துவத்தின் உயிர்நாடியாக இருப்பது சீவகாருண்யக் கோட்பாடு. எல்லா உயிர்களையும் எள்ளளவும் வேறுபாடு இல்லாமல் காண்கின்ற உயிரிரக்கத்தின் மூலமாகத்தான் இறைவனை அடைய முடியுமென்பதைக் கண்டு கொண்ட அடிகளார் அதனை உலகத்தாருக்கு எடுத்துரைத்தார். கொல்லாமையைப் பின்பற்றக் கூறிய வள்ளலார் வெற்றர்களாயிருக்கின்ற வறியவர்களின் பசியைப் போக்கும் அறத்தைக் கைக்கொள்ள வேண்டிய தேவையை வலியுறுத்தினார். பசிதவிர்த்தலைச் செயல்படுத்த 1867 ஆம் ஆண்டு மே திங்களில் வடலூரில் சத்திய தருமச்சாலையை நிறுவினார்.

வள்ளலார் பொதுமக்களிடம் நிலமும் பொருளும் நன்கொடை பெற்றே சத்திய தருமச்சாலையை அமைத்ததும், என்றும் அணையாத அடுப்பை நிறுவி பசிபோக்கும் அறச்செயல் தொடர்ந்து நடக்க ஆவன செய்ததும் அவருடைய அருட்செயலின் பெருமையைக் கூறுகின்றன. சாதி, சமயம் கடந்த நிலையில் ஏழை எளியவர்களுக்காக வள்ளலாரைப் போன்று தருமச்சாலையை வேறு எவரும் அமைத்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1867 ஆம் ஆண்டிலேயே வள்ளலார் பொதுக் கல்வியையும் ஆன்மீகக் கல்வியையும் பரப்பும் நோக்கில் சன்மார்க்க போதினி என்ற பள்ளியை அமைத்தார். அந்தப் பள்ளியில் சிறுவர் முதல் முதியோர் வரை பலரும் தமிழ், வடமொழி, ஆங்கிலம் முதலிய மூன்று மொழிகளையும் பயில வாய்ப்பு இருந்தது,

வடலூரில் உள்ளவர்களின் கல்விக்கண்ணைத் திறக்கப் பள்ளியையும் பசியோடு வருகின்றவர்களின் பசியைப் போக்கத் தருமசாலையையும் உருவாக்கிய வள்ளலார், வேறு இடங்களில் உள்ளவர்களும் சன்மார்க்கக் கோட்பாட்டையும் கருத்துக்களையும் அறிந்து பயனடைய வழி

வகுக்கும் முறையில் ''சன்மார்க்க விவேக விருத்தி'' என்ற பத்திரி-கையைத் தொடங்கி நடத்திவந்தார்.

வடலூரில் வாழ்ந்த காலத்தில் வள்ளலார் பல சித்துக்களை நிகழ்த்-தியதாகக் குறிப்புகள் காணப்பெறுகின்றன. வள்ளலார் சித்துக்கள் நிகழ்த்தும் செய்தி பரவவே, அவரைக் காண வருகின்ற கூட்டத்தின் எண்ணிக்கை வளர்ந்து கொண்டிருந்தது.

**போற்றுதலும் தூற்றுதலும்:** வள்ளலரைப் பலர் போற்றிப் புகழ்ந்து வழிபட்டு வாழ்த்துப் பெற முயன்ற காலத்தில் அவரைத் தூற்றுகின்ற சிலரும் இருந்தனர். சாதி, சமய வேறுபாடுகளை நீக்க முயன்றதும், உருவ வழிபாட்டை ஒதுக்கியதும், மரபுவழி வந்த கண்-மூடிப்பழக்க வழக்கங்களைச் சாடியதும் சில பழமைப்பிடிப்புள்ள சமய-வாதிகளுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் வள்ளலாரைத் தூற்றத் தொடங்கினுர்கள்.

வள்ளலாரின் நூலுக்குத் ''திருவருட்பா'' வெனப் பெயரிட்டதை மறுத்து ஆறுமுக நாவலர் நூல் எழுதினுர் பின்பு வள்ளலார் மீதே குற்றம் சாட்டி ஒரு வழக்குத் தொடர்த்தார். இந்த வழக்கின் விளைவாக ஆன்மீகச் செல்வரான வள்ளலார் நீதிமன்றத்திற்கு வரவேண்டிய-தாயிற்று. ஆனுல் வழக்கு நாளன்று, நீதி மன்றத்திற்குள் வள்ளலார் நுழைந்தவுடன் அவர்மீது வழக்குத் தொடுத்தவர் உட்பட எல்லோரும் எழுந்து நின்றனர். இதனைக் கண்ட நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார். இதனுல் வள்ளலாரை நோக்கி வந்த தூற்றுதலும் போற்றுதலாக மாறியதை உலகம் கண்டது.

**தவவாழ்க்கை:** 1867 ஆம் ஆண்டு முதல் வடலூரில் வாழ்ந்த அடிகளார் 1870 இல் மேட்டுக்குப்பம் சென்று சித்திவளாகத் திருமாளி-கையில் தங்கினுர். அங்கு யோக முறைகளில் தீவிரமாக ஈடுபட்டார்- அடிக்கடி மற்றவர்கள் கண்ணில் படாமல் தன்னை மறைத்துக் கொள்-கின்ற ஆற்றல் வள்ளலாருக்கு கைவரப்பெற்றிருந்தது. ஆன்மீகத் துறையில் விரைந்து விரைந்து அவர் படிகளைக் கடந்து மேலேறிச் சென்று கொண்டிருந்த காலம் இதுவாகும்.

1872 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் வள்ளலார் வடலூரில் சத்திய ஞான சபையை நிறுவினுர். சத்திய ஞானசபை வள்ளலாரின் இறைக்கோட்பாட்டை உலகிற்கு உணர்த்தத் தோற்றுவிக்கப்பெற்ற-தாகும். இறைவனை அருட்சோதியாகக் கண்ட வள்ளலார் அந்த

உண்மையை உலகிற்கு விளக்கும் வகையில் சத்திய ஞான சபையை அமைத்திருக்கின்றார்.

வள்ளலாரின் அருளுரைகள் மிகத் தீவிரமாக வெளிவரத் தொடங்கின. தன்னைச் சுற்றி வந்தவர்களுக்கு, அழியாத உண்மையை கூறுவதில் மிகவும் ஆர்வத்துடன் இருந்தார். உலகியலில் கொண்ட பற்றினை விடாமல் அடிகளாரை நாடி வந்த மக்களால் அவர் எதிர்பார்த்த அளவு ஆன்மீக வாழ்க்கையை நடத்த முடியவில்லை. இந்நிலை ஓரளவு வள்ளலாரைச் சோர்ந்துவிடச் செய்தாலும், அவர் தன்னைப் பொறுத்த வரை பல ஆன்மீகச் சாதனைகளைச் செய்பவராக விரைந்து வளர்ந்து கொண்டிருந்தார்.

*மரணமிலாப் பெருவாழ்வு:* ''சாகாதவனே சன்மார்க்கி,'' என்ற கருத்தோடு சன்மார்க்க நெறியை உலகிற்கு அளித்த வள்ளலார் அந் நிலையைப் பெறும் முயற்சியில் முழுமூச்சாக ஈடுபட்டார். எண்ணத்தில் திண்ணியராக விளங்கிய அவர் பல வகைகளில் இறைவனிடைய அருளைப்பெற முயன்றார். அவரது எண்ணங்கள் எல்லாம் நிறைவேறிக் கொண்டுவந்தன. இதனை அவர்,

''உயத்திடம் அறியா திறந்தவர் தமைஇவ்
வுலகிலே உயிர்பெற்று மீட்டும்
நயத்தொடு வருவித் திடும்ஒரு ஞான
நாட்டமும் கற்பகோ டியினும்
வயத்தொடு சாகா வரமும்என் தனக்கே
வழங்கிடப் பெற்றனன் மரண
பயத்தைவிட் டொழித்தேன் எனக்கிது போதும்
பண்ணிய தவம்பலித் ததுவே''[9]

என்று கூறுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

வள்ளலார் யோக முறைகளைப் பின்பற்றியதால் அவருடைய உடல் பொன்னுடலாகவும் ஒளியுடலாகவும் மாறியதை அவரோடு இருந்தவர்கள் குறித்திருக்கின்றனர். நிழற்படத்தில் கூட அவருடைய தோற்றம் பதியவில்லை என்று கூறுகின்றனர். வள்ளலாரின் சாதனைகளில் மிகப் பெரியதாக அமைவது அவர் தன்னை இறையொளியில் சேர்க்கும் வகையில் உடல் கரைய ஒளிவடிவில் நிலைத்து நிற்றலாகும்.

9. திருவருட்பா 4731

1874 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 30 ஆம் நாள் வள்ளலார் கருங்குழியிலுள்ள சித்திவிளாக மாளிகையில் தனியறையில் திருக்காப்பிட்டுக் கொண்டார். அந்த அறையைத் திறந்து பார்க்கக் கூடாதென்பது அடிகளின் விருப்பம். ஆனால் பின்னால் அந்த அறையைத் திறந்து பார்த்தபொழுது அறை வெறுமையாக இருப்பதைக் கண்டனர். வள்ளலார் சித்தி பெற்றதை உலகம் உணர்ந்தது.

நிறைவுரை: உலகம் பயனுற வாழ்ந்த வள்ளலாரின் கருத்துக்கள் தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் வழிகாட்டக் கூடியனவாகும். ம.பொ. சிவஞானம் ''வள்ளலாரின் பெருமை, அவர் ஊனுடலை ஞான ஒளியுடலாக மாற்றிக் கொண்டதிலேயும் இருக்கின்றது என்பதில் ஐயமில்லை. ஆனால், அதற்காக மட்டுமே நாம் அவரை வழிபடுகிறோமில்லை. ஒழுக்க சீலராக, உத்தமத் தவசியாக, பிறர் பட்டினி தீர்க்கும் வள்ளலாக, உயிர்கள் பால் இரக்கம் கொண்ட கருணையாளராக, கவிதை மழைபொழியும் கார்மேகமாக வாழ்ந்தாரே, அவற்றிற்காகவும் சேர்த்துத்தான் நாம் வள்ளலாரை வழிபடுகின்றோம். அதனால், அவரது மறைவை நம்பாதவர்களும் அவரை மனித குலத்தின் மாணிக்கமாக மதித்து வழிபட வேண்டும். அப்படியே வழிபட்டும் வருகிறார்கள். அந்த நம்பிக்கை என்றென்றும் நிலைத்திருப்பதாக''[10] என்று கருதுவதை இங்குக் குறிப்பிடலாம்.

வள்ளலாரின் ஆன்மீக வாழ்க்கையையும், அவர் வழங்கிய தத்துவக் கோட்பாடுகளையும் உணர்ந்து கொள்வது வையத்துள் வாழ்வாங்கு வாழத் துணை செய்யும். □

10. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு ப. 450

# 3. வள்ளலாரின் சாதனைகள்

எல்லா மக்களும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து ஆன்மலாபம் பெறும் பெருநோக்கோடு ஜீவகாருண்ய வழிநடந்து இறவாநிலை அடைய சமரச சுத்த சன்மார்க்க அறநெறியை வழங்கிய வள்ளலார் செய்த அரிய சாதனைகள் பலவாகும். அவர் தனக்கு நேர்ந்த சோதனை-களை எல்லாம் சாதனைகளாக்கிக் கொண்டு, ஆன்மீகத் துறையில் ஈடு இணையற்று உயர்ந்து இமயத்தின் தனிப்பெருஞ் சிகரமாகத் திகழ்ந்ததை அவரது வரலாறு காட்டுகின்றது. அவரது சாதனைகளை அறிந்து கொள்வதன் மூலம் ஆன்மீக உலகில் மனித குலம் பெற்றிருக்-கின்ற வெற்றியை நாம் தெரிந்து கொளளலாம்.

**இருவகைச் சாதனைகள் :** வள்ளலாரின் சாதனைகளை இருவகை-களாகப் பிரிக்கலாம். ஒருவகை உலகியல் சாதனைகள். இவற்றை விளக்க வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. இரண்டாம் வகை ஆன்-மீகச் சாதனைகள். இவற்றிற்குத் திருவருட்பாவும் இவரோடு வாழ்ந்-தவர்கள் எழுதி வைத்தவையும் சான்றுகளாக உள்ளன. இவற்றை உள்ளத்தில் ஆன்மீக ஈடுபாடும், வள்ளலாரின் தத்துவமாகிய வாழ்வில் நம்பிக்கையும் கொண்டவர்களால் தான் ஏற்றுக் கொள்ள முடியும்.

ஆன்மீகச் சாதனைகள் பரு உலகைச் சார்ந்து அமைவதில்லை. அவை அக உலகம் சார்ந்தவை. 'அகம்' வெறும் அளவு கோலுக்குள் அடங்குவதில்லை. இதனால் அதனைப் பற்றிய ஆராய்ச்சி மிகவும் நுண்ணியதாக அமைகின்றது. 'ஊனக் கண்ணால்' காண முடியாத-வற்றை 'ஞான கண்ணால் கண்டு தெளிய வேண்டும்' என்பதன் உண்மை-யினை உணர வேண்டும், 'தன்னை யறிதல்' என்றால் புற உடலை அறிவது மட்டுமல்ல ; உடலெங்கும் பரவி, உடலுக்குள்ளும் புறமும் இயக்கமாகி இருக்கின்ற ஒன்றையும் புரிந்து கொள்வதுதான். இதனை உணர்ந்து கொள்கின்றவர்களால் அதனை அப்படியே உரைக்க முடியவில்லை. எழுத்துருவமும், அதில் உள்ளடங்கிய அளவான பொருளும் கொண்ட சொற்களால் எல்லையற்ற மெய்ப்பொருளை எடுத்துரைக்க முடியாமல் போகலாம். இருந்தாலும் அவை ஓரளவு இனம்காட்டத் துணை செய்கின்றன.

வள்ளலாரின் ''திருவருட்பா'' அவரது உள்ளக் கண்ணுடியாகத் திகழ்கின்றது. அதில் அவரது சாதனைகளைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. நாம் சாதாரணமாகப் பயன்படுத்தும் சொற்கள் வள்ளலாரின் வாக்கில் வருகின்ற பொழுது ஒரு தனிப்பொருளை—அவர் பெற்ற தனியனுபவத்தை-எடுத்துரைக்கின்றன. 'திருவருட்பா' வின் உட்பொருளை எல்லாம் நம்மால் முழுமையாக உணர்ந்து கொள்ள முடியவில்லை. இதனால் வள்ளலாரின் சாதனைகளை எல்லாம் நம்மால் அப்படியப்படியே எடுத்தியம்ப இயலவில்லை. இயன்ற அளவு கூறுவதால், மலையின் பகுதியை மட்டும் பார்த்து, மலையைப் பற்றிய முழுமையான கண்ணோட்டத்தை உருவாக்கிக் கொள்வதைப் போல, வள்ளலாரின் சாதனைகளையும் அறிந்து கொள்ளலாம்.

**உலகியல் சாதனைகள் :** அறிவைப் பெற நாம் கல்வி பயில்கின்றோம். பதினைந்து அல்லது பதினேழு ஆண்டுகள் முறையாகப் பயின்று, தேர்வுகள் பல எழுதி, பட்டமோ உயர்பட்டமோ பெற்று 'படித்தவர்கள்' என்று பெருமை படுகின்றவர்களில் பெரும்பாலோரின் அறிவின் அளவையும், தன்மையையும் நாமறிவோம். உலகம் போற்றும் படித்தவர்கள் பலரின் குறையுடை அறிவு 'செக்கு மாடுகளின் அறிவு போல' அமைவதால் உலகம் படுகின்ற பாடு கொஞ்சமல்ல. இதனை உறுதிப்படுத்தச் சான்றுகள் தேவையில்லை.

வள்ளலார் முறைப்படி முயன்று ஒருவர் கற்றுத்தர இலக்கண, இலக்கியங்களைக் கற்கவில்லை. ஆனால் ''ஓதா துணர்ந்தார்'' என்பதற்குத் 'திருவருட்பா' சான்றாகும். இதனை,

''ஓதா துணர்ந்திட ஒளியளித் தெனக்கே
ஆதார மாகிய அருட்பெருஞ் சோதி'' என்றும்
''ஓதிஉணர்ந்த தவரெல்லாம் எனைக்கேட்க
எனைத்தான் ஓதாமே உணர்ந்து
உணர்வா முருவுறச் செய்யுறவே'' என்றும்

கூறியிருப்பதனைக் கொண்டு அறியலாம்.

வள்ளலார் தனது சமரச சுத்த சன்மார்க்க சத்திய பெருவிண்ணப்பத்தில், ''குமாரப் பருவத்தில் என்னைக் கல்வியிற் பயிற்றும் ஆசிரியரையின்றியே என்றரத்திற் பயின்றறிதற் கருமையாகிய கல்விப் பயிற்சியை எனதுள்ளத்தே யிருந்து பயிற்றுவித்தருளினீர்'' என்று கூறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

உள்ளம் புலன்களின் வழியே புற உலகில் மேய்ந்து திரிய, ஆசிரியரின் துணையோடு ஏட்டுக் கல்வியைப் பெறுகின்ற பொழுதும் கூட எதுவும் புரியாமலிருக்கின்றவர்கள் உள்ளனர். ஆனால் உள்ளொளி பெருக்கிக் கொண்டவர்களுக்கு உள்ளுணர்தல் (Intution) கை வருகின்றது. வள்ளலார் ஒருவரிடம் அமர்ந்து முறைப்படி நீண்ட காலம் பாடம் கேட்கவில்லை. ஆனால் தனித்திருந்து நிறையப் படித்திருக்கின்றார். அவர் எப்படி படித்த பொருளோடு ஒன்றிக் கலந்து உணர்ந்து படித்தாரென்பதற்கு "திருவாசகத்தை" அவர் எப்படிப் படித்தாரென்று கூறுகின்ற கீழ்க்கண்ட 'திருவருட்பா' பாடல் சான்றாக இருக்கின்றது :-

"வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"

(திருவருட்பா 3263)

வள்ளலார் தன்னைச் சார்ந்தவர்களுக்குத் தமிழ்கற்றுக் கொடுத்தார். தத்துவ ஐயங்களைத் தீர்க்கும் ஞானாசிரியராகத் திகழ்ந்தார். பழையனவற்றைப் புதுப்பித்துக் கொடுத்தார். உரையாசிரியராக உயர்ந்தார். நூற்களை எழுதி நூலாசிரியராக விளங்கினார். இவற்றை எல்லாம் அவர் எப்படிச் சாதித்தாரென்பதை எண்ணிப் பார்த்தால், அறிவுக்கு அப்பாற்பட்ட ஓர் ஆற்றல் இருப்பதும், அது வள்ளலாரிடம் வெளிப்பட்டதும் விளங்கும்.

சிறு வயதில் சோமு செட்டியார் வீட்டில் வள்ளலார் நிகழ்த்திய பெரியபுராணச் சொற்பொழிவு அவருடைய அகத்தில் மலர்ந்து மணம் பரப்பிய மெய்ஞ்ஞானத்தின் வெளிப்பாடாகும். கேட்டவர்களும் அவருடைய அண்ணனும் அவரை உணர வாய்ப்பளித்த சொற்பொழிவு அவரது உலகியல் சாதனைகளில் ஒன்றாகும்.

வள்ளலாருக்குப் பிள்ளை விளையாட்டுக்களில் மனம் செல்லவில்லை. கோவில்களிலேயே அவர் குடியிருக்க விரும்பினார். இறைவனைக் காணும் ஆவலிலும் முயற்சியிலும் பசித்திருந்தார்; விழித்திருந்தார்; தனித்திருந்தார். அவரை மற்றவர்கள் புரிந்து கொள்ளாததால் உலகப் பற்றுகளை ஒவ்வொன்றாக விலக்கிக் கொண்டு கட்டற்ற வாழ்க்கை வாழ விரும்பிய அவரை மண்ணுலகில் கட்டிப்போடத் திருமணம் செய்து வைத்தனர்.

விண்ணை நோக்கி உயர எண்ணுகின்ற மனிதனை மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆகிய மூன்று ஆசைகளும் மண்ணில் உழலச் செய்கின்றன. இந்த மூன்று ஆசைகளையும் வள்ளலார் வென்று விட்டதை அவர் தனது முதலிரவில் 'திருவாசகம்' படித்ததும், பின் இல்லத்தையே துறந்து, திருக்கோவில்களில் வழிபட்டு, பாடல்களை இயற்றிக் கொண்டே சிதம்பரம் வந்ததும் காட்டுகின்றன. கைப்பொருளொன்று மின்றி மெய்ப்பொருளைத் தேடிச் செல்வதை எல்லாரும் செய்துவிட முடியாது. மெய்யடியார்களால் மட்டுமே இதனைச் செய்ய இயலும்.

வள்ளலார் தான் கண்ட ஜீவகாருண்ய நெறிமுறையைச் செயல் படுத்த சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலையை நிறுவியதும், அருட்பெருஞ்சோதியாகிய ஆண்டவனை உருவகப்படுத்திக் காட்ட சத்திய ஞானசபையை அமைத்ததும், இறப்பொழிக்கும் சன்மார்க்க நெறியை எடுத்துரைக்க சமரச சுத்தசன்மார்க்க சத்திய சங்கத்தை உருவாக்கியதும் மாபெரும் சாதனைகளாகும்.

வள்ளலார் மக்கள் கல்வியில் ஈடுபாடு கொண்டிருந்தார். மக்களின் அறிவுக்கண்ணை முதலில் திறந்தால், அதன்வழி ஞானக்கண்ணைத் திறக்கலாமென்று எண்ணினுர் போலும். வள்ளலாரை நாடி வந்தவர் களில் பெரும்பாலானவர்கள் எழுத்தறிவில்லாத ஏழை, எளியவர்கள். அவர்களுக்கு எண்ணையும் எழுத்தையும் கற்பிக்கும் நோக்கில் ஒரு பள்ளியை அமைத்தார்.

வள்ளலார் நிறுவிய பள்ளியில் தமிழோடு வடமொழியும் கற்றுக் கொடுக்கப்பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். முறையாகத் திருக்குறள் வகுப்புகள் நடத்த வள்ளலார் ஏற்பாடு செய்திருந்தார். தமிழகத்திலேயே திருக்குறளின் கருத்துக்களை வகுப்புகள் நடத்திப் பரப்ப முதன் முறையாகத் தக்க நடவடிக்கை எடுத்தவர் வள்ளலார் என்பது இங்கு குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

இவை போன்று இன்னும் பல உலகியல் சாதனைகளை வள்ளலார் நிகழ்த்தியிருக்கின்ருர்.

**ஆன்மீகச் சாதனைகள் :** வள்ளலாரின் அக உலக ஆன்மீகச் சாதனைகளில் இளம்வயதில் நடைபெற்ற ஒன்று அவர் முருகனின் திரு உருவைக் கண்ணாடியில் கண்டதாகும். திருவிளக்கோடும், கண்ணாடியோடும் மாடியில் தனித்திருந்த வள்ளலார் கண்ணாடியைப் பார்ப்-

பதைத் தவமாகக் கொண்டிருந்தார். அதில் அவருக்கு முருகன் காட்சி தந்தான். அவர் கண்ட காட்சியை அவர்,

> ''சீர்கொண்ட தெய்வ வதனங்கள்
> ஆறும் திகழ்கடப்பந்
> தார்கொண்ட பன்னிரு தோள்களும்
> தாமரைத் தாள்களுமோர்
> கூர்கொண்ட வேலும் மயிலும்நற்
> கோழிக் கொடியுமருள்
> கார்கொண்ட வண்மைத் தணிகா
> சலமும்என் கண்ணுற்றதே'',

என்று பாடி மகிழ்கின்றார்.

வள்ளலார் இறைவனை முருகப் பெருமானின் அருள்தோற்றத்தில் கண்டதோடு மனநிறைவு கொள்ளவில்லை. அடியவர்கள் விரும்புகின்ற வடிவில் இறைவன் காட்சியளிப்பாரென்று கூறுவார்கள். அந்த வகையில் கண்ணாடியில் முருகனைக் கண்ட காட்சி அமைந்தது. ஆனால் வள்ளலாரோ முழு முதல் பொருளான இறைவனை உள்ள-படி உணர விரும்பினார். அவருடைய ஆன்மதாகம் இறைவனை ஒரு வடிவில் கண்டதால் மட்டும் தணியவில்லை. இதனால், அவருடைய ஆன்மீகப் பயணம் தொடர்ந்து கொண்டேயிருந்தது. வள்ளலார் வாழ்வில் சில அற்புதங்கள் நிகழ்ந்தன. பசித்திருந்த வேளையில் அண்ணியார் உருவில் வந்து உணவளித்தது, கருங்குழியில் தண்ணீர் விளக்கெரிந்தது போன்றவை இறைவன் அருளை அவர் முழுமையாகப் பெற்றிருந்ததைக் குறிக்கின்றன.

வள்ளலார் வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்களும், வள்ளலாரால் நடத்தப்பெற்ற அற்புதங்களும் மற்றவர்களுக்குப் பெருஞ் சாதனை-களாகத் தோன்றின. ஆனால் வள்ளலாரோ அவை எல்லாம் அருட்-பெருஞ்சோதி ஆண்டவனின் தனிப்பெருங் கருணையைக் காட்டுவன-வாகவே கருதினார். இதனால் 'தான்' என்ற 'அகந்தை' அவரிடம் எழவில்லை. மாறாக அவை அவரை இறைவனை நெருங்கிச் செல்லச் செய்தன.

வள்ளலார் மருத்துவராக இருந்து நோய்களைக் குணப்படுத்தி-யிருக்கின்றார். சித்தர்களின் செயல்கள் அவருக்குக் கைவந்ததை அவருடைய பக்தர்கள் கண்டு கூறியிருக்கின்றனர். அவர் செய்த

சித்துக்களும், அற்புதங்களும் சில உண்மைகளை உணர்த்தவும், தன்னைப் பின்பற்றுபவர்களின் துயர்களைத் துடைக்கவும் மேற்கொள்ளப் பட்டவையாகும். அவற்றை அவர் தொடர்ந்து செய்யாமல் ஒரு நிலையில் விட்டு, பின் மெய்ச்சோதனைகளில் ஈடுபட்டதை அவரது வாழ்க்கை வரலாறு கூறுகின்றது.

வள்ளலாரின் சாதனைகளின் உயர் சிகரமாக விளங்குவது இறவாப் பெருநிலை அடைய அவர் மேற்கெண்ட சோதனையும், பெற்ற சாதனையுமாகும்.

வள்ளலார் சுத்த சத்திய சன்மார்க்க சங்கத்தைத் தொடங்கிய பொழுதே ''சாகாதவனே சன்மார்க்கி'', ''என் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந்தானே'' என்று தெளிவாகக் கூறினர்.

''உருவம் பெற்றதெல்லாம் அழிந்துபடும்'' என்பது ஒரு தத்துவம். ''உடல் அழியும்; ஆன்மா அழியாதது'' என்ற கருத்து இந்து சமயத்தினர் நம்புகின்ற ஒன்று. எல்லோரும் அழியுமென்று கருதிய உடலையும் அழியாமல் மாற்றி விட முடியுமென்ற நம்பிக்கையின் அடிப்படையில் வள்ளலார் தன்னந்தனியாக யோகப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கின்றார்.

அறிவை மட்டும் நம்புகின்றவகள் மரணமிலாப் பெருவாழ்வை நம்ப முடியாமல் போகலாம். ஆனல் அறிவியல் உலகமும் எண்ணிப்பார்க்க வேண்டிய கருத்தாக உடலையும் மாற்ற முடியுமென்ற கருத்து இன்று வளர்ச்சி பெற்றிருக்கின்றது.

ஊனுடல் அழிவது இயற்கை விதி போலத் தோன்றுகின்றது. ஆனல் ஒரு கிறிஸ்தவப் பெரியாரின் உடல் இன்றும் அழியாமல் இருப்பதை ஓர் அதிசயமாக–இயற்கை விதி விலக்காகக் கூறுகின்றோம். இது எப்படி ஏற்பட்டது? ஒன்று கூறலாம். எல்லா உடல்களிலும் இல்லாத ஒன்று அவரது உடலில் ஊற்றெடுத்திருக்கின்றது. அது என்ன?

மற்றுமொரு உலகியல்சார் அறிவியல் நடவடிக்கையையும் எண்ணிப் பார்க்கலாம். சிலர் இரசாயனக் கலப்பில் உடலைவிட்டு அதனை அழியாமல் காக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். ஓரளவு வெற்றி பெறுகின்றனர். லெனின் உடலை இப்படிக் கட்டிக் காத்தனர். இந்த முறையில் உடலில் ஊற்றெடுக்காத ஒரு சக்தியை திராவகத்தின் மூலம் அளிக்க முயல்கின்றனர்.

இந்த இரண்டு எடுத்துக்காட்டுக்களிலும் உயிர்போன உடல் அழியாமல் இருப்பதனையும், அதனை அழியாமல் இருக்கச் செய்ததனையும் காண்கின்றோம். வள்ளலார் கூறுகின்ற நிலை இவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும்.

வள்ளலாரின் தத்துவப்படி, உடலிலிருந்து உள்ளம் விடுபடுவதற்கு முன்னால் கடுமையான யோகத்தின் மூலமும், சன்மார்க்க வாழ்வின் வழியாகவும் உடலை சுத்த தேகம், பிரணவதேகம், ஞானதேகம் என்கின்ற பொன்னுருவங்களாக மாற்ற முடியும். இதற்கு உயிர்க்குயிராக இருக்கின்ற ஒளி-அருட்பெருஞ்சோதி - நமது உடலில் மலர வேண்டும்.

இறையருளாகிய ஒளியே நமது உடலை மாற்றுமென்பதை மிக நுண்ணிய முறையில்,

*''தன்னையே எனக்குத் தந்துஅருள் ஒளியால்*
*என்னை வேதித்த என் தனி யன்பே''*

என்று வள்ளலார் கூறுகின்றார்.

இதில் ''என்னை வேதித்த'' என்னும் சொற்கள் சத்தியத்திற்குப் பாதை காட்டுகின்றன.

நம்மை வினைகள் தொடருமென்று இந்து சமயம் கூறுகின்றது. நம்மை நிழலாகத் தொடரும் வினைப்பயன்களின் கட்டறுக்க நாம் முயல வேண்டும். இந்த முயற்சியில் உடலும் உள்ளமும் இணைந்து ஈடுபடவேண்டும். இதனை,

*''நினைந்து நினைந்து உணர்ந்துணர்ந்து*
*நெகிழ்ந்து நெகிழ்ந்த தன்பே*
*நிறைந்து நிறைந் தூற்றெழுங்கண்ணீர் அதனாலுடம்பு*
*நனைந்து நனைந் தருளமுதே நன்னிதயே ஞான*
*நடத்தரசே யென்னுரிமை நாயகனே என்று*
*வனைந்து வனைந் தேத்தது நாம் வம்மினுல கியலீர்*
*மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்டீர்*
*புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்*
*பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருண மிதுவே''*

என்று வள்ளலார் கூறுகின்றார்.

வள்ளலாரின் உடலின் நிழல் தரையில் விழாமலும், உடல் தோற்றம் புகைப்படத்தில் அகப்படாமலும் இருந்ததை அவர் காலத்தில் வாழ்ந்தவர்கள் கூறுகின்றனர். இதனை வள்ளலாரே,

"திரைந்து நெகிழ்ந்த தோலுடம்புஞ்
செழும்பொன் னுடம்பாய்த் திகழ்ந்தேனே"

என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

மேலும்,

"அருட்ஜோதி யானேனென்று அறையப்பா முரசு
அருளாட்சி பெற்றேனென்று அறையப்பா முரசு"

என்றும் கூறியிருக்கின்றார்.

வள்ளலார் சித்திவிளாகத்தில் தனியறையில் திருக்காப்பிட்டுக் கொண்டு மறைந்தது விளக்க முடியாத - புரியாத – புதிராக இன்றும் இருக்கின்றது. ஆனால் வள்ளலாரின் வாழ்க்கையை முழுமையாக எண்ணிப்பார்க்கின்ற பொழுது நம்மால் இயலாததென்பதால் அது நடக்க முடியாததென்று கூற முடியாததென்ற உண்மையை உணர்கின்றோம். இந்த உணர்வு வருகின்ற பொழுது வள்ளலாரின் மகத்தான சாதனை விளங்குகின்றது.

நமது உடல் மண், விண், தீ, காற்று, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களாலானது. உடல் பஞ்ச பூதங்களிலிருந்து வந்தது போலவே, இறுதியில் பஞ்ச பூதங்களோடு சேர்கின்றது. இந்தச் சேர்க்கை பொதுவாக மக்களுக்கு இறப்பிற்குப்பின் ஏற்படுகின்றது. ஆன்மா பிரிந்தபின் அழிகின்ற நிலைக்கு உடல் செல்கின்றது. இதனை எரியிலிட்டோ, மண்ணிலிட்டோ பஞ்ச பூதங்களோடு சேரும்படிச்செய்கின்றனர். ஆனால் வள்ளலார் வாழ்க்கை ஆராய்ச்சி வேறுவகையில் சென்றது. ஆன்மா உடலைவிட்டுப் பிரியாத நிலையிலேயே, உடலை மாற்றிவிட முடியுமென்று கருதினார்,

வள்ளலார் ஊனுடலை மாற்ற இருவகையான சாதனைகளை மேற்கொண்டார். முதலாவதாக ஜீவகாருண்யம் என்கின்ற தத்துவத்தை வாழ்க்கைத் தத்துவமாகக் கடைப்பிடித்தார். மனத்துக்கண் மாசற்ற நிலையில் உள்ளொளி பெருக்க அது துணை செய்தது. இரண்டாவதாக, புற உடலில் மாற்றத்தை ஏற்படுத்தக் கடுமையான யோகமுறைகளைப்

பின்பற்றினர். அவருடைய அகத்திலும் புறத்திலும் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குகின்ற வகையில் எதிர்காலத்தில் அறிவியல் வளருமென்று எதிர்பார்க்கலாம்.

நிறைவுரை: வள்ளலாரின் சாதனைகள் ஆன்மீகத் துறையில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. அவர் காலத்திற்கு முன்னால் ஆன்மீக ஞானிகள் விரும்பியவை அவருடைய வாழ்வில் சித்தியடைந்திருக்கின்றன.

வள்ளலார் பெற்றவற்றைப் பெற விரும்புகின்றவர்கள் உள்ளத்தில் பற்றற்று, உறுதியோடு, உண்மையாக அவரின் வழியில் நடந்தால் பயனடைவார்கள். அவருடைய சாதனைகளை மற்றவர்களும் தங்களது வாழ்வில் காண்கின்ற காலம் வரும். □

# 4. நெஞ்சையள்ளும் திருவருட்பா.

" யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம், " என்ற எண்ணத்தை உயர்ந்த நெறியாளர்கள் கொண்டிருக்கின்றார்கள். ஆதலால்தான் அவர்கள் தங்களின் அக உணர்வுகளையும், எண்ணங்களையும் பட்டறிந்த உண்மைகளையும் வரிவடிவங்களாக்கி நமக்கு வழங்கியுள்ளார்கள். நமக்குக் கிடைத்திருக்கின்ற தமிழ்க்கருவூலங்களில் ஒன்று திருவருட்பா,

வள்ளலாரின் திருவுள்ளத்தை அப்படியே காட்டுகின்ற அருமையான கண்ணாடியாக திருவருட்பா விளங்குகின்றது. கற்றார்க்-கும் கல்லாதார்க்கும் களிப்பை நல்குகின்ற வகையில் அடிகளாரின் ஆன்மீக உயிரோட்டக் கருத்துக்களையெல்லாம் உள்ளடக்கிக் கொண்-டிருக்கும் ஒப்பற்ற நூல் திருவருட்பாவாகும்.

கவிப்பெருக்கு: பாட்டுத்திறத்தாலே இந்த வையத்தைப் பாலித்திட நினைத்த மகாகவி பாரதியார்,

> *"உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்*
> *வாக்கினிலே ஒளியுண் டாகும்"*[1]

என்று கூறுகின்றார். உள்ளத்தில் உண்மையொளி பெருக்கி வாழ்ந்த இராமலிங்க அடிகளார் நெஞ்சம் அருட்கடலாக விளங்கியது. அந்த அருட்கடலின் ஆழத்திலிருந்து வெளிவந்த விலைமதிப்பற்ற முத்துக்களின் தொகுப்பே திருவருட்பா.

அடிகளார் தமிழின் இலக்கிய, இலக்கணங்களை மரபுவழி முறைப்-படி கற்ற தமிழ்ப் புலவர் அல்லர். அவர் ஓதாதுணர்ந்தவர். இறையருளால் உள்ளொளி பெற்றவர். உலகம் வியக்கத்தக்க வகையில் அவரிடம் கவிதையூற்றுப் பெருக்கெடுத்தது. இமயமலையில் சிறிய அளவில் தோன்றுகின்ற கங்கை நதி ஓடுகின்றபொழுதே, பெருகி, வளர்ந்து, பேராற்றல் காட்டி, உலகோம்பும் பணி செய்து, கடலில் கலப்பதைப்

---

1. *பாரதியார் கவிதைகள் (சக்தி வெளியீடு 1957) ப. 47*

போல வள்ளலாரின் கவிப்பெருக்கும் சின்னஞ்சிறு பருவத்தில் தோன்றி, சிறந்து, இறைவனிடம் கலக்கின்றவரை பொங்கிக் கொண்டிருந்தது.

வள்ளலார் இந்த மண்ணுலகில் பிறர் காண வாழ்ந்த காலம் 51 ஆண்டுகள். இதில் 44 ஆண்டுகள் கவிமழை பொழிந்து கொண்டிருந்தார். இதனை ஊரன் அடிகள், ''பாடிப்பணிந்து வழிபட்டதன் பின்பே ஒன்பதாம் ஆண்டில் ஆட்கொள்ளப் பெற்றனராதலின் பாடத் தொடங்கிய காலம் ஏழு, எட்டாம் ஆண்டு எனக்கொள்ளலாம். ஏழு, எட்டு ஆண்டில் பாடத் தொடங்கிய பெருமான் ஐம்பத்தோராம் அகவையில் சித்திபெறும் வரை பாடிக் கொண்டிருந்தார்கள். எனவே அடிகளது அருள்வாழ்வில் நாற்பத்து நான்கு ஆண்டுக் காலத்தில் (51–7 = 44) பற்பல சமயங்களில் பல்வேறு இடங்களில் அருளிச் செய்யப் பெற்றனவே திருவருட்பாவாம்'',[2] என்று குறிப்பிடுகின்றார்.

**''திரு அருட்பா'' நூல் வடிவம் :** வள்ளலார் தனது அக அனுபவங்களை எல்லாம் கவிதைகளாக எழுதிய காலத்தில் அவை நூல் வடிவில் அச்சுருவம் பெற்று வருமென்று எண்ணவில்லை. தனது இறையனுபவங்களை அவர் நூலாக்கி வெளியிட விருப்பமின்றியே இருந்தார். ஆனால் அடிகளாரோடு பழகியவர்களும் அவரது அன்பர்களும் அவருடைய பாடல்களை நூலாக்கி உலகம் பயனுற வெளியிடுவதில் பேரார்வம் கொண்டிருந்தனர்.

1851 ஆம் ஆண்டுக்கு முன்பே வள்ளலாரின் ''தெய்வமணி மாலை'' ''கந்தர் சரணப்பத்து'' ஆகிய இரண்டு பாடல் பகுதிகளையும் தனிச் சிறுநூற்களாக வெளியிட்டார்கள். ஆனால் அடிகளின் பாடல்களை எல்லாம் தொகுத்துப்பெருநூலாக 1867-இல் முதன் முதலில் வெளியிட்டனர்.

வள்ளலாரின் பாடல்களை ஒரு சேர நூலாக்கி வெளியிட இறுக்கம் இரத்தின முதலியார் விரும்பினார். மிகவும் முயன்று வள்ளலாரிடமிருந்த பாக்களையும், நூலையும் வெளியிட ஒப்புதலும் பெற்றார். நூலைத் தொகுத்து, முறைப்படுத்தி, திருமுறைகளாக வகுத்து வெளியிட்ட பெருமை அடிகளாரின் தலை மாணவராகிய தொழுவூர் வேலாயுத முதலியாரைச் சேரும். முதலில் முதல் நான்கு திருமுறைகளே வெளியிடப்பெற்றன.

---

*2. திரு அருட்பா (ஊரன் அடிகள் பதிப்பு 1972) 4.42.*

நூலுக்கு, தெய்வத் திருவருளால் பாடப்பெற்ற பாடல்கள் என்ற பொருளில் (திரு+அருள்+பா) ''திருவருட்பா'' என்று பெயரிட்டவர் தொழுவூர் வேலாயுத முதலியார். வள்ளலாரிடம் வெறுப்பை வளர்த்துக் கொண்ட மடாதிபதிகளின் தூண்டுதலால் ஆறுமுக நாவலர் நூலுக்குத் ''திருவருட்பா'' என்று பெயரிட்டதை எதிர்த்து வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கே அடிகளாரையும் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தது. இந்நூலை ''மருட்பா'' என்று ஆறுமுக நாவலர் போன்றவர்கள் வாதிட்டாலும், நீதிமன்றம் ''அருட்பா'' என்று பெயரை ஏற்றுக் கொண்டது. தமிழ் கூறும் நல்லுலகமும், அருட்பாவைக் கற்றவர்களும், கேட்டவர்களும் நூலில் தெய்வமணம் கமழ்வதை உணர்ந்தார்கள்; உணர்ந்து கொண்டிருக்கின்றனர்கள்.

திருவருட்பா நூல் வடிவம் பெற்று வந்த வரலாற்றை சுருக்கமாக நா.மகாலிங்கம், ''ஞானக் கருவூலமான திருவருட்பாத் திருமுறைகளைத் தொகுக்கும் பணியினை 1860-ஆம் ஆண்டு முதலே உபய கலாநிதிப் பெரும்புலவரான தொழுவூரார் தொடங்கினர். 'பெரியன் என்று சிறக்கவும் ஆசையில்லை' என்ற பெருஞானத் திருநிலையில் இருந்த வள்ளற் பெருமான் நூல் வெளியீட்டுக்குத் தொடக்கத்தே இசைவதாயில்லை. எனினும் அன்பர்களின் ஞானவேட்கை தீர 1851-ஆம் ஆண்டிற்கு முன்பே தெய்வமணி மாலையும், கந்தர் சரணப் பத்தும் வெளியிடப்பட்டுள்ளன. முதல் நான்கு திருமுறை 1867-ஆம் ஆண்டிலும், ஐந்தாம் திருமுறை 1880 ஆம் ஆண்டிலும், ஆறும் திருமுறை 1885-ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாறாக வந்த பதிப்புகளில் புதுக்கோட்டை இராமச்சந்திரபுரம் வள்ளல் திரு. தீ. நாச்சியப்ப செட்டியாரின் திருமகனாராகிய திரு. தீ. நா. முத்தையா செட்டியார் ஆறு திருமுறைகளையும் ஒரு பெரு நூலாக 1924-ஆம் ஆண்டில் வனப்புற அச்சிட்டதோடு, ஆன்மநேய அன்பர்கட்கு இலவசமாக வழங்கினர். திரு. செட்டியாரின் 'ஞான தானத்தைச்' சன்மார்க்க உலகம் என்றும் மறவாது. பின்னர் சென்னை சுத்த சன்மார்க்க சங்கத்தார் திருவருட்பாவினை இரு பகுதிகளாக வெளியிட்டு வரலாயினர். இப்பதிப்புகள் எல்லாவற்றிலும் தம் 'நுண்மான் நுழை புலன்' பொலியப் பிழையில்லா வகையில் தனித்தனி நூல்களாகப் பன்னிரண்டு நூல் வடிவில் தம் பதிப்பில் வெளியிட்ட ஆன்ம நேய அறிஞர் திரு. ஆ. பாலகிருஷ்ண பிள்ளை அவர்களை நினைந்து போற்றுவது நம் தலையாய கடமையாகும்,''[3] என்று கூறியுள்ளார்.

3. *திருஅருட்பா (ஊரன் அடிகள் பதிப்பு 1972) அணிந்துரை--ப. 17--18*

1972-ஆம் ஆண்டில் சன்மார்க்க தேசிகன் என்னும் ஊரன் அடிகள் திருவருட்பாவை முழுமையாக அச்சிட்டு வெளியிட்டிருக்கின்ருர். இந்நூலில் ஊரன் அடிகள் திருமுறைப்பகுப்பு முறையில் சிறிது மாற்றம் செய்திருக்கின்ருர். பாக்களைச் சந்தி பிரித்தும், பாட பேதங்களைச் சுட்டிக் காட்டியும் அரும்பொருளகராதி, பாட்டு முதற்குறிப்பு அகராதி, பாடல்கள் வரிசை எண் ஆகியவை சேர்த்தும் வெளியிட்டிருக்கின்ருர். ஆராய்ச்சியாளர்களுக்கு மிகவும் பயன்படக்கூடிய பதிப்பாகும். இவருடைய பதிப்பில் 5818 பாடல்கள் உள்ளன.

**ஆன்மாவின் யாத்திரை :** திருவருட்பாவின் பாடல்களில் மூழ்கித் திளைப்பவர்கள், அதில் ஒர் ஆன்மாவின் யாத்திரையைத் துல்லியமாக உணர்வார்கள். வள்ளலாரை இளமையிலே இறைவன் ஆட்கொண்டான். இருந்தாலும் அவர், உலகத்து இன்ப துன்பங்களிலும் மயக்கங்களிலும், மாயைகளிலும் அலைந்து திரிகின்ற கோடான கோடி ஆன்மாக்களின் சார்பாளராக நின்று உள்ளம் கசிந்துருகி இறைவனிடம் வேண்டுகின்ருர். எடுத்துக்காட்டாக, வள்ளலார்,

*''இன்புடையார் நின் அன்பர் எல்லாம் நின்சீர்*
*இசைக்கின்ருர் நான்ஒருவன் ஏழை இங்கே*
*வன்புடையார் தமைக்கூடி அவமே நச்சு*
*மாமரம்போல் நிற்கின்றேன் வஞ்ச வாழ்க்கைத்*
*துன்புடையார் அனைவர்க்கும் தலைமை பூண்டேன்*
*தூய்மை என்ப தறிந்திலேன் சூழ்ந்தோர்க்கெல்லாம்*
*அன்புடையாய் எனைஉடையாய் விடையாய் வீணே*
*அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ''*[4]

என்று பாடுவதைச் சுட்டிக் காட்டலாம்.

அருட்பெருஞ்சோதியாக இருக்கின்ற ஆண்டவனை இனங்கண்டு உயர்ந்து, உயர்ந்து செல்கின்ற ஆன்மாவின் உள்ளார்ந்த விழைவைப் பல பாடல்கள் கோடிட்டுக் காட்டுகின்றன. சான்ருக ''வெண்ணிலாக் கண்ணி''யைக் குறிப்பிடலாம், அதில்,

*''தன்னையறிந் தின்பமுற வெண்ணிலா வே—ஒரு*
*தந்திரம் நீ சொல்லவேண்டும் வெண்ணிலா வே''*
*முப்பொருளு மொன்றென்பார் வெண்ணிலா வே—அந்த*
*மூன்றுமொன்ருய் முடிந்ததென்ன வெண்ணிலா வே.*

---

*4. திருவருட்பா 603.*

*நானதுவாய் நிற்கும்வண்ணம் வெண்ணிலா வே—ஒரு*
*ஞானநெறி சொல்லுகண்டாய் வெண்ணிலாவே.*
*ஞானமய மாய்விளங்கும் வெண்ணிலா வே—என்னை*
*நானறியச் சொல்லுகண்டாய் வெண்ணிலா வே"*

என்னும் வரிகளில் காணும் தத்துவ உண்மை உணரத்தக்கதாகும்.

ஆன்மா எத்தகைய நிலையில் தனது இலக்கினை அடைகின்றதென்பதை,

*"நினைந்துநினைந் துணர்ந்து ணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந்*
*தன்பே*
*நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண் ணீரதனல் உடம்பு*
*நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான*
*நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று*
*வனைந்துவனைந் தேத்துதும்நாம் வம்மின்உல கியலீர்*
*மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்*
*புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்*
*பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே",*

என்ற பாடல் விளக்குகின்றது. இதுபோல பல நிலைப் பாடல்கள் திருஅருட்பாவெங்கும் நிறைந்திருக்கின்றன.

**இருவகைப் பாடல்கள் :** திருவருட்பாவில் இருக்கின்ற பாடல்களைப் பேராசிரியர் அ.சீனிவாசராகவன் இருவகைகளாகப் பிரிக்கின்றார். அவர், "அருட்பாவில் பொதுவாக இரண்டு வகையான பாடல்கள் உள்ளன. தத்துவக் கருத்துக்களை அப்படியே கருத்துக்களாகவோ அல்லது உருவத்தில் அமைத்தோ வெளியிடுகின்ற பாடல்கள் ஒருவகை. கருத்துச் செறிவும் தெளிவுமே இவற்றின் முக்கிய நோக்கம். இவற்றில் பொருளுக்குரிய பரிபாஷைச் சொற்கள் மிகுதியாக வழங்கப் பெறும். ............... மற்றொரு வகை, தத்துவத்தை அனுபவமாகத் தருகின்ற பாடல்களால் ஆனது. அனுபவத்தைச் சொல்லில் வடித்து, அதன் மூலமாகத் தத்துவத்தை உணர்த்துகின்ற பாடல்கள் என்றும் இவற்றைக் கொள்ளலாம். இவையே வள்ளலார் என்ற தனி உயிரின் துடிப்பைத் தாங்கி வருகின்றன,"[5] என்று கூறுகின்றார்.

முதல்வகையான தத்துவக்கருத்துக்களை அப்படியே தருகின்ற பாடல்கள் மிகவும் ஆழமானவை. தக்க உரையின்றி அவற்றைப் புரிந்து கொள்வது பலருக்குக் கடினமாகும். எடுத்துக்காட்டாக,

---

5. ஒரு நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை--ப. 25--26

"ஆயவாய நேயரேய மாயஞாய வாதியே
தூயவாய காயதேய தோயமேய ஜோதியே
ஆதவாத வேதகீத வாதவாத வாதியே
சூதவாத பாதநாத சூதஜாத ஜோதியே"[6]

என்ற வரிகளைச் சுட்டிக் காட்டலாம்.

இரண்டாவது வகையான தத்துவத்தை அனுபவமாகத் தருகின்ற பாடல்களாகவே பெரும்பாலானவை உள்ளன. வள்ளலார் வாழ்க்கையே ஒரு தத்துவமாக வளர்ச்சி பெற்றதால், அவர் பெற்ற அனுபவங்கள் எல்லாம் அந்தத் தத்துவத்தை விளக்கக் கூடியனவாக இருக்கின்றன. அவற்றை எல்லாம் அழகிய சொற்கோலமாகத் தீட்டிக் காட்டுகின்ற அடிகளின் கைவண்ணத்தை நூலெங்கும் காண முடிகின்றது. இதனை,

*"களித்தென துடம்பில் புகுந்தனை எனது*
*கருத்திலே அமர்ந்தனை கனிந்தே*
*தெளிந்தஎன் அறிவில் விளங்கினை உயிரில்*
*சிறப்பினுல் கலந்தனை உள்ளம்*
*தளிர்த்திடச் சாகா வரங்கொடுத் தென்றும்*
*தடைபடாச் சித்திகள் எல்லாம்*
*அளித்தனை எனக்கே நின்பெருங் கருணை*
*அடியன்மேல் வைத்தவா றென்ன",*

என்பது போன்ற பாடல்களின் மூலம் அறியலாம்.

**இனிய பாடல்கள்:** திருவருட்பாவிலுள்ள பாடல்களின் தனிப்பெருஞ் சிறப்பைப் பலரும் போற்றிக் கூறியிருக்கின்றனர். அ. லெ. நடராசன், "திருவருட்பாப் பாடல்கள் மிகமிக எளிமையானவை. பண்டிதர்களும், பாமரர்களும் பாடத்தக்க பாவினங்களால் அமைந்தவை. கும்மி, ஆனந்தக் களிப்பு, நாமாவளி, கண்ணி, கீர்த்தனை, தாண்டகம் முதலிய விருத்தப்பாக்கள் ஆகிய பல்வகையான பாவினங்களில் அடிகள் பாடல்கள் இயற்றியுள்ளார்கள். அதனுல் இந்தப் பாடல்கள் பண்டித ரஞ்சகமாகவும் பாமர ரஞ்சமாகவும் பொது மக்களிடையே எளிதாகப் பரவின. இந்த வாய்ப்பு தேவாரம், திருவாசகம் போன்றவற்றுக்கு இல்லை எனலாம்"[7] என்று கூறுகின்றுர்.

---

*6. திரு அருட்பா 5185, 5186*

*7. வள்ளலார் வாழ்வும் வாக்கும் ப. 151.*

வள்ளலாரின் பாடலின் இனிமையைச் சுட்டிக் காட்டும் வகையில்,

"கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தில் உறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல் அணிந் தருளே"

என்ற பாடலைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

திருவருட்பாவின் சிறப்பைப் பற்றி, "புனிதர் இராமலிங்கத்தின் பாடல்களில் ஆன்மாவைத் தொடுகின்ற, உள்ளத்திற்கு உயிரூட்டு-கின்ற தன்மையைக் காணலாம். படிக்கின்றவர், இதுவரை அறிந்-திராத, உண்மையான ஆன்மீக புதிய வாழ்நிலைக்குச் செல்வார்",[8] என்று டாக்டர் மகாதேவன் கூறுகின்றார். திருவருட்பாவின் இந்தத் தனியாற்றலைத் தன்னை மறந்து பாடல்களில் தோய்ந்துவிடக் கூடிய-வர்கள் உணர்வார்கள்.

"மெய்யருள் வியப்பு" போன்ற பாடல்களைப் படிப்பவர்கள் வள்ளலார் கண்ட இறையனுபவத்தின் தன்மையை அறிந்து மகிழ்-வார்கள். இறைவனைப் பார்த்து அடிகளார்,

"எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம்
என்ன பொருத்தமோ
இந்தப் பொருத்தம் உலகில் பிறருக்
கெய்தும் பொருத்தமோ"

என்று கேட்டு தொடர்ந்து கூறும் அனுபவங்கள் உள்ளத்தைத் தொடக் கூடியவை.

*தனிச் சிறப்பு:* பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழுக்கு ஏற்றம் செய்யும் வகையில் தோன்றிய நூல் திருவருட்பா. அந்தக் காலத்தில் தமிழ்மொழிக்கு இனிமையும் எளிமையும் சேர்க்க வள்ளலாரின் பாடல்கள் பெரிதும் பயன்பட்டன. மக்களிடம் அன்பு நெறியை வளர்க்கும் ஆற்றல் மிக்க கருவியாகத் திருவருட்பா திகழ்கின்றது.

8. Dr. T. M. P. Mahadevan, Foreword to the book Thiru Arut Pa p. IX.

வள்ளலார் திருவருட்பாவில் அவர் காலத்திற்கு முன்பு வாழ்ந்த திருவள்ளுவர் போன்ற அறநெறியாளர்களின் சொற்களேயும் கருத்துக்களேயும் பயன்படுத்துகின்ருர். மாணிக்கவாசகர் போன்ற பக்திநெறி நின்றவர்களின் சொல்லாட்சியையும், கருத்தாழத்தையும் வள்ளலாரிடம் காணலாம். ஆனுல் அவற்ருேடு கூட அவர் தனது தத்துவக் கருத்துக்களே வலியுறுத்திச் சொல்லிச் செல்லுகின்ற அழகு அருமையானதாகும்.

வள்ளலார் திருவருட்பாவை தானே எழுதியதாகக் கூறவில்லே. இறைவன் அருளால் தோன்றியதென்பதை

*''நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன் சொல் வார்த்தையன்றி*
*நானுரைக்கும் வார்த்தை யன்று''*

என்று அழுத்தந்திருத்தமாகக் கூறுகின்ருர்.

திருவருட்பாவின் மொத்த மதிப்பீடாக, ''இது பத்தொன்பதாவது நூற்ருண்டுத் தமிழனுக்கு எஞ்சி இருந்த பரம்பரைச் சொத்தான கடவுள் நாட்டத்தை வளர்த்தது. அவனுடைய பழைமையில் அவனுக்குப் புதிய நம்பிக்கையைப் பெருமளவு தோற்றுவித்தது. அன்றைய சமுதாயக் குறைகளே நீக்குவதே அவனுடைய முதற் கடமை என்று எதிர்காலத்தை நோக்கி அவனே அழைத்துச் சென்றது. என்றுமுள தென் தமிழின் ஆற்றல், தன்னே அவ்வப்போது புதுப்பித்துக் கொள்ளும் என்பதற்குச் சான்று பகர்வதுபோல், வாடி வந்த தமிழிலக்கியத் தருவிலே மூண்டு புத்துயிரின் ஒளித்தளிராகப் பொலிந்தது''[9] என்று பேராசிரியர் அ. சீனிவாசராகவன் கூறுகின்ருர்.

திருவருட்பா தமிழின் மறுமலர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தது. வாழ்க்கைக்குப் பயன்படக் கூடிய புதிய புரட்சிகரமான கருத்துக்கள் திருவருட்பாவில் காணப்படுகின்றன. அவை தமிழ்க்கவிஞர்களின் மனத்தில் மாறுதலே ஏற்படுத்தக் கூடியனவாக இருந்தன.

திருவருட்பாவில் புதிய சொல்லாட்சியைக் காணலாம். பாவினங்களே சந்தத்தோடு வள்ளலார் கையாண்ட முறை நல்ல விளேவுகளே ஏற்படுத்தியது.

---

9. இந்தியாவில் தற்கால சமய இயக்கங்கள் - ப. 104

''இந் நூற்ருண்டில் பெரும் புரட்சிப் பாவலர்களாய்த் திகழ்ந்த பாரதியாருக்கும் பாரதிதாசனுக்கும் கடந்த நூற்ருண்டில் முன்னேடியாக இருந்தவர் வள்ளலார் என்று துணிந்து கூறலாம்''[10] என்று தி. தயானந்தன் பிரான்சிஸ் குறிப்பிடுகின்ருர். இருபதாம் நூற்ருண்டுக் கவிஞர்களிடம் வள்ளலாரின் இலக்கியச் செல்வாக்கு இருப்பதனைக் காணலாம்.

அடிகளார் தாம் திருவாசகத்தை எப்படிப் படித்து, எத்தகைய இன்பத்தைப் பெற்ருர் என்பதை,

*''வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை*
*நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே*
*தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்*
*ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே''*

என்று அழகுபடக் கூறுகின்ருர். இது திருவருட்பாவில் கலந்து நின்று பாடுகின்றவர்களுக்கும் பொருந்தும். ☐

---

*10. திருவருட்பா - 3263*

# 5. மனுமுறை கண்ட வாசகம்

வள்ளலார் தனி உரைநடை நூற்களாக எழுதியவற்றுள் ஒன்று ''மனுமுறை கண்ட வாசகம்''. இடையில் பாடல் பகுதி இருந்த போதிலும் இது ஒரு சிறந்த உரைநடை நூலாகவே அமைந்திருக்கின்றது. 1854 ஆம் ஆண்டில் அடிகள் இந்நூலை எழுதினர்.

**நோக்கம்:** பத்தொன்பதாம் நூற்றுண்டில் சிறந்த உரைநடை நூற்கள் வெளிவரவில்லை. பழைய நூற்களெல்லாம் பெரும்பாலும் செய்யுள்களாகவே இருந்தன. ஆங்கிலக் கல்வி நமது நாட்டில் பரவத் தொடங்கியபொழுது தமிழைக் கற்றுக் கொடுத்த முறையிலும் மாற்றம் ஏற்பட்டது. தமிழ்க் கல்வியில் உரைநடைக்கு உரிய இடத்தை வழங்கப் புலவர்கள் விரும்பினர். இந்நிலையில் தக்க உரைநடை நூல் இல்லாத குறையை நீக்கும் வகையில், அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி வள்ளலார் இந்நூலை இயற்றி அளித்தாரென்று வரலாறு கூறுகின்றது.

வள்ளலார் நூலுக்குக் கருப்பொருளாக மனுநீதிச் சோழனின் கதையைத் தெரிந்தெடுத்ததற்கும் ஓர் உள்ளார்ந்த நோக்கமிருந்ததை ஊகித்து உணரலாம். மக்களிடம் மனித உயிரையும் பிற உயிர்களையும் ஒன்றெனக் கருதுகின்ற மனப்பக்குவம் வரவேண்டுமென்ற பெரும் விழைவு அடிகளார்க்கு இருந்தது. தான் பெற்ற மகனையும், பசுவின் கன்றையும் சரிநிகர் சமமாகக் கருதிய மன்னனின் வரலாற்றைக் கூறுவதின் மூலம் உலகிற்கு 'சீவகாருண்யப்' பேருண்மையை விளக்க இயலுவதைக் காணலாம்.

வள்ளலார் தான் கண்ட தத்துவத்தின் சாரமாக வளர்ச்சி பெற்ற நிலையில்,

> ''எத்துணையும் பேதமுறு தெவ்வுயிரும்
> தம்உயிர்போல் எண்ணி உள்ளே
> ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றுர்
> யாவர்அவர் உளந்தான் சுத்த

*சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்*
*இடமென நான் தெரிந்தேன் அந்த*
*வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்*
*சிந்தைமிக விழைந்த தாலோ'*[1]

என்று கூறும் பாடலுக்கு இலக்கியமாக 'மனுமுறை கண்ட வாசகம்'' நூல் அமைந்திருக்கின்றது.

**வழி நூல் :** மனுமுறை கண்ட வாசகம், பெரிய புராணத்திலுள்ள மனு நீதி கண்ட புராணத்தை ஒட்டி எழுந்த வழி நூலாகும். மனுநீதிச் சோழன் கதை தமிழகத்து மக்களுக்குப் புதியதல்ல. அந்தக் கதையை அருமையான உரைநடை நூலாக்கி மக்களுக்கு விரிந்த அளவில் பயன்படும் வகையில் வள்ளலார் தமிழ்த்தொண்டு செய்திருக்கின்றார்.

பெரிய புராணத்திலிருக்கும் மூலக்கதையில் சிற்சில மாற்றங்களை வள்ளலார் செய்திருக்கின்றார். அந்த மாற்றங்கள் எல்லாம் நூலுக்கு மேலும் கருத்தாலும், உரைநடை வளத்தாலும் அழகு சேர்க்கின்றன எடுத்துக் காட்டாக ஒன்றைக் கூறலாம். மூலநூலில் மனுநீதிச் சோழனின் மகன் வீதி விடங்கன் உலாவப் போவதாக இருக்கிறது. ஆனால் வள்ளலார் அவன் சிவ தரிசனத்திற்குப் போவதாகக் குறிப்பிட்டுள்ளார். பக்தியில் சிறந்த வீதி விடங்கனுக்குச் சோதனையாக அவனது தேர்க்காலில் அகப்பட்டு பசுவின் கன்று இறக்கின்றது. அவன் அதை எண்ணிப் புலம்புகின்ற பொழுது, ''நன்றி அறியாத பாவி இவன், நம்மைத் தரிசிக்கத் தக்கவனல்ல னென்று திருவுளங் கொண்டு தானோ என்னை இந்தப்பழிக்கு ஆளாக்கியது. தேவரீரைத் தரிசனஞ் செய்ய எண்ணி வந்த அடியேன் கால் வருந்த நடந்து பய–பக்தியுடனே வந்து தரிசிக்க வேண்டும்; அவ்வாறு செய்யாமல், செல்வச் செருக்கினால் தேரிலேறிக் கொண்டு ஆடம்பரங்களுடன் பக்தியில்லாது பகல் வேஷக்காரன் போல் டம்ப வேஷங் காட்டி வந்த அன்பில்லாத பாவியாகிய என் பிழையைக் குறித்து நோவதல்லது, என் பெருமானிடத்துக் குறை சொல்லத்தகுமோ''?[2] என்று கூறுவதன் ஆன்மீக உண்மை உலகிற்குப் படிப்பினையாக இருக்கின்றது.

---

1. திருவருட்பா - 5297
2. மனுமுறைகண்ட வாசகம் மணி. திருநாவுக்கரசு முதலியார் பதிப்பித்தது 1926 ப. 27.

கதை : ''மனுமுறை கண்ட வாசகம்'' கூறும் கதை தமிழகத்துக்கு நன்ருகத் தெரிந்த ஒன்று. திருவாரூரில் சிறந்த அரசாட்சி செய்து வந்த இறைப்பற்றுள்ள மனுச்சோழ சக்கரவர்த்தி மகப்பேறில்லாமல் மனம் வருந்திக் கொண்டிருந்தார். பிள்ளைப் பேற்றைப் பெறுவதற்காக அறுபதாண்டுகள் அரிய பல அறங்களைச் செய்து இறைவனை வழிபட்டு வந்தார். அவர் செய்த வழிபாட்டிற்கு இறங்கிய தியாகராஜப் பெருமான் திருவருளால் அவருக்கு ஒரு மகன் பிறந்தான். அந்தத் திருநிறைச் செல்வனுக்கு விடங்கனெனப்பெயர் சூட்டினுர்கள்.

வீதி விடங்கன் கல்வி கேள்விகளில் சிறந்து, நல்ல அறிவாற்றல் மிக்க இளைஞனாக வளர்ந்தான். ஒரு நாள் தந்தையிடம் ஒப்புதல் பெற்று. தாயிடம் விடை பெற்றுக் கொண்டு குலத் தெய்வமான தியாகராஜப்பெருமானை வழி படத்தேரேறிச்சென்ருன். அவன் வீதி வலம் வருகின்ற திருக்கோலம் கண்டு மக்களெல்லாம் மகிழ்ந்தனர்.

ஒரு தெருவில் விரைந்து தேர் சென்று கொண்டிருந்த பொழுது ஓர் அழகான பசுங்கன்று ''சக்கரத்தில் அகப்பட்டு, அரைபட்டு, உடல் முறிந்து, குடல் சரிந்து உயிர்'' விட்டது. அதனைக் கண்டு வீதிவிடங்கன் மனம் பதைத்து, கவலைப்பட்டு வருந்தினுன். அவனோடு வந்த அந்தணர், அமைச்சர் முதலானோர் அவன் வேண்டுமென்றே கொல்லாததால் பழி பாவமில்லை, என்று கூறி, அதற்கான பிராயச்சித்தம் செய்யலாமெனத்தேறுதல் கூறினர். அதனுல் இளவரசனே அவர்கள் சொன்னவற்றைக் கேட்டு அமைதி பெருவிட்டாலும். அவர்கள் கருத்துப்படியே செயல்பட ஒப்புக் கொண்டு இரதத்தில் ஏறிச்சென்ருன்.

பின்னுல் வந்த தாய்ப்பசு தன் கன்று மாண்டு கிடப்பதைக் கண்டு அலறித் துடித்தது தனது கன்றுக்கிழைத்த பெருங்கொடுமைக்கு நீதி வேண்டி அரசனிடம் கேட்கக் கருதி மனுச் சக்கரவர்த்தியின் வாயிலிலுள்ள ஆராய்ச்சி மணியை அடித்தது.

எப்பொழுதும் ஒலிக்காத ஆராய்ச்சி மணியின் ஒலி கேட்டு அரசன் மிகுந்த துயரமடைந்தான். ஆராய்ச்சி மணிக்கருகில் வாடி நிற்கும் பசுவினைக் கண்டான். அதனுடைய ஆருத்துயருக்கான காரணங்களை வினவிய பொழுது தனது மகனே அதன் கன்றைக் கொன்ற உண்மையறிந்து துடிதுடித்துப் போனுன். தான் செய்த

பாவங்களின் விளைவாகத்தான் இத்தகைய கொடுமை நடைபெற்றதோ வென்று கலங்கினுன்.

மகனுக்கு எப்படித் தண்டனை கொடுப்பதென்று மன்னன் சிந்தித்த பொழுது, அதற்குத்தேவையான பிராயச் சித்தம் செய்யலாமென்று அமைச்சர் முதலானோர் கூறினர். ஆனுல் மன்னன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அமைச்சரை அழைத்து, தனது மகனைக் கூட்டிச் சென்று, பசுங்கன்று இறந்த இடத்தில் கிடத்தி, தேரிலேறி அவன் மேல் ஏற்றும்படித் தீர்ப்பு வழங்கினுன்.

அமைச்சர் கலாவல்லர் அரசர் மகனைக் கொல்ல மனமின்றி, தனது உடைவாளைக் கொண்டு தன்னைத்தானே மாய்த்துக் கொண்டார். இதனைக் கேள்விப்பட்ட அரசன் மிகவும் மனம் கலங்கி, "இனி நாமே போய்ப் புத்திரனைத் தேர்க்காலிலூர்ந்து, மந்திரி பழிக்கு நம்முயிரைக் கொடுத்து விடுவோம்" என்று முடிவுசெய்தான்.

பசுங்கன்று இறந்த இடத்தில் வீதிவிடங்கனைக் கிடத்தி இறைவனை வழிபட்டு வந்த மனுச் சக்கரவர்த்தி, தேர் ஏறி அவனை நசுக்கிக் கொன்ருன். பின் தனது உயிரையும் கொடுக்கத்துணிந்தான். அப்பொழுது தியாக ராஜப்பெருமான் காட்சியளித்தார். இறைவனருளால் இறந்து கிடந்த பசுங்கன்றும் மந்திரி கலாவல்லபரும் வீதிவிடங்கனும் உயிர் பெற்றனர். அதனைக்கண்டு எல்லோரும் வியந்து நின்றனர். அரசன் இறைவனை வழிபட்டான். பின்பும் அறநெறிப்படியே அரசாட்சி செய்து வந்தான்.

நூலின் பொதுச்சிறப்பு: "மனுமுறை கண்ட வாசகம்" பற்றி மணி. திருநாவுக்கரசு முதலியார், "இதன் வசன நடை மிக இனிப்பானது; இதன் கண் நூற்றுக்கணக்கான பழமொழிகள் ஆழப்பட்டுள்ளன; படிக்கச்சுவை விஞ்சுமாறு பேராற்றலுடன் இஃது எழுதப் பட்டிருக்கிறது; இதில் அரசனுக்கும் அமைச்சருக்கும் நடக்கும் நியாயவாதம் பெரிதும் பாராட்டத்தக்கது; தனி மொழிகள் சாலச்சிறந்தவை; வருணனைகளும் மேன்மையானவை'[3] என்று கூறுகின்ருர்.

"மனுமுறை கண்ட வாசகம் சென்ற நூற்ருண்டில் செழித்து வளர்ந்திருந்த தமிழ் உரை நடை எப்படி இருந்த தென்பதைக்

3. மனுமுறை கண்ட வாசகம் (முன்னுரை) ப. 1

காட்டுகின்றது. மிக நீண்ட வாக்கியங்களையும் பத்திகளையும் கொண்டதாக உரைநடை இருந்திருக்கின்றது. இந்நூலில் முதல் வாக்கியம் ஒரே பத்தியாக இரண்டு பக்கங்களுக்கு மேலும், இரண்டாம் வாக்கியம் மிக நீண்ட சொற்றொடராக ஏறத்தாழ ஐந்து பக்கங்களாகவும் வளர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தருக்க நடை : நூலில் மாறுபட்ட கருத்துக்களைத் தருக்க முறையில் அடிகளார் அருமையாக வடித்துக் கொடுக்கின்றார். இதனை ஊரன் அடிகள், "மனுச்சோழன் தன் மகன் வீதிவிடங்கனைத் தேர்க் காலிலிட்டுக் கொன்று முறை செய்ய முடிவு செய்து அவ்வாறே கட்டளை பிறப்பித்ததும் அமைச்சர்கள் அவ்வாறு செய்தல் அவசியமன்று, பிராயச்சித்தம் செய்து கொள்வதே போதும் என்பதும், அரசன் அதனை மறுத்துக் கூறித் தனது முடிவை வற்புறுத்துவதுமான இடத்தில், அடிகள் எழுதுவனவெல்லாம் நுட்பமும் திட்பமுமாய்த் தருக்க நடையிலமைந்துள்ளமை காண்க"[4] என்று குறிப்பிட்டுக் கூறுகின்றார்.

சான்றாக, அமைச்சர்கள் பிராயச்சித்தம் போதுமென்ற பொழுது மனுச்சோழன், "இப்படி நீங்கள் சொல்லியது என் முகத்தைத் குறித்தோ, என் புத்திரன் உயிருக்கிரங்கியோ, அல்லது உங்கள் சீவனத்தை எண்ணியோ, எது பற்றியோ?" என்று கேள்விகளைக் கேட்டு விட்டு, தொடர்ந்து கூறுவதில் கீழ்க்கண்ட பகுதியைச்சுட்டிக் காட்டலாம் ;-

" ...... துர்மந்திரிகளைப் போல நியாயம் பாராது நயிச்சிய வார்த்தைகளைச் சொன்னீர்கள். இது காலவேற்றுமை யென்றே எண்ணுகின்றேன். தன்னைக் கொடுத்தாவது தருமத்தைத் தேட வேண்டும் என்னும் பெரியோர் வார்த்தையைப் படிப்பது நற்குணமுடையோர்க்குத் தகுதி யென்றும். தாய் தந்தையிடத்திலாயினுந்தராசுக் கோல் போலச் செப்பமாக நின்று தீர்ப்புக் கொடுக்க வேண்டுவது அரசர்க்கு அவசியம் வேண்டிய சற்கருமமென்றும் எனக்கு அடிக்கடி அறிக்கையிட்ட நீங்கள், இன்று அதோகதியில் தள்ளிவிடத் தக்க அநியாயத் தீர்ப்பை அங்கீகரிக்கப் போதிக்கின்றீர்கள். இஃது உங்களிடத்து நேரிட்ட அவஸ்தை வசமென்றே எண்ணுகிறேன். ஒருவரிடத்துத் தண்டனை விதிக்கும் போது எவ்வுயிர்களும் தன்னுயிர்

4. இராமலிங்க அடிகள் வரலாறு ப. 103

போல் எண்ணுவதும், எந்தப் பொருள் எந்தப் பிரகாரமாயிருந்தாலும் அந்தப் பொருளினுண்மையை அறிந்து கொள்வதும், உறவு நோக்காது அறிவை நோக்குவதும், ஊழ்வினை நோக்காது செய்வினை நோக்குவதுமாகிய இப்படிப்பட்ட இலக்கணங்களுக்குப் பொருந்த விதிக்க வேண்டுமென்று எனக்கு அறிவித்து வந்த நீங்கள், இன்று என் புத்திரன் இரக்கமுள்ள வனென்றும், அவன் அஜாக்கிரதையினுல் கொன்றதல்ல வென்றும், பழவினையாற் பசுக்கன்று மடிந்ததென்றும், அதனுல் அதற்குத் தக்க பிராயச்சித்தம் செய்விக்க வேண்டுமென்றும், வாதியை மாத்திரம் வரவழைத்துக் கொண்டு நடுக்கொள்ளைக்காரன் நியாயந்தீர்த்தானென்பது போற் சொல்லி நிற்கின்றீர்கள்.''

*உவமைகள் :* ''மனுமுறை கண்ட வாசகம்'' நூலின் சிறப்புக்களில் மற்றொன்று பரவலாக அருமையான உவமைகளை நூலெங்கும் பயன்படுத்தியிருப்பதாகும். சொல்லுகின்ற உயரிய கருத்துக்களை எளியமுறையில் எடுத்துரைத்துப் புரிய வைக்க உவமைகள் பெரிதும் துணை செய்கின்றன.

சில இடங்களில் ஒன்றினை விளக்கப் பல உவமைகளைக் கூறுவதையும் காணலாம். மனுச்சோழன் தனது மகன் வீதிவிடங்கனைக் கண்டு களித்ததை, ''கற்புள்ளவள் கணவனை உபசரிப்பது போல உபசரித்தும், படிப்பில் ஆசையை வைத்தவன் பாடத்தைப் பாராட்டுவது போலப் பாராட்டியும், தன்னை உயர்ந்தவனுக்க நினைத்தவன் தருமத்தை வளர்ப்பது போல வளர்த்தும், முன் சிறுமையடைந்து பின் செல்வத்தைப் பாதுகாப்பது போலப் பாதுகாத்தும் புத்திர சம்பத்தினுல் வரும் பயனை அடைந்தவராயிருந்தார்,'' என்று கூறுவதை எடுத்துக் காட்டாகச் சுட்டிக் காட்டலாம்.

*பழமொழிகள் :* உவமைகளைப் போன்றே பழமொழிகளையும் வள்ளலார் மிகுதியாகப் பயன்படுத்துகின்ருர். படிப்பவரின் உள்ளத்தில் கருத்துக்கள் பதிந்து நிலைத்து நிற்க பழமொழிகள் உறுதுணையாக உள்ளன. நூலில் வருகின்ற பழமொழிகளில் குறிப்பிடத்தக்கவற்றை இங்கே தொகுத்துக் கூறலாம்.

''கட்டியவஸ்திரம் அவிழ்ந்தவன் கைபோல.''
''பிள்ளை தேடும் புண்ணியம் பிதாவுக்குமுண்டு.''
''இளங்கன்று பயமறியாது.''
''எண்ணம் பொய்யாகும் ஏளிதம் (இகழ்ச்சி) மெய்யாகும்.''

''குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பு.''

''மரபழிக்க வந்த வச்சிராயுதம்.''

''பொன் கத்தி யென்று கழுத்தரிந்து கொள்ளலாமோ.''

''கும்பகோணத்துப் பள்ளன் கொள்ளை கொண்டு போகத் தஞ்சாவூர்ப் பார்ப்பான் தண்டங் கொடுத்தான்.''

''சூறைக்காற்றில் அகப்பட்ட துரும்பு போல.''

''பாவிக்குப் பாக்கியம் தக்காது.''

''குள்ளனைக் கொண்டு ஆழம் பார்க்க வந்தது போல்.''

''பேயைத் தெய்வமென்று பிள்ளைவரம் கேட்டாற் போல்.''

''எமன் கையிலகப்பட்ட உயிர் எந்த விதத்திலும் திரும்பாது.''

''பாலியப் பருவம் பயமறியாது.''

''மாதா பிதாக்கள் செய்தது மக்களுக்கு.''

''பாவிக்குத் தீர்க்காயுள்.''

''எய்தவன் இருக்க அம்பை நோவதா?.''

''தன்வீட்டு விளக்கென்று முத்தமிட்டால் சுடாது விடாது.''

''ஆனை மதப்பட்டு அடவி யழித்தது.''

''காக்கை யேறிப் பனம்பழம் விழுந்தது.''

''கருத்தறியாதவன் சொன்னதே கொள்வான்.''

''நல்ல விதி நடுவே இருக்கக் கோணிய விதி குறுக்கே வந்ததாம்.''

''வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்ததுபோல.''

''கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதாம்.''

''கடை கொள்ளப் போகும்போது கள்ளன் எதிர்ப்பட்டானும்.''

**பழிகளின் பட்டியல்:** மனுச் சோழன் தனது மகன் தேரில் கன்றடி பட்டு உயிர் விட்ட செய்தி கேட்டு, ''எதனால் இப்படி நேர்ந்தது?'' என்று எண்ணிக் கலங்குகின்ற பொழுது, ''தான் செய்த முன்வினைப் பயனால் தான் தன் மகன் இப்படிப் பட்ட பழிக்கு ஆழாகிவிட்டானே'' என்று கூறி வருந்துகின்றான். அப்பொழுது அவன் கூறுகின்ற பழிகளின் பட்டியலில் சமுதாயத்தில் காண்கின்ற எல்லாப் பழிகளும் (பாவங்களும்) அடங்கியிருப்பதைக் காணலாம்.

ஒரு நல்ல சமுதாயத்தில் இத்தகைய தீவினைகள் இருக்கக் கூடா தென்பதை வலியுறுத்த மனுச் சோழன் கூறும் தீவினைகளைக் கீழே முறைப்படுத்திக் கொடுக்கலாம்:-

1. நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தல்
2. வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தல்
3. தானங் கொடுப்போரைத் தடுத்து நிறுத்தல்
4. கலந்த சிநேகரைக் கலகஞ் செய்தல்
5. மனமொத்த நட்புக்கு வஞ்சகஞ் செய்தல்
6. குடி வரி உயர்த்திக் கொள்ளை கொள்ளுதல்
7. ஏழைகள் வயிறு எரியச் செய்தல்
8. தருமம் பாராது தண்டஞ்செய்தல்
9. மண்ணோரம் பேசி வாழ்வழித்தல்
10. உயிர்கொலை செய்வோர்க்கு உபகாரஞ் செய்தல்
11. களவு 'செய்வோர்க்கு உளவு' சொல்லல்
12. பொருளை இச்சித்துப் பொய் சொல்லல்
13. ஆசை காட்டி மோசஞ் செய்தல்
14. வரவு போக்கொழிய வழியடைத்தல்
15. வேலையிட்டு கூலி குறைத்தல்
16. பசித்தோர் முகத்தைப் பாராதிருத்தல்
17. இரப்போர்க்குப் பிச்சை இல்லை யென்றல்
18. கோள் சொல்லி குடும்பங் குலைத்தல்
19. நட்டாற்றில் கையை நழுவ விடல்
20. கலங்கியொளித்தோரைக் காட்டிக் கொடுத்தல்
21. கற்பழித்தவளைக் கலந்திருத்தல்
22. காவல் கொண்டிருந்த கன்னியை அழித்தல்
23. கணவன் வழி நிற்போரைக் கற்பழித்தல்
24. கற்பமழித்துக் களித்திருத்தல்
25. குருவை வணங்கக் கூசி நிற்றல்
26. குருவின் காணிக்கை கொடுக்க மறத்தல்

27. கற்றவர் தம்மை கடுகடுத்தல்

28. பெரியோர் பாட்டில் பிழை சொல்லல்

29. பட்சியைக் கூண்டில் பதைக்க அடைத்தல்

30. கன்றுக்குப் பாலூட்டாது கட்டி வைத்தல்

31. ஊன் சுவை உண்டு உடலை வளர்த்தல்

32. கல்லும் நெல்லும் கலந்து விற்றல்

33. அன்புடையவர்க்குத் துன்பஞ் செய்தல்

34. குடிக்கின்ற நீருள்ள குளத்தைத் தூர்த்தல்

35. வெய்யிலுக் கொதுங்கும் விருட்சமழித்தல்

36. பகை கொண்டு அயலார் பயிரை அழித்தல்

37. பொது மண்டபத்தைப் போயிடித்தல்

38. ஆலயக் கதவை அடைத்து வைத்தல்

39. சிவனடியாரைச் சீறி வைதல்

40. தவஞ் செய்வோரைத் தாழ்வு சொல்லல்

41. சுத்த ஞானிகளை தூஷணஞ் செய்தல்

42. தந்தை தாய் மொழியைத் தள்ளி நடத்தல்

43. தெய்வத்தை இகழ்ந்து செருக்கடைதல்.

வள்ளலார் மனுச்சோழன் கூற்றாகத் தொகுத்துக் கொடுத்திருக்கின்ற தீவினைகள் எல்லாம், எந்தக் காலத்திலும் தனிமனிதர்கள் ஒதுக்க வேண்டியவைகளாகும். சென்ற நூற்றாண்டில் சமுதாயத்தில் மலிந்த கிடந்தவற்றை அடிகளார் சுட்டிக் காட்டியிருக்கலாம். நாம் வாழ்கின்ற சமுதாயத்திலும் இவற்றில் பெரும்பாலான பழிச் செயல்களைச் செய்கின்றவர்களைக் காண்கின்றோம். இவற்றை நீக்கி ஓர் அறச் சமுதாயத்தை அமைப்பதே அடிகளின் குறிக்கோளாகும்.

**வளர்ச்சி :** வள்ளலார் காலத்திற்குப் பிறகு தமிழ் உரைநடையில் எவ்வளவோ மாற்றமும் வளர்ச்சியும் ஏற்பட்டிருக்கின்றது. அவற்றிற்

கெல்லாம் அடித்தளம் அமைத்த பெருமைக்கும் புகழுக்கும் உரியவர்களில் ஒருவர் வள்ளலார் என்பதற்கு ''மனுமுறை கண்ட வாசகம்'' நூல் சான்ருக விளங்குகின்றது.

காலத்தை வென்று நிற்கின்ற கருத்துக்களைத் தன்னகத்தே கொண்ட ''மனுமுறை கண்ட வாசகம்'' சமுதாயத்திற்கு வழிகாட்டக் கூடிய நூலாகும். ஆதலால் இன்றும் என்றும் அது செல்வாக்கோடு திகழ்வதை தமிழ் இலக்கிய உலகம் கண்டு கொண்டிருக்கும். □

# 6. வள்ளலாரின் ஜீவகாருணிய ஒழுக்கம்

வள்ளலார் தமது உள்ளார்ந்த அனுபவங்களையும், பெற்ற பேறு-களையும் வடித்து வைத்திருக்கின்ற கருவூலம் திருவருட்பா. ஊனுருகி, உள்ளமுருகி அவர் ஓதாதுணர்ந்து பெற்றவற்றை மனுக்குலம் பயனடைகின்ற வகையில் உரைத்துப் பெருமை பெற்றவர் வள்ளலார். அவர் நூற்களாக இயற்றியவை இரண்டு. ஒன்று ''மனுமுறை கண்ட வாசகம்''. மற்றொன்று ''ஜீவகாருண்ய ஒழுக்கம்''.

தமிழில் உரைநடை நூற்கள் இல்லையென்ற குறையைப் போக்கவும் தமிழ் கற்பவர்களுக்குத் துணை செய்யவும் மற்றவர்கள் வேண்டிக் கொள்ள உருவாக்கிய நூல் ''மனுமுறை கண்ட வாசகம்'' இது 1854 ஆம் ஆண்டில் (வள்ளலாரின் 31 ஆம் வயதில்) வெளிவந்ததென்று வரலாற்றுக் குறிப்புக் கூறுகின்றது.

''ஜீவகாருணிய ஒழுக்கம்'' நூல் சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலையை நிறுவினபோது, அதன் நோக்கத்தைக் கூறுகின்ற வகையில் 1867 ஆம் ஆண்டில் (வள்ளலாரின் 44-ஆம் வயதில்) எழுதப் பெற்றதென்று கூறுகின்றனர். வள்ளலாரின் கொள்கை விளக்கமாக ஆய்ந்து கண்ட முடிவாக-இந்நூல் அமைகின்றது.

**நூலும் பகுப்பு முறையும்:** ''ஜீவகாருணிய ஒழுக்கம்'' முதல்-பதிப்பு எப்பொழுது அச்சுருவம் பெற்றதென்று தெரியவில்லை. பின்னால் அதனை அவரிடம் பற்றுக் கொண்டவர்கள் தங்கள் விருப்பம் போல் வெளியிட்டிருக்கின்றனர். இங்கு அறிமுகத்திற்குக் கிடைத்த ''ஜீவகாருணிய ஒழுக்கம்'' நூல் 1927-ஆம் ஆண்டில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர் மணி திருநாவுக்கரசு முதலியார் பதிப்பாசிரியராக இருந்து நான்கணு(25 காசுகள்)விலையில் 52 பக்கத்தில் வெளியிட்டதாகும்.

இந்த நூலிற்கு வள்ளலார் எழுதிய முன்னுரை எதுவும் வெளியிடப்-படவில்லை. பதிப்பாசிரியர், ''ஆசிரியர் வரலாறு'' என்று இரண்டு பக்கத்தில் நூலைப் பற்றியும் வள்ளலாரைப் பற்றியும் எழுதிய குறிப்புரை மட்டும் காணப்பெறுகின்றது.

நூலில் மூன்று பகுதிகள் உள்ளன. முதல் பகுதி ''சீவகாருணிய ஒழுக்கம்'' என்பது இது 42 பக்கங்களிலிருக்கின்றது. அடுத்து ''அநுபந்தம் க. சீவகாருணியம்'' என்ற பகுதியும், இறுதியில் ''உண்மை நெறி'' என்ற குறிப்புகள் கொண்ட பகுதியும் அமைந்திருக்கின்றது.

இந்த நூல் முதலில் ஏழு பகுதிகளைக் கொண்டிருந்ததாகவும் அந்த ஞான நெறியில் நான்கு பகுதியை நாம் இன்று இழந்து மூன்று பகுதியே பெற்றுள்ளோம்,'' என்று புலவர் கு. திருமேனி (சத்திய தருமச்சாலை நூற்றாண்டு விழா-திருஅருட்பா நூற்றாண்டு விழா-மலர் ப. 93) கூறுகின்றார்.

தமிழ் உரைநடைக்கு முன்னோடியாக நூல் அமைகின்றது. திருவருட்பாவில் காண்கின்ற சொல்லாட்சிக்கும் இந்நூலில் காணப்பெறுகின்ற சொல்லாட்சிக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. திருவருட்பா அவரது அனுபவங்களின் வெளிப்பாடாக இருக்கின்றது. இந்நூல் அவர் கண்ட ஆன்ம நெறியில் விளக்கமாக - ஒரு தத்துவமாக - இருக்கின்றது. ஒரு நெறியில் விளக்க நூல் என்ற முறையில் ஜீவகாருண்யத்தைப் படிப்படியாக விளக்குவதோடு, தோன்றக்கூடிய ஐயங்களையும் அவரே வினாக்களாக எழுப்பி, தர்க்க ரீதியாக கருத்துக்களைக் கூறுகின்றார். தத்துவ நூல் என்ற வகையில் தமது தத்துவம் எப்படி மற்றவற்றிலிருந்து உயர்ந்ததென்பதை உரைக்கின்றார்.

நூல் நமக்கு முன்னால் வள்ளலாரை அமர்ந்து பாடம் புகட்டுவதைப் போல அமைந்திருக்கின்றது. கேட்பவரின் உள்ளத்தில் கருத்துக்கள் தெளிவாகப் பதியும் வகையில் ஒவ்வொரு கருத்தையும் தனித்தனியாகக் கூறுகின்றார். வடசொற்கள் அவரது காலச் சூழலுக்கேற்ப மிகுதியாகப் பயன்படுத்தப் பெறுகின்றன.

நூல் ''அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே'' என்று இறைவனைப் ''பரசிவ வணக்கமாகப்'' பாடும் பாடலோடு தொடங்குகின்றது. அன்பின் கனிவு அருள். அருட்பெருஞ்சோதியாய இறைவனைக் கண்ட வள்ளலார் தனிப்பெருங்கருணையான ஜீவகாருண்யத்தின் மூலம் எப்படி இறையருளைப் பெறலாமென்பதை இந்த நூலில் விளக்குகின்றார்.

**நூலின் நோக்கம்:** நூலின் நோக்கத்தை முதல் வாக்கியமே, ''உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொணடவர்கள் இந்தப்

பிறப்பினுல் அடையத் தக்க ஆன்ம லாபத்தைக் காலமுள்ள போதே அறிந்து அடைய வேண்டும்'' என்று அறிவிக்கின்றது. ஆன்மலாபம் எதுவென்பதையும், அதனை அடைகின்ற வழிமுறைகளையும், ஆன்மலாபத்தின் சிறப்பையும் நூல் விளக்கிக் கூறுகின்றது.

நூலின் கருத்துக்களைத் திரட்டித் தொகுத்து கூறலாம்.

*ஆன்மலாபம்* : ''இயற்கை வடிவினராகிய கடவுளின் பூரண இயற்கை இன்பத்தைப் பெற்று, எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரிய வாழ்வே இந்த மனிதப் பிறப்பினுல் அடையத்தக்க ஆன்மலாபமென்று உண்மையாக அறிய வேண்டும்''.

எதனுல் அடைவது? கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளைக் கொண்டே அடையக்கூடும்.

அருளை எதனுல் பெறுவது? சீவகாருணிய ஒழுக்கத்தினுல் மட்டுமே பெறமுடியும். ஏன் வேறு வழியால் பெற இயலாது? ''அருள் என்பது கடவுள் தயை, சீவர்கள் ஆன்ம இயற்கை விளக்கம். இதனுல் தயையைக் கொண்டு தயையைப் பெறுதலும், விளக்கத்தைக் கொண்டு விளக்கத்தைப் பெறுதலுங் கூடும்''

அருளைப்பெற சீவகாருணியம் வழி. ஞான வழியும் சன்மார்க்கமும் சீவகாருணியத்தில் அடங்கும். சீவகாருணியத்தில் அறிவும் அன்பும் துணைநிற்கின்றன. சீவகாருணியமே புண்ணியம். அது இல்லாமலிருப்பது பாவம். சீவகாருண்யமென்பது உயிரிரக்கம். இந்த ஆன்ம உருக்கமே தெய்வ வழிபாடாகும்.

சீவர்கள் அனைவரும் எல்லாம் வல்ல இறைவனுல் படைக்கப்பட்டதால் ஓர் உரிமையுள்ள சகோதரர்கள். இவர்களது துன்பத்தைக் கண்டபோதோ கேட்டபோதோ எப்படி உண்டாகுமென்று அறிந்தபோதோ ஆன்ம உருக்கம் உண்டாகும்.

*சீவர்களின் துன்பம்*:- 1. பசி 2. தாகம் 3. பிணி 4. இச்சை 5. எளிமை 6. பயம் 7. கொலை.

சீவர்களுக்கு முன்பின் பிறவி - தேகம் - உண்டு. முன்பிறப்பின் வினைகளை ஒட்டி இப்பிறப்பில் துன்பம் தொடர்கின்றது. சகோதரர்-

களின் இத்துன்பத்தை இயன்றவழியில் தீர்ப்பது சீவகாருணியமாகின்றது.

சீவகாருணியத்தால் எப்படி இகலோக ஒழுக்கமும் பரலோக ஒழுக்கமும் அமைகின்றதென்பதை தர்க்கரீதியாக, காரணகாரிய அடிப்படையில் விளக்குகின்ருர். இதனை வள்ளலாரின் சொற்களில் கூறலாம்.

''சீவகாருணியத்தால் இகலோக ஒழுக்கம் வழங்குகின்றது. சீவகாருணியம் இல்லையாகில் இகலோக ஒழுக்கம் எவ்வளவும் வழங்கமாட்டாதென்று அறியவேண்டும். எப்படியென்னில், ஜீவகாருணியம் இல்லாதபோது அறிவும் அன்பும் தோன்ரு. அவை தோன்ருதபோது கண்ணேட்டமும் ஒற்றுமையும் உபகாரமும் விளங்கா. அவை விளங்காதபோது பின்பு வலிய சீவர்களின் பொருமையால் எளிய சீவர்களின் ஒழுக்கம் தடைப்பட்டு அழிந்துபோம். பின்பு வலிய சீவர்களின் ஒழுக்கங்களும் தாமச ஒழுக்கங்களாகி ஒருவர் ஒழுக்கத்தால் மற்ருெருவர் ஒழுக்கமும் மதத்தினுல் சோர்வடைந்து மாறுபட்டு அழிந்து போம். சீவகாருணிய ஒழுக்கம் சிறிதுமில்லாத புலி, சிங்கம் முதலிய மிருகங்கள் வழங்குகின்ற காட்டில் இகலோக ஒழுக்கம் வழங்கவேயில்லை. அதுபோல் சீவகாருணியம் இல்லாத மனிதர்கள் வழங்குமிடத்திலும் இகலோக ஒழுக்கம் வழங்கவேமாட்டாதென்று அறியவேண்டும்.''

பரலோக ஒழுக்கமும் சீவகாருணியத்தில் வழங்குகின்றது. அது இல்லையாகில் பரலோக ஒழுக்கமும் வழங்கமாட்டாது. எப்படியென்னில், சீவகாருணியம் இல்லாதபோது அருள்விளக்கம் தோன்ருது. அது தோன்ருது முத்தியின்பம் ஒருவரும் அடையமாட்டார்கள். அடையாத பட்சத்தில் பரலோக ஒழுக்கம் வழங்கவே மாட்டாதென்று அறியவேண்டும். சீவகாருணிய ஒழுக்கம் மிகவும் வழங்குகின்றன.''

''சீவகாருணியம் கடவுள் அருளைப் பெறுவதற்கு முக்கிய சாதனம் என்பது மல்லாமல் அதுவே அவ்வருளின் ஏகதேச விளக்கம் என்றும் அறிய வேண்டும்.''

*சீவகாருணியத்தில் இருவகை*: 1. அபர சீவகாருணியம்-பசி, கொலை தவிர பிறவற்ருல் வரும் துன்பங்களை நீக்கி இவ்வுலக இன்பத்தை மட்டும் சிறிது உண்டு பண்ணுதல் 2. பர சீவகாருணியம். பசியாலும் கொலையாலும் வரும் துன்பத்தை நீக்குதல். இதனுல்

இவ்வுலக இன்பங்களேயும் அளவறந்த சித்தியின்பங்களேயும் எக்காலத்தும் அழியாத முத்தியின்பத்தையும் அருளால் அடையலாம்.

**எதனுல் பசிப்பிணியைப் போக்குதல் அடிப்படை?**

இக்கேள்விக்கு விடையாக வள்ளலார் விரித்துக் கூறுவதை இங்குத் தொகுத்துக் கூறலாம்.

1. மற்ற துன்பங்களினுல் தேகத்திற்குக் கெடுதி ஏற்படாது. பசி தேகத்தைக் கெடுக்கும்.

2. பசியினுலேயே பிணிகள் பெருகுகின்றன.

3. பிணியோடு இச்சையோடு எளிமையோடு பயத்தோடு தேகம் இருக்கும். பசிக்கும் கொலேக்கும் ஆளாகும் தேகம் அழியும்.

4. பசியைத் தீர்ப்பதில் கொலேயைத் தவிர்ப்பதும் அடங்கும்.

5. பசித்துன்பம் வந்தால் மற்றைய துன்பம் மறைந்துவிடும்.

6. பசி எல்லா உயிர்களுக்கும் பொதுவானது.

7. பசி நீங்குகையில் கிடைக்கின்ற இன்பம் மற்றைய இன்பங்களே விட மிகுதியானது.

8. பசித்துன்பம் மிகவும் கொடுமையானது.

9. பசியினுல் சீவ அறிவு விளக்கமின்றி மயங்குவதால், அறிவுக் கறிவாகிய கடவுள் விளக்கம் மறைபடுகின்றது.

தாமச ஆகாரமாகிய மாமிச ஆகாரத்தை நீக்க வேண்டியதன் அவசியத்தையும், அது கொலேத்துன்பத்தை நீக்கும் அறப்பணியாக இருப்பதனேக் குறித்தும் விளக்குகின்ருர். மரம், புல் நெல் முதலான தாவரங்களும் உயிர்கள் தான் என்று கூறி, அவையும் தாமச ஆகாரந்தான் என்று சொல்லி எதனுல் அவற்றைச் சாப்பிடுவதை அனுமதிக்கலாமென்பதற்கு சில காரணங்களேக் கூறுகின்ருர்.

அவர் கூறுபவை:
1. அவை பரிசமென்கின்ற ஓர் அறிவுடையவை.
2. அவ்வுடம்பில் சீவ விளக்கம் ஒரு சார் விளங்குகின்றது.
3. அவ்வுயிர் தோன்றும் வித்துக்கள் சடமானவை.

4. நாமே விதைத்து உயிர் விளைவு செய்யக் கூடியவை.

5. அவற்றின் உயிர்களைப் பிரிக்காமல் உயிரில்லாமல் உயிர் தோன்றுதற்கிடமான சடங்களாகத் தோன்றிய வித்துக்களையும் காய்களையும் கனிகளையும் பூக்களையும் கிழங்குகளையும் தழைகளையும் ஆகாரமாகக் கொள்ளலாம். அவற்றின் முதல்களை ஆகாரமாகக் கொள்ளக் கூடாது.

6. சுக்கிலம், நகம், ரோமம் முதலியவற்றை வாங்கும் பொழுது இம்சை ஏற்படாதது போல இவற்றை எடுக்கும் போதும் துன்பம் ஏற்படாது.

7. தாவர வர்க்கங்களுக்கு மனம் முதலாகிய அந்தக் கரண விருத்தியில்லை.

8. அவற்றை உண்பதில் உயிர்க் கொலையோ துன்பமோ இல்லை.

இருவகை இன்பம்: அவை 1. அபர இன்பம். 2. பரஇன்பம். இச்சை முதலியவற்ருேடு தொடர்புடைய துன்பங்களை நீக்குவதில் கிடைக்கின்ற, இம்மையில் அனுபவிக்கின்றவை அபர இன்பம். (ஆடை இல்லாதவனுக்குத் துணி கொடுப்பது போன்றது.) ''பசியினுல் வருந்துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வரும் இன்பம் பர இன்பமாகும். அவை இம்மையில் போக சித்திகளாலும். யோக சித்திகளாலும், ஞான சித்திகளாலும் வருகின்ற இன்பங்களும் முடிவில் அனுபவிக்கப்படும் மோட்ச இன்பமுமாகுமென்று அறிய வேண்டும்''.

பசியை நீக்குதல்: பசியையும் கடவுளாற் இறைவனையறியக் கொடுத்த ஓர் உபகாரக் கருவியென்று வள்ளலார் கூறுகின்ருர். அதனை நீக்குவதை எல்லாவற்றையும் விடச் சிறந்ததாக எண்ணுகின்ருர். ''பசியினுல் வருந்துகின்றவர்கள் எந்தத் தேசத்தவராயினும், எந்தச் சமயத்தவராயினும், எந்தச் சாதியாராயினும், எந்தச் செய்கையாராயினும், அவர்கள் தேச ஒழுக்கம், சமய ஒழுக்கம், சாதி ஒழுக்கம், செய்கை ஒழுக்கம் முதலானவைகளைப் போதித்து விசாரியாமல், எல்லாச் சீவர்களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாய் விளங்குவதை அறிந்து பொதுவாகப் பார்த்து, அவரவர் ஒழுக்கத்திற்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியம்'' என்கின்ருர்.

**பலன்:** ''பசியினல் வருந்துகின்ற சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து, அந்தப்பசி வருத்தத்தை நீக்கித் திருப்தியின்பத்தை உண்டு பண்ணுவதற்குக் காரணமாகிய சீவகாருணியம் என்கிற திறவுகோலைக் கொண்டுதான் மோட்சமாகிய மேல் வீட்டுக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்து எக்காலத்தும் அழியாத இன்பத்தை யனுபவித்து வாழவேண்டும்.''

பசி தீர்க்கும் பணி செய்கின்றவர்களுக்கு எல்லாவகையான சித்திகளும் கிடைக்குமென்கின்ருர். நோய்கள் தீருமென்கின்ருர். அப்படிப் பட்டவர்களை எந்தத் துன்பமும் பாதிக்காதென்கின்ருர். பசி தீர்க்கும் பண்புடையவர்களை ''புண்ணியர்கள், யோகிகள், கடவுளைக் கண்டவர்கள், கடவுளின்பத்தை அனுபவிக்கும் முத்தர்கள், யாவராலும் வணங்கத்தக்கவர்கள்'' என்றெல்லாம் வர்ணிக்கின்ருர்.

**ஆன்ம இன்ப வாழ்வு வகை:** அனுபந்தப் பகுதியில் ஆன்ம இன்ப சுகத்தை விரைந்து அறிந்து அடைய வேண்டுமென்கின்ருர். ஆன்ம இன்ப வாழ்வை 1. இம்மை இன்ப வாழ்வு; 2. மறுமை இன்ப வாழ்வு 3. பேரின்ப வாழ்வு என்று மூன்று வகைகளாகப் பிரிக்கின்ருர்.

1. இம்மை இன்ப வாழ்வு:- ''சிறிய தேக கரணங்களைப் பெற்றுச் சிறிய முயற்சியால் சிறிய விடயங்களைச் சிலநாள் அனுபவிக்கப்படுகின்ற இன்பம்'' பெருமை- ''அன்பு, தயை, ஒழுக்கம், அடக்கம், பொறுமை, வாய்மை, தூய்மை முதலிய சுப குணங்களைப் பெற்று, விடய இன்பங்களை வருந்தி முயன்று, அனுபவித்துப் புகழ்பட வாழ்தல்.''

2. மறுமை இன்பம்:- ''உயர் பிறப்பில் பெரிய தேக கரணங்களைப் பெற்றுப் பெரிய முயற்சியால் பெரிய விஷயங்களைப் பலநாள் அனுபவிக்கின்ற இன்பத்தை மறுமையின்ப வாழ்வென்று அறிய வேண்டும்''. பெருமை, அன்பு, தயை, முதலிய சுப குணங்களைப் பெற்றுச் சுத்தவிடய இன்பங்களை எண்ணியபடித் தடைபடாமல் முயன்று பலநாள் அனுபவித்துப் புகழ்பட வாழ்தல்''.

3. பேரின்பம்:- ''எல்லாத் தேகங்களையும், எல்லாக் கரணங்களையும் எல்லாப்புவனங்களையும், எல்லாப் போகங்களையும், தமது பூரண இயற்கை விளக்கமாகிய அருட்சத்தியின் சந்நிதி விசேடத்தால் தோன்றி விளங்க விளக்கஞ் செய்விக்கின்ற பூரணவியல் இயற்கை-

யுண்மை வடிவினராகிய கடவுளின் பூரண இயற்கை இன்பத்தைப் பெற்று எக்காலத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் தடைபடாமல் அனு-பவிக்கப்படுகின்ற ஒப்பற்ற அந்தப் பெரிய இன்பத்தைப் பேரின்ப வாழ்வென்று அறிய வேண்டும்''.

"பேரின்ப லாபம் யாதெனின் யாவுந்தாமாய் விளங்குவதே". பேரின்ப லாபத்தை அடைந்தவர் பெருமையை விரிவாகக் கூறுகின்றார். அவர் பொன்னாகிய சுத்த பூத காரிய தேகத்தையும், ஞான தேகத்தை-யும் பெற்று விளங்குவாரென்று கூறி, இத்தேகத்தின் அரிய சிறப்புக்களை எல்லாம் கூறுகின்றார். இந்த விளக்கத்திற்கும் வள்ளலாரின் யோக தத்துவ விளக்கத்திற்கும், அவர் வாழ்ந்த வாழ்விற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதனைக் காணலாம்.

**உண்மை நெறி:** இறுதியாக "உண்மை நெறிப்பகுதியில் 1. ஏமசித்தி 2. சாகாக்கல்வி 3. தந்துவ நிக்கிரகஞ் செய்கை 4. கடவுள்நிலை அவிந்தும் அம்மயமாதல் என்று ''புருஷார்த்தம் நான்கு'' என்று குறிப்பிடுகின்றார்.

நான்கு வகை ஒழுக்கமாக 1. இந்திரிய ஒழுக்கம், 2. கரண ஒழுக்கம் 3. சீவ ஒழுக்கம் 4. ஆன்ம ஒழுக்கம் ஆகியவற்றைக் கூறி அவை இவைதானென்று விளக்கும் வகையில் குறிப்புகள் காணப்-பெறுகின்றன.

**நிறைவுரை:** வள்ளலாரின் 'ஜீவகாருணிய ஒழுக்கம்' சன்மார்க்க நெறியில் நிற்பவர்களுக்கு உள்ள உறுதியை ஏற்படுத்தி வழிகாட்டு-கின்ற நூலாக அமைகின்றது. கொள்கை விளக்க நூல் என்ற முறை-யில் கேள்விகளுக்கு விடையளிப்பது போல, நமது உள்ளங்களில் தோன்றக் கூடிய ஐயங்களை ஊகித்துணர்ந்து, அவற்றை தீர்ப்பதாக இருக்கின்றது. வள்ளலாரின் இயக்கத்தைப் புரிந்துக் கொள்ள இந்-நூல் ஏற்ற துணையாகும். □

# 7. தனிப்பெருங் கருணை

வள்ளலார் வழங்கிய கருத்தாழமிக்க நித்தியமான சத்தியத்தைக் கூறுகின்ற முதன்மையான சொற்றொடர்களில் ஒன்று ''தனிப்பெருங் கருணை'' என்பதாகும். இதனை அவரது ''அருட்பெருஞ் சோதி'' இறைவனைப் பற்றிய தத்துவத்தின் திறவுகோல் எனலாம்.

**சொல் விளக்கம்:** 'தனிப்பெருங் கருணை' என்னும் மூன்று தனிச் சொற்களாலான இந்தச் சொற்றொடரில் அடிப்படையாக அமைவது 'கருணை' என்னும் சொல்லாகும். இந்த வடசொல்லிற்கு நேரடித் தமிழ்ச் சொல்லாக 'அருள்' என்பதனைக் கூறலாம்.

வள்ளலார் ''கருணை'' - ''காருண்யம்'' என்கின்ற அன்பின் பெருக்கத்தை எல்லாவற்றிற்கும் தொடக்கமாகக் கொள்கின்றார். உலகியல் வாழ்வு உயர்வுடையதாக அமைய அன்பு தேவை. இதனால் தான் வள்ளுவர்,

> ''அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
> என்புதோல் போர்த்த உடம்பு'' [1] என்று கூறுகின்றார்.

அன்பில் பல நிலைகள் இருக்கின்றன. நம்மைச் சார்ந்த உற்றார் உறவினர்களிடமும், நம்மிடம் அன்பு செலுத்துகின்றவர்களிடமும் அன்பு காட்டுதல் ஒரு வகை. அன்பை எதிர்நோக்கி அன்பு செய்வது 'அன்பு வாணிக'மாகின்றது. ஆனால் எதனையும் எதிர்பார்க்காத, கைமாறு கருதாத தாயன்பு, நட்பு போன்றவை பேரன்பாக மலர்கின்றன. தன்னையே அன்புக்காக அளிக்கின்ற உயர்ந்த வளர்ச்சி நிலையும் அன்பில் இருப்பதால்தான்,

> ''அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு''[2]

---

1. திருக்குறள் 80
2. திருக்குறள் 72

என்று வள்ளுவர் வரையறுத்துக் கூறுகின்றார். இந்த அன்பின் முதிர்ச்சியின் கனியாக அருள் இருக்கின்றது. இதனால்தான் ''அருளென்னும் அன்பீன் குழவி'' (திருக்குறள் 757) என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

'அருள்' என்பது வேண்டியவர், வேண்டாதவர் என்று எண்ணிப் பொழிவது அல்ல. எல்லை கடந்தது. பகைவனுக்கும் அருள் கிடைக்கும். இதனால்தான் அருளுக்கு விளக்கமாக ''மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்'' [3] என்று வள்ளுவம் அருளாளரை இனங் காட்டுகின்றது. எவ்வுயிருக்கும் செந்தண்மை பூண்டு வாழ்கின்ற அருள் வாழ்க்கையே கருணை வாழ்க்கையாகும்.

வள்ளலார் கருணைக்கு உலகியலையும் ஆன்ம நெறிமுறையையும் ஒட்டி விரிவான விளக்கம் தருகின்ற வகையில் ''ஜீவ காருண்ய ஒழுக்கம்'' என்ற நூலை எழுதியுள்ளார். அதில், ''ஜீவகாருண்யம் விளங்கும் போது அறிவும் அன்பும் உடனாகி நின்று விளங்கும், அந்த உபகார சக்தியால் எல்லா நன்மைகளுந் தோன்றும். ஜீவகாருண்யம் மறையும் போது அறிவும் அன்பும் உடனாகி மறையும்-அதனால் உபகார சக்தி மறையும் - உபகார சக்தி மறையவே எல்லாத் தீமைகளுந் தோன்றும்,'' [4] என்று கூறியிருப்பது நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

இந்தக் கருணை எல்லா வகையான உயிர்களுக்கும், 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்' வாடுகின்ற வகையில் வளர்ச்சி பெறுகின்ற பொழுது 'பெருங்கருணையாக' உருவெடுக்கின்றது. வள்ளலார் இத்தகைய பெருங்கருணை வாழ்க்கை நிலையை அடைந்தபொழுது,

''அப்பாநான் வேண்டுதல்[5]கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்''

என்று கூறுகின்றார்.

தனிப்பெருங்கருணை என்பது முழுமையுமாக கருணையின் வடிவமாக மாறி விடுதலாகும். ''தான்'' என்ற நிலை போய், 'தன்னுயிர் தான் அறப் பெற்று, 'மன்னுயிர் எல்லாம்' ஒன்றாகக் காண்கின்ற ஒப்பற்ற

3. திருக்குறள் 244
4. ஜீவ காருண்ய ஒழுக்கம் - தூயமலர் பதிப்பகம், சென்னை-2, வெளியீடு-ஜூன் 65, -ப.5
5. திருவருட்பா 4079 (ஊரன் அடிகள் பதிப்பு)

நிலையே தனிப் பெருங்கருணை நிலையாகும். இது மனித உடலில் கை வரமுடியாத நிலை. மனிதன் தெய்வ நிலைக்கு உயர்கின்ற பொழுது, அவனால் தனிப்பெருங் கருணை வடிவமாதல் கூடும்.

இறைவன் தனிப்பெருங்கருணையாக இருக்கின்றானென்பதை வள்ளலார் கண்டு தெளிந்தார். ஆதலால் இறைவனை உணர்த்து-கின்ற சொற்றொடராக இது அமைந்தது. "பெருங்கருணை என்பது இறைவன் ஒருவனைத் தவிர்த்து ஏனைய உயிர்களிடம் பரிபூரணமாக ஒருபோதும் விளங்க முடியாது. அது சிறப்பான ஒப்பற்ற கருணையாகும். அதையே தனிப்பெருங் கருணை என்ற சொற்றொடர் குறிப்பிடுவதாக நாம் கருதலாம்,"[6] என்று அ.லெ. நடராஜன் கூறுகின்றார்.

கடவுளை அருளின் வடிவமாகக் காண்பதே சத்திய விளக்கமாக அமைவதை, "எல்லாம் வல்ல கடவுளின் எல்லாக் குணமும், ஆற்ற-லும், பயனும், அனுபவமும் நிரம்பிய தனிப் பெருந்தன்மையே இந்த அருளின் பொருளாகக் கொள்ள வேண்டும்.

கடவுளின் இந்த அருள்தான் இவ்வுலகுயிர்ப் பொருள்களுக்கெல்லாம் உண்ணின்று உதவி, யாவையும் விளங்கச் செய்துகொண்டும், மனிதப் பிறவியில் மெய்யறிவு உணர்வாய்த் தோன்றி, உண்மையை உள்ளபடி காணச் செய்தும், மனிதனில் அவனாகவே விளங்கி அருளனுபவத்தை விளைவித்தும் கொண்டிருக்கின்றதாகும். எனவே, உண்மை (அதாவது உள்ளான தன்மை) என்பதும், நிறை அருள் என்பதும் ஒன்றையே சுட்டினதாக அறிகின்றோம்,"[7] என்று சரவணானந்தா கூறுவது சிந்தனைக்கு ஊட்டமளிக்கின்றது.

**கடவுளின் வடிவம் :** ஒருருவம் இல்லா இறைவனை 'கலையுரைத்த கற்பனை'யாக எத்தனையோ வடிவங்களில் மக்கள் கண்டிருக்கின்றனர். இறைவனது உருவங்களையே எத்தனையோ தத்துவங்களுக்கு அடை-யாளமாகப் படைத்து வைத்திருப்பதாக விளக்கம் கூறுகின்றனர். இடைப்பட்ட காலத்தில் மக்களை நெறிப்படுத்த இறைவனைக் கொடுமையானவனாக உருவகப்படுத்தி அவனது தண்டனைகள் கடுமை-யானவைகளாக இருக்குமென்று கூறுகின்ற போக்கு மேலோங்கியது.

6. வள்ளலார் வாழ்வும் வாக்கும், இராமலிங்கர் பணிமன்றம், சென்னை, முதற்பதிப்பு, 1974 ப. 250
7. அருள் அறிவியல் (அல்லது) மெஞ்ஞான விஞ்ஞானம், வெளியீடு 1974, ப. 96

இந்த நிலையில் வள்ளலார் இறைவனைக் கருணையின் முழு நிறை வடிவமாகக் கண்டது ஒரு தனித்தத்துவ விளக்கமாக அமைகின்றது.

வள்ளலார் இறைவனை அருளின் வடிவமாகவே கண்டு கூறுகின்றதை,

''அருட்பெரு வெளியில் அருட்பெரு உலகத்
தருட்பெருந் தலத்துமேல் நிலையில்
அருட்பெரும் பீடத் தருட்பெரு வடிவில்
அருட்பெருந் திருவிலே அமர்ந்த
அருட்பெரும் பதியே அருட்பெரு நிதியே
அருட்பெருஞ் சித்திஎன் அமுதே
அருட்பெருங் களிப்பே அருட்பெருஞ் சுகமே
அருட்பெருஞ் சோதிஎன் அரசே''[8]

என்ற பாடல் தெளிவாகக் காட்டுகின்றது.

இறை சக்தி தனிபெருங்கருணையாக வெளிப்படுவதை அனைவராலும் உணர முடிவதில்லை. இதனாலேயே இந்த உலகத்தில் இறைவனைப் பற்றிய மயக்கங்கள் பரவியுள்ளன.

இறைவனிடம் ஒரு இயல்பாக கருணையை (தயையை, அருளை) எல்லாச் சமயங்களும் ஏற்றுக் கொள்கின்றன. ஆனால் அந்தக் கருணையாய் அமைந்த பொருளைத் தாங்கள் உணர்ந்த அறிந்த வகையே சரியென்று நிலை நாட்டிக் கொள்ள கருணையற்ற வழிகளைப் பின்பற்றுவதால் சமயச் சண்டைகள் ஏற்படுவதைக் காண்கின்றோம்.

இறைவனைத் தனிப்பெருங்கருணையாக உணர்வது ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்கு வழி வகுக்கின்றது. எல்லா ஆன்மாக்களும் இறைவனின் தனிபெருங்கருணையின் விளைவுகள் என்றும், இறைவன் என்ற பெருஞ் சக்தியின் சிறு துளிகள் என்றும் உணர்கின்ற பொழுது மனிதர்களை வேறுபடுத்தும் மாயத்திரைகள் மறைகின்றன. ''நான்'' ''நீ'' ''அது'' ''இது'' என்ற வேறுபாடற்ற நிலையில் எல்லாவற்றையும் இணைக்கும் சக்தியாகத் 'தனிப்பெருங்கருணை' இருக்கின்றது.

**பிறவிப் பயன் :** வள்ளலாரின் தத்துவப்படி, இந்தப் பிறவியின் நோக்கம் மரணமிலாப் பெருவாழ்வைப் பெறுவதாகும். மரணமிலாப்

8. திருவருட்பா 4617 (ஊரன் அடிகள் பதிப்பு)

பெருவாழ்வென்பது இந்த ஊனுடலை ஒளியுடலாக மாற்றி, தனிப்-பெருங்கருணையாகவும் அருட்பெருஞ்சோதியாகவும் 'இருக்கின்ற இறைவனோடு இரண்டறக் கலப்பதாகும். இதனைப் பெறவே வள்ளலார் முயன்று வெற்றி கண்டாரென்பதை அவரது வரலாறு காட்டுகின்றது.

வழிமுறை : தனிப்பெருங்கருணையின் வடிவமாக இருக்கின்ற இறைவனை அடைய ஏற்ற வழிமுறையாக 'எவ்வுயிர்க்கும் கருணை செய்தலே' இருக்க முடியுமென்பதே வள்ளலார் கூறிய சத்திய மொழி-யாகும். இதனை ''ஜீவகாருண்ய ஒழுக்கம்'' நூல் பலபட விளக்கிக் கூறுகின்றது.

வள்ளலார் ''ஜீவகாருண்ய ஒழுக்கத்தினல்வரும் விளக்கமே கடவுள் விளக்கமென்றும்—ஜீவகாருண்ய ஒழுக்கத்தினல் வரும் இன்பமே கடவுள் இன்ப மென்றும் இவ்விளக்கத்தையும் இன்பத்தையும் பலகால் கண்டு அனுபவித்துப் பூர்த்தி யடைந்த சாத்தியர்களே ஜீவன் முத்தரென்றும் அவர்களே கடவுளை அறிவால் அறிந்து கடவுள் மயம் ஆவார்கள் என்றுஞ் சத்தியமாக அறியவேண்டும்'',[9] என்று கூறுகின்றார்.

வள்ளலார் இறைவன் பெயரால் கொடுக்கப்பெறுகின்ற பலியைக் கொடுமையானதாகக் கருதுகின்றார். சடங்குகளை ஏற்றுக் கொள்ள-வில்லை. சமயங்களை எல்லாம் 'பிள்ளை விளையாட்டாகக்' கருதுகின்ற வள்ளலார் கருணை செய்கின்றபொழுது கிடைக்கின்ற 'ஆன்ம உருக்கத்தையே தெய்வ வழிபாடாக எண்ணுகின்றார்.

வள்ளலார் தாம் பெற்ற இன்பத்தை இந்த உலகோரும் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு, இரக்கத்தால் தமது தத்துவத்தை எடுத்துரைக்க ''சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தைத்'' தோற்றுவித்தார். நெஞ்சில் தயையுடையாரெல்லாம் அந்தச் சங்கத்தில் சேரலாமென்று அறிவித்தார்.

வள்ளலார் 'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணுகின்ற' தனிப்பெருங்கருணையை 'ஆன்ம நேய ஒருமைப் பாட்டுரிமை' யாக உலகில் பரப்பினர். அவரது 'இறை விண்ணப்பம்' அவரது தத்துவத்தின் உயிர்நாடியைத் தொட்டுக் காட்டுகின்றது.

9. ஜீவகாருண்ய ஒழுக்கம், தூய மலர் பதிப்பகம் 1965, ப. 5

''எல்லா முடைய அருட்பெருஞ் சோதி அற்புதக் கடவுளே. அது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடையாகிய சமயங்கள், மதங்கள் மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும் வருணம் ஆசிரம முதலிய உலகாசரர சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்தில் பற்ருத வண்ணம் அருள்செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்-விதத்தும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தல் வேண்டும்'' என்பதே அவருடைய விண்ணப்பமாகும்.

தனிப்பெருங்கருணைத் தத்துவம் இறைவனை உயிர்க்குலத்திற்குத் தொண்டு செய்வதன் மூலம் அடைய முடியுமென்பதை தெளிவாகக் கூறுகின்றது. இது இருப்பவர்களும், இல்லாதவர்களும், வலியவர்களும் மெலியவர்களும் கற்றவர்களும் கல்லாதவர்களும் பின்-பற்றக் கூடிய வழிமுறையாகும்.

உலக வரலாற்றில் சமயத்தின் பெயரால் நடைபெற்ற எத்தனையோ வன்முறைகளைப் பற்றியக் குறிப்புகள் காணப்படுகின்றன. அன்பைக் கற்றுக் கொடுக்கத் தோன்றிய சமயத்தைச் கட்டிக் காக்கப் போவதாகக் கூறிக்கொண்டே போரிட்ட நிகழ்ச்சிகளும் உலகில் நடைபெற்றுள்ளன.

வள்ளலார் 'கொலை நெறியிலே'' செல்கின்ற மக்கள் கூட்டத்தை ''அருள் நெறியில்'' செலுத்துவதைத் தனது தலையாய நோக்கமாகக் கொண்டார். தனிமனிதர்களின் வாழ்வில் கலந்துவிட்ட கருணைக்குப் புறம்பான செயல்களைப் படிப்படியாக குறைக்க முயன்ருர். தன்னைப் பின்பற்றி வந்தவர்களின் உள்ளத்தில் இந்தப் புரட்சிகரமான மாற்றத்தை விளைவிக்க எத்தனையோ முறைகளைப் பின்பற்றினர்.

வள்ளலாரின் ''அகஇனம்'', ''புறஇனம்'' என்ற வேறுபாடு அவருடைய ''கருணைத் தத்துவத்தின்'' அடிப்படையில் தோன்றிய-தாகும். உலகில் பெரும்பாலான மக்கள் புலால் உண்கின்றவர்-களாக இருக்கின்றனர். வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே

> ''தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்
> எங்ஙனம் ஆளும் அருள்''[10]

10. திருக்குறள் 251

என்று கூறியிருக்கின்றார். புத்தர், மகாவீரர் போன்ற ஆன்ம ஞானிகள் கொல்லாமை விரதத்தை முன் வைத்து சமயங்களையே உருவாக்கினார்கள். இருந்தாலும் கொல்லாமை நிற்கவில்லை.

மனிதர்களைக் கொல்வதைப் பாவமென்று நாகரிக முதிர்ச்சிபெற்ற எல்லா நாடுகளும் ஏற்றுக் கொண்டு, அதனைத் தடுக்கச் சட்டம் செய்திருக்கின்றனர். ஆனால் பிற உயிர்களைக் கொலை செய்வதைப் பற்றிப் பேசினாலும், "அது ஒரு தவிர்க்க இயலாதமண்ணுலகில் உயிர்வாழ - மேற்கொள்ள வேண்டிய பாவமென்று கருதுகின்றனர். இதனால் பிற உயிர்க்கொலை அனுமதிக்கப்படுகின்றது.

வள்ளலார் "வன்புடையார் கொலைகண்டு புலை உண்பார்"[11] "கொடியவரே கொலை புரிந்து புலை நுகர்வார்"[12] என்ற உண்மையைக் கூறுகின்றார். சமுதாயத்தில் கொலை செய்யாமலே - மற்றவர்கள் கொன்று தருகின்ற ஊனை உண்டு வாழ்கின்றவர்கள் இருக்கின்றனர். இவர்கள் தாங்கள் கொலை செய்வதாக எண்ணுவதில்லை. நேரடியாக இவர்கள் கொலை செய்யாவிட்டாலும் மறைமுகமாக இவர்கள் உயிர்க்கொலை நிகழக் காரணமாக இருக்கின்றனர். ஆதலால் இவர்களை "அருளாளர்கள்" கூட்டமான "அக இனத்தோடு" சேர்த்துக் கொள்ள இயலாது. அவர்கள் "புற இனத்தவராக" இருப்பார்கள் என்பதை,

"உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பும் உடையவர்கள் எல்லாம்
உறவினத்தார் அல்லர்அவர் புறஇனத்தார் அவர்க்குப்
பயிர்ப்புறும்ஓர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக
பரிந்துமற்றைப் பண்புரையேல் நண்புதவேல் இங்கே
நயப்புறுசன் மார்க்கம்அவர் அடையளவும் இதுதான்
நம்ஆணை என்றெனக்கு நவின்றஅருள் இறையே
மயர்ப்பறுமெய்த் தவர்போற்றப் பொதுவில்நடம் புரியும்
மாநடத்தென் அரசேஎன் மாலைஅணிந் தருளே"[13]

என்று கூறுகின்றார். இதில், "நயப்புறு சன்மார்க்கம் அவர் அடையளவும்" என்ற வரி கவனிக்கத் தக்கது. இன்று புற இனத்தவர்களாக இருப்பவர்கள் நாளை அக இனத்தவர்களாக மாறலாமென்ற நம்பிக்கையோடு வள்ளலார் இருந்ததை இது காட்டுகின்றது.

---

11. திருவருட்பா 4161
12. ,, 4162
13. திருவருட்பா 4160

நாட்டில் கொள்கைச் சமயம் நலிந்த நிலையில் போலிச் சடங்குகளை வளர்த்தவர்கள் சிறுதெய்வ வழிபாட்டைத் தோற்றுவித்து, தெய்வங்களுக்குப் பலி கொடுக்கின்ற பழக்கத்தையும் ஏற்படுத்தினர்கள். கருணையற்ற முறையில் கருணை வடிவமான கடவுளை அடைய முயலும் இந்த அறியாமையான முறையை வள்ளலார் கடுமையாகக் கண்டித்தார். பலிகொடுக்கும் நாகரிகமற்ற முறையைக் கண்டு தனது உள்ளம் பட்ட பாட்டை,

''நலிதரு சிறிய தெய்வமென் றையோ
நாட்டில் பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள்
பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே
புந்திநொந் துளநடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்
கண்டகா லத்திலும் பயந்தேன்''[14]

என்று கூறுவது குறிப்பிடத்தக்கது.

இறைவனைத் தனிப்பெருங்கருணையாகக் கண்ட வள்ளலார் கருணை சார்ந்த வழிமுறைகளின் மூலமே இறைவனை அடைய முடியுமென்பதைப் பல வழிகளிலும் விளக்கியிருக்கின்றார்.

நிறைவுரை : வள்ளலாரின் ''தனிப்பெருங்கருணை'' யைப் புரிந்து கொண்டால் மட்டும் போதாது; அதனை நாம் உள்ளத்தின் நெகிழ்ச்சியால் உணர வேண்டும். உள்ளம் கருணையினை உணர்ந்து, அது நமது செயலில் வெளிப்படுகின்றபொழுது, இறைவனை உணர்கின்ற பக்குவம் நமக்குக் கிடைக்கும். அந்த நிலையை எல்லோரும் அடைய வேண்டுமென்பதே வள்ளலாரின் பெரு விருப்பமாகும். □

---

*14. திருவருட்பா 3472*

# 8. அருட்பெருஞ் சோதி

உள்ளொளி பெருக்கி மெய்யறிவால் இறையருள் கண்ட வள்ளலார் வழங்கிய மகாமந்திர மொழியாக,

> *''அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி*
> *தனிப் பெருங்கருணை அருட்பெருஞ்சோதி''* என்னும்

உயிர்மொழி அமைந்திருக்கின்றது. எண்ணிப் பார்த்தால் இதுவே வள்ளலார் உருவாக்கிய சன்மார்க்க தத்துவத்தின் சாரம் என்று கூறலாம். வள்ளலார் பல்வேறு பாக்களில், உரைநடை ஓவியங்களில் வண்ணக் கனிகளாகக் காட்டுகின்ற கருத்துக்களைப் பிழிந்து தந்த தத்துவ சத்தியச் சாருக இந்தச் சொற்கள் அமைந்து விளங்குகின்றன.

**நோக்கமும் வழிமுறையும் :** மனித வாழ்வின் நோக்கம் எல்லாம் வல்ல, எல்லாமுமாய் எல்லாவற்றிலும் இரண்டறக் கலந்து நிற்கின்ற இறைவனை இனங்கண்டு, தனித்துப் பிரித்து உயர்ந்து, அறிந்து அடைவதென்று மெய்ஞ்ஞானிகள் எண்ணுகின்றனர். இந்த இறைவனை எண்ணற்ற பெயர்களால் குறித்து, எப்படி அடைவதென்று தங்களது உள்ளுணர்விற்கும் பட்டறிவிற்கும் ஏற்ப எத்தனையோ அறிஞர்கள் கூறியிருக்கின்றனர். வள்ளலார் இறைவனை, ''தனிப் பெருஞ்சோதியாக'' இனங்கண்டு, அவனை அடையும் வழிமுறையாக ''தனிப்பெருங்கருணை''யை-உயிரிரக்கத்தைக்-கூறுகின்ருர்.

''அருட்பெருஞ்சோதி'' ஆண்டவன் என்று வள்ளலார் வரையறுத்துக் கூறுகின்ற அடிப்படைக் கருத்து அவரது ''மரணமிலாப் பெருவாழ்வுத் தத்துவத்திற்குத்'' திறவுகோலாக இருக்கின்றது. ஆதலால் அதனைப் பற்றி எண்ணிப் பார்த்துத் தெளிவு பெறுவது தேவையாகின்றது.

**சொற்றொடர் விளக்கம் :** அருட்பெருஞ்சோதி என்ற சொற்றொடரில் ''அருள்'', ''பெரும்'', ''சோதி'' என்னும் மூன்று தனிச்சொற்கள் இணைந்திருக்கின்றன. மூன்று சொற்களுக்கும் தனித்தனியாக, மேற்போக்காக விளங்கும் பொருள் எல்லோருக்கும் தெரியும்.

அருளை அன்பின் கனிவாகக் கருதுகின்றோம். 'அன்பீன் குழவி' யான அருளை 'கருணை' என்ற சொல்லாலும் விளக்கலாம். தியாகத் திற்கும் தன்னையே வழங்குவதற்கும் அடிப்படையாக இருக்கின்ற அன்பிற்கும் வரையறைகள் - எல்லைகள் - கரைகள் - தடைகள் இருக் கின்றன. பண்பட்ட, நெறிப்படுத்தப் பெற்ற, அன்பில் தோய்ந்த உள்ளத்தில் பிறக்கின்ற அருள் எல்லையற்றதாக, வேறுபாடற்றதாக, எவ்வுயிரையும் தம்முயிர் போல் எண்ணுவதாக, பகைவனுக்கும் துணை நிற்பதாக அமைகின்றது. ஆதலால்தான் இறையன்பை 'இறையருள்' என்கின்றோம்.

திருவள்ளுவர் அருளின் சிறப்பைக் கூறும் வகையில் ''அருளுடைமை'' என்னுந் தனி அதிகாரத்தையே அமைத்திருக்கின்றார். அதில்

> ''அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருள்செல்வம்
> பூரியார் கண்ணும் உள'' (241)

என்று கூறுவதன் மூலம் அருள் அழியாத செல்வமாக, செல்வங்களி லெல்லாம் தலைசிறந்த செல்வமாக இருப்பதனைச் சுட்டிக் காட்டு கின்றார். மேலும்,

> ''அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
> இவ்வுலகம் இல்லாகி யாங்கு'' (247) என்றும்

> ''பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
> அற்றார்மற் றாதல் அரிது'', (248)

என்றும் கூறி அருளின் இன்றியமையாத் தேவையை விளக்குவதைக் காண்கின்றோம்.

அருளினை நெஞ்சில் வளர்க்காமல் ஆன்மீக வாழ்க்கையை மேற்கொள்ள முடியாது. அருளை வளர்க்க முயற்சி தேவை. உள்ளத்தில் மருள் என்னும் இருள் நிறைந்திருக்கின்ற வரை அருள் தலை தூக்காது. அருளாய் இருக்கின்ற இறைவனை உணர நம்மிடமும் அருள் தேவைப்படுகின்றது. இறைவனை அருளாய் உணரத் தொடங்கினால், நம்மிடம் அருள் முளை தோன்றுமென்று வள்ளலார் சுட்டிக் காட்டுகின்றார்.

''பெரும்'' என்பது 'மகா' என்ற வட சொல்லைப் போன்றது. மிகப் பெரியதாக, ஒப்பற்றதாக, அளப்பரியதாக இருப்பதனை 'பெரும்'

என்ற அடைமொழியால் குறிக்கின்றோம். இங்கு 'பெரும்' என்ற சொல் சோதியை சிறப்பிக்க, அதன் அளவற்ற தன்மையைக் கூறப் பயன்படுத்தப் பெறுகின்றது.

சோதி என்பதனை மூன்று நிலைகளில் - அதனைத் தருகின்ற பொருட்களின் அடிப்படையில் பிரித்துப் பார்க்கின்றனர். விளக்கு, சுடர், சோதி என்று அவற்றை வகைப்படுத்துவதுண்டு.[1] இம்மூன்றையும் இணைத்து, இறைவனை அழைக்கின்ற வகையில்,

> ''அருள்விளக்கே அருட்சுடரே அருட்சோதிச் சிவமே
> அருள்அமுதே அருள்நிறைவே அருள்வடிவப் பொருளே''[2]

என்று வள்ளலார் கூறுகின்றார்.

இந்த மூன்றில் 'விளக்கு' என்பது மனிதன் தனது விழைவுக்கேற்ப உருவாக்கி, எண்ணம் போல் ஏற்றக் கூடியதாய் இருக்கின்றது. ஒருவகையில் கட்டிக் காக்குமளவிற்கே நிற்கக் கூடியது. வேண்டுமிடத்திற்கு எடுத்துச் செல்லத் தக்கது. சூரியன், சந்திரன், தீ ஆகியவற்றிடமிருந்து கிடைப்பதனைச் சுடர் என்கின்றனர். விளக்கும் சுடரும் கண்ணுக்கு முன்னால் காட்சி தரக் கூடியவை. இவை உலகில் கவியும் புற இருளை அகற்றக் கூடியவை. ஆனால் ''சோதி என்பது எல்லை இல்லாததாய், காண்பதற்கரியதாய், அகவிருளைப் போக்குவதாய் அமைந்துள்ளது''.[3]

'அருள்' 'பெரும்' 'சோதி' என்னும் மூன்று தனிச் சொற்களும் இணைகின்ற பொழுது, ஒரு புதிய ஆழமான பொருள் விளக்கம் பெறுகின்றது. இதனை, ''இறைவன், எல்லை காண்பரிய அகண்ட பிரபஞ்சத்தில் நிறைந்து நிலைத்து உள்ளவர் என்றும், எல்லாப் பொருள்களுக்கும், எல்லா ஆற்றல்களுக்கும், எல்லா உயிர்களுக்கும், எல்லாச் செயல்களுக்கும் மற்றெல்லாவற்றிற்கும் ஆதார காரணமாய் இருக்கின்றவர் என்றும் உணர்ந்து கொண்டுள்ளோம். அப்படியுள்ள இறைநிலை நிறைந்த வெளிநிறைவொளியாகவே இருக்கின்றதாம். அந்த நிறையொளி ஒன்றே போக்குவரவற்ற பரிபூரணமாய் நிலைத்திருந்து தொண்டு தன் உண்மையை வெளியிடயாவுமாய்த்

---

1. சு. சிவகாமசுந்தரி ''வள்ளலார்'' 4. 93
2. திரு அருட்பா 4090
3. சு. சிவகாமசுந்தரி, ''வள்ளலார்'' ப. 93.

தோன்றியுள்ளதாம். அந்த ஆதாரப் பேரொளியின் தன்மைதான் எல்லாமாம், பேரருள் கொண்டதாம். ஆகவே, அந்த இறையருட் பெரும் ஒளியையே நம் அருட்பெருஞ்சோதியாக அறிந்து கொள்ள வேண்டும். இந்த அருட்பெருஞ்சோதிக்கு இணை வேறு எதுவும் கிடையாது. இதுவே உலக ஒளிகள் எல்லாம் விளங்க காரணமாம், இவ்வொளிக்கு இயல்பாய் உள்ள அந்த அருட்பெருந் தன்மையால், இந்த மகா பிரபஞ்சமும், இதன் கண் ஆக்கலாதி ஐந்தொழிற் செயல்களும் அளவில் நெடுங்காலமாகவே நடந்து கொண்டே யிருக்கின்றனவாம்''[4] என்று சரவணனந்தா விளக்குகின்ருர்.

''அருட்பெருஞ் சோதி'' என்பதனை ஊன்றிக் கவனித்தால் ஒருண்மை வெளிப்படும். இறையருள் சோதியாக வெளிப்படுகின்ற-தென்று கூறலாம். அருளே பெருஞ்சோதியாக உருவெடுப்பதை ஆன்ம ஞானிகள் உணர்கின்றனர். அருளும் சோதியும் உருவ-மற்றவை. ஒன்றை மற்ருென்று உருவகமாக நின்று விளக்கக் கூடியவை. இவை இணைந்து இறைவனின் இயல்பினை விளக்குகின்றன.

இறைவனுக்கு எண்ணற்ற உருவங்களையும் பெயர்களையும் மனிதர்கள் படைத்திருக்கின்றனர். இறைவனின் உருவ - பெயர் வேறுபாடுகளினுலேயே மக்களுக்குள் சண்டைகளும் கலகங்களும் நடப் பதைப் பார்க்கின்ருேம். ஆனல், இறைவனைப் பொது இயல்புகளி ஞல் அழைக்கின்ற பொழுது கருத்து வேறுபாடு தோன்ற இடமில்லை. இறைவனை அருள் வடிவமாகவும், பெருஞ்சோதி உருவமாகவும் எண்ணிப் பார்க்கின்ற போக்கு எல்லாச் சமயங்களிலும் காணப் பெறுகின்றது.

பல வகைகளிலும் 'அருட் பெருஞ் சோதி' யின் அகக்கருத்து எண்ணிப் பார்த்து மனங்கொள்ளத்தக்கதாகும்.

ஒளியுரு இறைவன்: இறைவனை ஒளியுருவில் காண்பதும், வழிபடு வதும் உலகில் புதியதில்லை. வேதகாலத்திற்கும் முன்பிருந்தே தீயைத் தெய்வமாக வழிபடுகின்ற பழக்கம் உலகெங்கும் இருந்திருக்கின்றது. தீயினை வழிபட்டதைப் போன்றே கதிரவனை வணங்கி வந்திருக்கின் றனர். இறைவனைப் பற்றிய தத்துவம் முழுமை பெறுவதற்கு முன்பே ஒளிவழிபாடு வந்துவிட்டது.

---

4. அருள் அறிவியல் (அல்லது) மெய்ஞ்ஞான விஞ்ஞானம், ப. 99-100

உருவமாகவும், அருவமாகவும் இருக்கின்ற இறைவனை உருவகப் படுத்த ஒளிதான் சிறந்ததென்று கருதியிருக்கலாம். ஒளிக்கு குறிப்பிட்ட உருவம் இல்லை. ஒளி தன்னகத்தே ஆக்குகின்ற, காக்கின்ற, அழிக்கின்ற ஆற்றலைப் பெற்றிருக்கின்றது.

மாணிக்கவாசகர் இறைவனை ''ஆதியும் அந்தமும் இல்லா அருட் பெருஞ்சோதி'' என்றும், ''சோதியே சுடரே சூழொளி விளங்கே'' என்றும் கூறுகின்றார். ''சோதி வானவன்'' என்று அப்பர் பெருமானும், ''ஆதியாய நான் முகனும் மாலும் அறிவரிய சோதியானே'' என்று சம்பந்தரும் கூறியிருப்பது நினைக்கத்தக்கது.

**வள்ளலார் கண்ணோட்டம்:** வள்ளலார் அருட்பெருஞ் சோதியாய் விளங்குகின்ற பரம்பொருளை உணர்ந்ததையும் கண்டதையும் பல பல இடங்களில் வெவ்வேறு வகைகளில எடுத்துரைக்கின்றார்.

''அன்பனே யப்பா அம்மையே அரசே அருட்பெருஞ்சோதியே'' என்று அழைக்கின்ற வள்ளலார், தான் அருட்பெருஞ்சோதியைப் பெற்றதை,

*''அமரரு முனிவரு மதிசயித் திடவே*
*அருட்பெருஞ் சோதியை யன்புட னளித்த*
*கமழுறு சிவநெறிக் கேற்றியென் றனையே*
*காத்தென துளத்தினிற் கலந்தமெய்ப் பதியே''* என்றுகூறி,

*ந''ாடல் செய்கின்றேன் அருட்பெருஞ் சோதி நாதனை என்னுள்ளேகண்டு*
*கூடல் செய் கின்றேன் எண்ணிய வெல்லங் கூடியே''*

என்று சொல்கின்றார்.

இறைவனையே அருட்பெருஞ்சோதியாகக் கண்ட வள்ளலார் அந்தச் சோதியை நமது உள்ளத்தில் உருவாக்கினல் அந்த ஒளியின் துணைகொண்டு முழுமுதற் பரம்பொருளைக் காணலாமென்று கூறுகின்றார். இதனை

*''தவருத வேதாந்த சித்தாந்த முதலாச்*
*சாற்றுகின்ற அந்தமெலாந் தனித்துரைக்கும் பொருளை*
*இவருத சுத்தசிவ சன்மார்க்க நிலையில்*
*இருந்தருளாம் பெருஞ்சோதி கொண்டறிதல் கூடும்''.*

என்று கூறுகின்றார்.

நமது அகத்தை இருள் மூடியிருக்கின்றது. இந்த இருள் அகலாமல் ஆன்மா விடுதலை பெறப் போவதில்லை. இந்த மாயை இருளைப்பற்றிய சமயங்கள் கூறுகின்றன. வள்ளலார் ஒரு தலைவி தோழியிடம் கூறுவது போல அக இருளில் மூழ்கியிருக்கும் ஆன்மாவின் இருளை உருவகமாக,

''ஏற்றிடுவே தாகமங்கள் ஒளிமயமே எல்லாம்
என்றமொழி தனைநினைத்தே இரவில்இருட் டறையில்
சாற்றிடுமன் பாத்திரத்தை மரவட்டில் களைக்கல்
சுட்டிகளை வேறுபல சார்ந்தகரு விகளைத்
தேற்றமிகு தண்ணீரைச் சீவர்கள் பற் பலரைச்
செப்பியஅவ் விருட்டறையில் தனித்தனிசேர்த் தாலும்
ஊற்றம்உறும் இருள்நீங்கி ஒளிகாண்ப துளதோ
உளதேல்நீ உரைத்தமொழி உளதாகும் தோழி'' என்று

பாடுவது ஆன்மாவில் ஒளிசேர்க்க வேண்டிய இன்றியமையாத் தேவையை நமக்குக் காட்டுகின்றது.

''வெண்ணிலாக் கண்ணியில்'' காணுகின்ற கருத்துக்கள் நமக்குள் ஒளியுருவாய் இலங்குகின்ற சக்தியைக் காணவிட்டால் வாழ்க்கையில் இன்பமோ முக்தியோ பெற முடியாதென்பதைத் தெள்ளத் தெளிவாகக் கூறுகின்றன. எடுத்துக்காட்டாக,

''தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே ஒரு
தந்திர நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே''.
''முப்பொருளு மொன்றதென்பார் வெண்ணிலா வே-அந்த
மூன்றுமொன்ருய் முடிந்ததென்ன வெண்ணிலா வே.
நானதுவாய் நிற்கும்வண்ணம் வெண்ணிலா வே-ஒரு
ஞானநெறி சொல்லுகண்டாய் வெண்ணிலா வே.
ஞானமய மாய்விளங்கும் வெண்ணிலாவே-என்னை
நானறியச் சொல்லுகண்டாய் வெண்ணிலாவே,'' என்னும்

வரிகளைக் கூறலாம்.

வள்ளலார் இறைவனை மட்டும் ஒளிவடிவில் கண்டதோடு மற்றைய மெஞ்ஞானிகளைப் போல நின்று விடவில்லை. தனது உடலும் ஒளியுடலாகி அழியாமலிருக்கின்ற மரணமிலாப் பெருவாழ்வைப் பெற்றுவிட முயன்று பேரருளால் பெற்ருர். தனது நிலையை,

"விரைந்து விரைந்து படிகடந்தேன்
மேற்பால் அமுதம் வியந்துண்டேன்
கரைந்து கரைந்து மனம்உருகக்
கண்ணீர் பெருகக் கருத்தலர்ந்தே
வரைந்து ஞான மனம்பொங்க
மணிமன் றரசைக் கண்டுகொண்டேன்
திரைந்து நெகிழ்ந்த தோலுடம்பும்
செழும்பொன் உடம்பாய்த் திகழ்ந்தேனே" என்றும்
"அருட்சோதி யானேனென் றறையப்பா முரசு
அருளாட்சி பெற்றேனென் றறையப்பா முரசு
மருட்சார்பு தீர்ந்தேனேன் றறையப்பா முரசு
மரணந்த விர்ந்தேனென் றறையப்பா முரசு" என்றும்

கூறியிருப்பதும் மனங்கொள்ளத்தக்கவையாகும்.

திருவிளக்கு வழிபாடு: வள்ளலார் திருவிளக்கு வழிபாட்டைத் தொடர்ந்து செய்யுமாறு தமது அன்பர்களுக்குக் கூறியுள்ளார். திருவிளக்கு–அதில் திகழ்கின்ற முத்துச் சுடரொளி ஓர் அடையாளக் குறிப்பாக-அருட்பெருஞ்சோதியை மறைமுகமாகச் சுட்டிக் காட்டுவதாக இருக்கின்றது.

புறப்பற்றில் பரவலாகச் சுற்றித்திரிகின்ற மனம் கட்டுப்பட்டு, அகமுகமாகத் திரும்பி தன்னையறிகின்ற பொழுது, புறத்தில் காணும் தீப ஒளியை அகத்தில் காண்பார்கள். அகத்தில் ஒளிபிறந்த பிறகு அறியாமை இருள் அகன்றுவிடும். பாதை தெரியும். அடைய வேண்டிய இடத்தை அடைந்துவிடலாம். இருளில் நடக்கக் கிடைக்க வேண்டிய கைவிளக்காக அருட்பெருஞ் சோதி இருக்கின்றது.

விளக்கு வழிபாட்டை வெறும் சடங்காக மாற்றுவதை வள்ளலார் விரும்பவில்லை. தான் அமைத்த 'சத்திய ஞான சபை' யிலும் வழிபாட்டுப் பொருளாக வள்ளலார் விளக்கொளியை அமைத்திருக்கின்றார். அதன் மூலமாக வள்ளலார் உணர்த்த விரும்பிய மெய்ப்பொருளை விளங்கிக் கொண்டால்தான் விளக்கு வழிபாட்டின் பயன் கிடைக்கும்.

இறைவன் ஒளியாக இருப்பதை விளக்கு உணர்த்துகின்றது. இந்தப் புறக் குறியீட்டின் அடியொற்றி ஒருவர் சென்றால், அவரது புறமனம் அகமுகமாகத் திரும்பி உள் மனத்தில் ஒன்றும் பொழுது புற ஒளி கண்ணில் தெரியாது. உள்ளொளி அடிமனத்திலிருந்து தோன்றி

அகமெங்கும் நிறைவதைக் காண்பார். அந்த நிலையில் உள்ளொளியின் துணையால் ஒளியுருவாக இருக்கின்ற இறைவனைக் கண்டடைய இயலும்.

'சித்துருவாக' இறைவன் இருப்பதனை உணர்ந்து கூறுகின்றனர். அறிவுக்கும் வடிவமில்லை. மெய்யறிவை விளக்க முயல்கின்றவர்கள், ''இருளை ஒளி அகற்றுவதைப் போல அறியாமையை அறிவு அகற்றுகின்றது'', என்கின்றனர். அறிவையும் ஒளியையும் இந்த வகையில் ஒன்று படுத்துவதைக் காணலாம். ஆதலால் சித்துருவாக இறைவனை எண்ணுபவர்களும் இறைவனுக்கு ஒளியுருவம்' உண்டென்பதை ஏற்றுக் கொள்கின்றனர்.

நிறைவுரை: வள்ளலார் உருவாக்கித் தந்த, மக்களுக்கு உணர்த்த விரும்பிய கருத்துச் செறிவுள்ள சொற்றொடர்கள் சில இருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் ''அருட்பெருஞ்சோதி'' என்னும் கருத்து நிறை சொற்கோவையாகும். கையில் அருட்பெருஞ்சோதி கருத்து விளக்கோடு வள்ளலார் கட்டிவைத்த சன்மார்க்க தத்துவ ஞான சபைக்குள் சென்றால் புரியாத பல புதிர்கள் புரியக் காண்போம். நம்மையும் நமக்குள்ளிருக்கும் நாதனையும் அறிய அருட்பெருஞ்சோதி துணை நிற்கும். □

# 9. "வள்ளலார் கண்ட சமரச சுத்த சன்மார்க்க நெறி"

"எத்துணையும் பேதம் உருது எவ்வுயிரும் தம் உயிர் போல் எண்ணி, உள்ளே ஒத்து, உரிமையுடையவராய் உவக்கின்ற" உள்ளம் பெற்ற வள்ளலார் தாம் பெற்ற இன்பத்தை இந்த வையகத்தாரும் பெற்றுத் திளைக்க அருளிரக்கத்தால் வழங்கிய பெரு நெறியே சமரச சுத்த சன்மார்க்க நெறியாகும். இதனை அவர்,

*"ஏன் உரைத்தேன் இரக்கத்தால்*
*எடுத்துரைத்தேன் கண்டீர்*
*யான் அடையும் சுகத்தினை நீர்*
*தான் அடைதல் குறித்தே"*[1] என்று கூறுகின்றார்.

வள்ளலார் வகுத்தளித்த சமரச சுத்த சன்மார்க்க நெறியில் அவர் வாழ்ந்து கண்ட பேருண்மைகளும், இடையருச் சோதனைகளின் முடிவில் சாதனைகளாகப் பெற்றவைகளும், ஓதாதுணர்ந்த உயரிய ஞானக்கருத்துக்களும் அடங்குகின்றன. வள்ளலார் உள்ளொளி பெருக்கி உலகிற்கு வழிகாட்டியமுறை தனிவகையானது. வாழையடி வாழையென வந்த மரபில் நடைபயின்ற வள்ளலார், ஒரு நிலையில் தனக்கென வகுத்துக் கொண்ட தனிவழியில் சென்று மேல் நிலையை அடைந்ததை அவரது வரலாறு காட்டுகின்றது.

**சங்கம்:** வள்ளலார் தாம் கண்ட மெய் நெறிக்குச் செயலுருவம் கொடுக்கவும், தம்மைப் பின்பற்றி வருகின்றவர்கள் சரியான வழியில் திண்ணிய எண்ணத்தோடு நடக்கவும் 1865 ஆம் ஆண்டில் "சமரச வேத சன்மார்க்க சங்கத்தை" அமைத்தார். பின்னர் அதன் பெயரை "சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்" என்று மாற்றிக் கொண்டார். "தங்கமே அனையார் கூடிய ஞான சமரச சுத்த சன்மார்க்கச் சங்கம்" எதற்காகத் தோற்றுவிக்கப்பெற்றதென்றும் அதன் உயிர் மூச்சான நெறிகள் எவையென்றும், சன்மார்க்க நெறியில் செல்கின்றவர்கள்

---

1. திருவருட்பா

எவற்றைப் பெறுவார்களென்றும் திருவருட்பாவிலும் உரைநடைப் பகுதிகளிலும் பல நிலைகளில் குறிப்பாகவும், விளக்கமாகவும் கூறியிருக்கின்றார்.

**புதுநெறி :** இளமையில் முருகனை வழிபட்டு, ஞான வாழ்க்கை வளர்ச்சியில் சிவ பக்தராகவும், நடராச அன்பராகவும் விளங்கி, இறுதியில் அருட்பெருஞ்சோதி அடியவராகச் சித்திபெற்ற வள்ளலார் தான் கண்ட சன்மார்க்கமென்னும் தவநெறியை இறைவனே வழங்கிய புதுநெறியாகக் கருதுகின்றார். இதனை அவர்,

*'' பன்னெறிச் சமயங்கள் மதங்கள் என்றிடுமோர்*
*பவநெறி இதுவரை பரவியது இதனால்*
*சென்னெறி அறிந்திலர் இறந்திறந் துலகோர்*
*செறியிருள் அடைந்தனர் ஆதலின் இனிநீ*
*புன்னெறி தவிர்த்தொரு புதுநெறி எனும்வான்*
*புத்தமுதருள் கின்ற சுத்தசன் மார்க்கத்*
*தன்னெறி செலுத்துக என்றஎன் அரசே,*
*தனி நடராஜாஎன் சற்குரு மணியே.[2] ''*

என்று கூறுகின்றார்.

வள்ளலார்க்கு முன்பும் சமய வரம்புக்குள் நின்று சன்மார்க்கம் பேசிய சமயப்பெரியோர்களும், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று உலகப் பொதுமையும் ஒருமையும் உணர்த்திய கவிஞர்களும் தமிழகத்தில் இருந்தனர். ஆனால் ஆன்மநேய ஒருமைப் பாட்டின் அடிப்படையில் தானே உயிரிரக்கமாக மாறிய வள்ளலார் கூறுகின்ற சன்மார்க்கமும், அதனால் கிடைக்குமென்று அவர் உறுதியளிக்கின்ற மரணமிலாப் பெருவாழ்வுப் பேறும் தனியானவைகளாக இருப்பதனை ஆய்ந்து அறியலாம்.

வள்ளலார் சன்மார்க்க நெறியின் மூலமாக மனிதகுலத்தைப் பகுத்தும் பிரித்தும் வைக்கின்ற சாதி, சமய, மொழி, இனத்தடைகளை எல்லாம் தகர்த்தெறிந்து, மனிதர்களை ஒரு குடும்பமாக மாற்ற முயன்றார். ''மக்களை எல்லாம் ஒரு பெரிய மனுக்குலக் குடும்பமாக உருவாக்க விரும்பினர். இதனை அவர் சன்மார்க்கம் என்ற ஆற்றல்

2. *திருவருட்பா- 36 96*

மிக்க நெறியின் மூலம் கொண்டு வர விழைந்தார்''[3] என்று ஓர் ஆய்வாளர் குறிப்பிடுகின்றார்.

***சன்மார்க்கம்—சொல் விளக்கம் :***

சன்மார்க்கம் என்ற சொல்லை வள்ளலாரும், அவரது தத்துவத்தில் ஆழ்ந்து ஈடுபட்டவர்களும் விளக்கியுள்ளனர். இவற்றை அறிந்து கொள்வது சன்மார்க்க நெறி பற்றிய ஒரு தெளிவான கண்ணோட்டத்தை உருவாக்கிக் கொள்ளத் துணை செய்யும்.

வள்ளலார் 'ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கம்' என்பதனை விளக்கும் வகையில் ''சமரச வேத சன்மார்க்க சங்கம் என்பதற்குப் பொருள்: எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகிய அறிவுநூல் முடிவான நான்காவது மார்க்கத்தை அனுஷ்டிக்கின்ற கூட்டமென்று கொள்க. மேற்படி மார்க்கம் நான்காவன: தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என நான்கு''[4] என்றும் ஷடாந்த சமரச சுத்த சிவ சன்மார்க்கம் என்பதில் ஷடாந்தம் என்பது யாது? வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் ஆக ஆறு,''[5] என்றும், ''பூர்வத்தில் நின்ற சமயமத சன்மார்க்கங்களை மறுப்பது சுத்த சன்மார்க்கம்,''[6] என்றும் கூறியிருக்கின்றார்.

சாமி சிதம்பரனார், ''சத் என்பதற்கு உண்மை யென்பது பொருள் மார்க்கம் என்பதற்கு வழி அல்லது நெறியென்பது பொருள். சன்மார்க்கம் என்பதற்கு உண்மை நெறி என்று பொருள். சத்மார்க்கம் என்ற வடமொழித் தொடர் சன்மார்க்கம் என்று தமிழுருவாகி நின்றது. இதனுடன் சமரசம் சேர்ந்து சமரச சன்மார்க்கம் ஆயிற்று''[7] என்று கூறுகின்றார்.

சன்மார்க்கத்திற்கு ஓர் உயர்ந்த விளக்கத்தை, ''சமரச சன்மார்க்கம்'' என்னும் சொற்றொடர் 'எல்லோரையும் ஒற்றுமைப்படுத்தும் உண்மை நெறி' என்று பொருள்படுவதாகும். எல்லாரும்

3. T. V Y. Chetty, "Sri Chidambaram Ramalinga Swami, His Life, Mission and Studies". p. 62.
4. திரு அருட்பா--பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு--4ஆம் புத்தகம் ''உபதேசப் பகுதி'' --ப. 45
5. Ibid -- p.45
6. Ibid -- p.46
6. வடலூரார் வாய்மொழி ப.25

ஒன்றுபட்டு அளவளாவும்படி செய்யும் சன்மார்க்கமானது அவர் எல்லாருந் தழுவத்தக்க ஒரு பேருண்மையை இனிதெடுத்து விளங்க அறிவுறுத்துவதாகும். 'உண்மை' என்பது பொருள்களில் என்றும் நிலைபேருயுள்ள இயற்கையேயாம்,''[8] என்று மறைமலையடிகள் அளித்திருக்கின்ருர்.

வள்ளலார் கண்ட சன்மார்க்கத்தை ஒரு தனி மதமாகக் கருதக் கூடாதென்பதை வலியுறுத்துகின்ற வகையில், ''இந்த ஒரே தெய்வக் கோட்பாட்டில் அந்தத் தெய்வத்தின் அருளைப் பெறுவதற்கான வழி வகைகளையும் வள்ளலார் தொகுத்துத் தந்துள்ளார். அந்தத் தொகுப்புக்கு அவர் தந்த பெயர் 'சமரச சுத்த சன்மார்க்கம்' என்பதாகும். இதனை, ஏனைய மதங்களோடு இன்னெரு மதம் என்று எண்ணுவதற்கில்லை. மதங்களற்ற மானிட சமுதாயத்தைப் படைப்பதற்கான இயக்கமென்றே கொள்ள வேண்டும். அதனுற்ருன், 'சன்மார்க்கம்' என்னும் புனிதவாசகமே போதுமானதாகவிருக்க, 'சமரச சுத்த' என்னும் அடைமொழியையும் சேர்த்தார் திருவருட் பிரகாச வள்ளலார்,''[9] என்று ம. பொ. சிவஞானம் குறிப்பிடுகின்ருர்.

**அடிப்படைத் தத்துவம் :** சன்மார்க்க சங்க அமைப்பு முறையே அதன் அடிப்படைத் தத்துவத்தை விளக்குகின்றது. ,'சமரச சன்மார்க்க சங்கத்தின் தலைவர் எல்லாம் வல்ல கடவுள்; அமைச்சர் இயற்கை அன்னையார்; நிருவாக அங்கத்தவர் மெய்யறிவு பெற்று அருள்நெறி ஓம்பிய அடியவர்; சந்தா, தயை என்னும் அருள். இச்சந்தா செலுத்து வோர் அனைவரும் உறுப்பினராவர்.''[10]

உயிரிரக்கமே தன்னுருவமாக விளங்கிய வள்ளலார் தான் கண்ட அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணையான ஆண்டவனைச் சீவ-காருண்யத்தை வழிமுறையாகக்கொண்ட வாழ்க்கையின் மூலமாகவே பெற முடியுமென்பதை சன்மார்க்கத்தின் மூலம் வலியுறுத்தினுர். சன்மார்க்க தத்துவ விளக்கமாக அவர் திருவருட்பாவில் கூறியவற்றில் சிலவற்றை இங்குத் தொகுத்துக் கூறலாம்.

> ''தயையுடையயா ரெல்லாருஞ் சமரசசன் மார்க்கம்
> சார்ந்தவரே.''

---

8. *சைவ சித்தாந்த ஞானபோதம் ப. 51*
9. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு ப. 144
10. *திரு. வி. க. ''இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்'' ப. 1--2*

''அருளுடையா ரெல்லாருஞ் சமரசசன் மார்க்கம்
அடைந்தவரே.''

''செத்தவர்கள் எல்லாம் திரும்ப எழுந்து வரச்
சித்தம் வைத்துச் செய்கின்ற சித்தியனே—சுத்தசிவ
சன்மார்க்க சங்கத்தலைவனே நிற்போற்றும்
என்மார்க்கம் நின்மார்க்கமே''.

''நன்மார்க்கத் தவருள நண்ணிய வரமே
நடுவெளி நடுநின்று நடஞ்செயும் பரமே
துன்மார்க்க வாதிகள் பெறற்கரு நிலையே
சுத்தசி வானந்தப் புத்தமு துவப்பே
என்மார்க்க மெனக்களித் தெனையுமே லேற்றி
இறவாத பெருநலம் ஈந்தமெய்ப் பொருளே
சன்மார்க்க சங்கத்தார் தழுவிய பதியே
தனிநட ராசவென் சற்குரு மணியே''.

''கொலைபுரிவோர் தவிரமற்றை எல்லோரு நினது
குலத்தாரே ........................................''.

''சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன் நுமது
தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினொடுங்கேட்பீர்
என்மார்க்கத் தெனைநுமக்குள் ஒருவனெனக் கொள்வீர்
எல்லாஞ்செய் வல்லநம் திறைவனையே தொழுவீர்
புன்மார்க்கத் தவர்போலே வேறுசில புகன்றே
புத்திமயக் கடையாதீர் பூரணமெய்ச் சுகமாயத்
தன்மார்க்க மாய்விளங்குஞ் சுத்தசிவம் ஒன்றே
தன்னாணை என்னாணை சார்ந்தறிமின் ஈண்டே''

''மார்க்க மெல்லாம் ஒன்றாகும் மாநிலத்தீர் வாய்மைஇது
தூக்கம் எலாம்நீங்கித் துணிந்துளத்தே—ஏக்கம்விட்டு
சன்மார்க் சங்கத்தைச் சார்ந்திடுமின் சத்தியம்நீர்
நன்மார்க்கம் சேர்வீர் இந்நாள்''

''சற்சபைக்குரியார் தம்மொடுங் கூடித்
தனித்தபே ரன்புமெய் யறிவும்
நற்சபைக் குரிய ஒழுக்கமும் அழியா
நல்லமெய் வாழ்க்கையும் பெற்றே
சிற்சபை நடமும் பொற்சபை நடமும்
தினந்தோறும் பாடிநின் றாடித்
தெற்சபை யுலகத் துயிர்க்கெலாம் இன்பஞ்
செய்வதென் விச்சையாம் எந்தாய்.''

''என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந்தானே!''

வள்ளலாரின் வாசகங்களிலிருந்து சன்மார்க்கத்தின் தத்துவத்தை அறியலாம். மனிதனைப் பல தளைகள் பிணைத்துள்ளன. அவனது சித்தத்தைப் பல மாயைகள் மூடியுள்ளன. சாதி பகுப்புக்களும், சமயப் பிரிவுகளும், வர்ணாசிரம வைப்பு முறைகளும், கண்மூடிப் பழக்க வழக்கங்களும் மனிதனை செயற்கையான வாழ்க்கையை மேற்கொள்ளச் செய்துவிட்டன. இவற்றால் மனிதன் தன்னல நோக்கமுடையவனாகவும், வன்முறைச் செயல்களில் ஈடுபடுபவனாகவும், போலிகளை உண்மைகளென நம்பி மயங்குபவனாகவும் இருக்கின்றான். இவை போன்ற எத்தனையோ பிள்ளை விளையாட்டுகளில் ஈடுபடுவதால் பிறவிப் பெருங்கடலை நீந்தமுடியாதவனாக எண்ணற்ற பிறப்பு இறப்புக்களுக்கு ஆட்பட்டுக் கிடக்கின்றான். கண்களில் மெய்யொளி பரவ, இறைவனைக்காண மனமாசு அகலவேண்டும். இதற்கு இரக்கம் ஏற்ற கருவியாகின்றது. சன்மார்க்கம் மனிதனை இத்தகைய தடைகளிலிருந்து விடுதலை பெறச்செய்து, அருட்பெருஞ்சோதி ஆண்டவனிடம் சேர்க்கின்றது.

வள்ளலாரின் ஒப்பற்ற கொள்கைகளை எல்லாம் உள்ளடக்கியதாக சன்மார்க்கம் அமைந்திருக்கின்றது. "எல்லா உயிர்களிடத்தும் கடவுள் இருத்தலை உணர்ந்து வழிபட வேண்டும் என்பதும், உயிர் இரக்கம் என்னும் சீவகாருண்யமே சமய வாழ்வின் அடிப்படை என்பதும், ஆன்மநேய ஒருமை (எல்லா உயிர்களும் ஒன்று என்னும் உண்மை) சமய நெறியின் தெளிவு என்பதும் அவருடைய சிறந்த கொள்கைகள் ஆகும்"[11] என்று டாக்டர் மு. வரதராசனார் கூறியிருப்பது இங்கு நினைக்கத்தக்கதாகும்.

உயர்ந்த நெறி : ஒவ்வொரு சமயமும் இறைவனையடைய ஒரு வழியைக் காட்டுகின்றது. எல்லா வழிகளும் - சமயங்களும் நதிகளைப் போன்று கடவுள் என்ற ஒரே கடலில் சென்று கலக்கிறதென்று சமயப் பொதுமை பேசுகின்ற சான்றோர்கள் கூறியிருக்கின்றனர். இதுவரை கூறப்பெற்றுள்ள நெறிமுறைகளிலெல்லாம் சன்மார்க்க நெறி உயர்ந்ததாகவும் எல்லோரும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் இருப்பதனை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் ஆகிய நான்கு மார்க்கங்களிலும் சன்மார்க்கமே சிறந்ததென்பதை,

---

11 "தமிழ் இலக்கிய வரலாறு" பக்கம் 216

''மார்க்கங்கள் நான்கில் சன்மார்க்கமே உயர்ந்தது, மற்ற மூன்று மார்க்கங்களும் சன்மார்க்கத்தை அடைதற்கான படிகளே. சன்மார்க்கம் ஒன்றே முடிவான பர முத்தியைத் தரும். மற்ற மூன்றும் பதமுக்தி-களேயே தரும்.''[12] என்று ஊரன் அடிகள் கூறுகின்றார்.

சன்மார்க்கம் பல நிலேகளில் உள்ளவர்களுக்கும் ஏற்றதென்பதை மறைமலேயடிகள், ''இறைவனது உண்மைப் பெருநிலேயை இனிதுணர்ந்து, அவ்வுணர்ச்சி வலியால் இரக்கமும் அன்பும் அருளும் முதிருமாறு இவ்வுலகத்தின்கண் உள்ள எல்லாவுயிர்களேயும் இறைவர் இருப்பிடமாய்க் கண்டு பழகவே எல்லாரும் துன்பத்தின் நீங்கிப் பேரின்பத்தின் வைகுவர். இதுதான் எத்திறத்தவரும் உடன்பட்டுத் தழுவுதற்குரிய ''சமரச சன்மார்க்கம்' என்னும் முடிந்த பேருண்மை நெறியாம் என்க,''[13] என்று விளக்குகின்றார்.

**தொண்டு நெறி :** வள்ளலார் சன்மார்க்க நெறியைத் தொண்டு நெறியாக உருவாக்கியுள்ளார். உயிரிரக்கம் தொண்டாக மலர்கின்ற பொழுது, உயிரிரக்கம் புரிகின்றவரும், உயிரிரக்கத்துக்கு ஆட்படும் உயிரும் பயன்பெறுவதனேக் காணலாம். நல்ல சன்மார்க்கி வெறும் பக்தியில் மனநிறைவு அடைய முடியாது. வாடுகின்ற பயிரைக் கண்டு வாடுகின்ற சன்மார்க்கி அதன் வாட்டத்தைப் போக்க நீரூற்ற வேண்டும். வீடுதோறிரந்தும் பசியருத யரும் வெற்றரைக் கண்டுளம் உருகுகின்ற சன்மார்க்கத்தைச் சார்ந்தவர் பசிப்பிணியைப் போக்கத் தன்னுலியன்றதைச் செய்யவேண்டும்.

இன்றைய உலகம் போரிடும் உலகமாக மாறி வருகின்றது. அமைதி என்பது அருகிய ஒன்ருகி வருவதைக் காண்கின்ரேம். வள்ளலார் காட்டிய தொண்டு நெறி இன்றைய நிலேக்கு மருந்தாக அமையத்தக்கதாகும். திரு. வி. கல்யாணசுந்தரனர், ''எல்லாச் சமயங்களும் தொண்டு நெறியில் அடங்கும். உலகில் தொண்டு நெறி ஆட்சி பெருகுவதனல், உலகம் ஒருமைப்படும்; சாந்தம் அடையும்''[14] என்று கூறியிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

---

12. ''வடலூர் வரலாறு'' ப. 29
13. சைவ சித்தாந்த ஞான போதம்-ப. 62
14. பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி ப. 68

தொண்டு நெறியில் ஈடுபடுகிறவர்கள் எந்தக் குறுகிய எல்லைக்குள்ளும் தங்களைச் சிறைப்படுத்திக் கொள்ளக் கூடாது. அப்பொழுதுதான் தொண்டு நெறியால் மேம்பட இயலும். வள்ளலார்,

*''சாதி சமயச் சழக்கைவிட் டேன்அருட்*
*சோதியைக் கண்டேனடி—அக்கச்சி*
*சோதியைக் கண்டேனடி'',* என்று கூறுவதை

தொண்டர்கள் உணரவேண்டும்,

**நிறைவுரை:** வள்ளலார் சன்மார்க்க நெறியை உலகோர் உணர்ந்து பின்பற்றுவதற்காகச் சன்மார்க்க சங்கத்தைத் தோற்றுவித்தார். அவரது சத்திய தருமச் சாலையையும், சத்திய ஞானசபையையும், சன்மார்க்கத்தைப் பரப்பும் சாதனங்களாக நிறுவினார். ஆனால் அவர் ''கடைவிரித்தேன் கொள்வாரில்லை'' என்று அக்காலத்தில் கூறிய நிலை இன்றும் முழுக்க மாறவில்லை. தயானந்தன் பிரான்சிஸ் என்பவர், ''வள்ளலாரின் இவ்வுயிர் நெறியினுக்கு ஆக்கமளித்து உலகெலாம் அதனைப் பரப்புதற்கு அவர்களுக்கு ஒரு விவேகானந்தர் கிடைக்கவில்லை. இந்நெறியினை இடையறுது காத்துப் போற்றுவோரின் கூட்டமாக ஒரு பலம் பொருந்திய இயக்கமும் தமிழ்நாட்டில் எழவில்லை. தங்கள், தங்கள் கொள்கை, கட்சி ஆகியவற்றுக்கு ஏற்றவையாக உள்ள வள்ளலார் பாக்களை மட்டுமே மதித்துப் போற்றுகிறவர்கள்தாம் தமிழகத்தில் மலிந்துள்ளார்கள். அவருடைய புரட்சி நெறியினை-ஏற்போரும் பரப்புவோரும் ஒரு சிலரே ஆவர்'',[15] என்று கூறுவதிலுள்ள உண்மையை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்றைய உலகம் முழுக்கப் பொருள்வழி செல்கின்றது. பொருளே எல்லாம் என்று எண்ணுகின்றது. இவ்வுலக வாழ்க்கைக்குப் பொருள் தேவை. ஆனால் அந்தப் பொருள் அறவழியில் வந்து, அருளை விளைவிப்பதாக இருந்தால் நல்லது. இல்லையேல் எத்தகைய துன்பங்கள் நேருமென்பதை நாம் அன்றாட வாழ்க்கையில் பார்க்கின்றோம்.

அருளும் பொருளும் இணைந்த வாழ்க்கையை அமைக்கச் சன்மார்க்கம் வழி காட்டுகின்றது. இதனைத் திரு. வி. க.

---

*15. இந்தியாவில் தற்கால சமய இயக்கங்கள் ப. 108*

" அருளை வளர்த்தல் பொருளுக் கழகே
அருளை அளிக்கும் பொருளால் தீமையே
ஆவி அருளால் மேவும் ஆக்கம்
இரக்க மற்றவன் இறந்த பிணமே,
'உயிரும் உரக்கமும் ஒன்றே' என்றார்
'ஒருவின் இரக்கமும் உயிர்போம்' என்றார்
வள்ளற் பெருமான் உள்ளம் தேர்க"[16] என்று

கூறுகின்றார். சன்மார்க்கத்தைப் பற்றிய ஆய்வு வள்ளலாரின் திருவுள்ளத்தை நமக்குக் காட்டும். வள்ளலாரின் திருவுள்ளம் நமக்கு வழிகாட்டும் ஒளி விளக்காகத்திகழும். □

16. பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும் ப. 20.

# 10. வள்ளலார் வகுத்த வழிபாட்டு முறை

வாழையடி வாழை என வந்ததிருக் கூட்ட மரபினில் ஒருவராகத் தோன்றிய வள்ளலார், தனது வாழ்க்கைச் சாதனைகளாலும் பெற்ற சித்திகளாலும் செய்த செயல்களாலும் வந்த மரபினை விட்டுத் தனித்து, உயர்ந்து நிற்கின்றார். மரணமிலாப் பெருவாழ்வைப் பெற விழைந்து, முயன்று, எண்ணத்தில் திண்ணியராய் நின்று, எண்ணியதை எண்ணி-யாங்கு பெற்றவர் வள்ளலார். அவர் தனது நிலையை,

"விரைந்து விரைந்து படிகடந்தேன்
மேற்பால் அமுதம் வியந்துண்டேன்
கரைந்து கரைந்து மனம் உருகக்
கண்ணீர் பெருகக் கருத்தலர்ந்தே
வரைந்து ஞான மனம்பொங்க
மணிமன் றரசைக் கண்டுகொண்டேன்
திரைந்து நெகிழ்ந்த தோலுடம்பும்
செழும்பொன் உடம்பாய்த் திகழ்ந்தேனே"[1] என்று

கூறுகின்றார்.

அழியாத் திருவுருவம் பெற்ற வள்ளலார் தாம் பெற்ற பேரின்-பத்தை இந்த உலகத்தவரும் பெற வேண்டுமென்று விரும்பினார். அதற்காகச் சன்மார்க்க சங்கம் (1865), சத்திய தருமச் சாலை (1867), சத்திய ஞான சபை (1872) என்ற மூன்று நிறுவனங்களைத் தோற்று-வித்தார். வள்ளலாரின் ஆன்மீகத் தத்துவத்தை ''தங்கமே அனையார் கூடி'' உய்த்துணர சங்கம் வழி வகுத்தது. அவரது உயிர்க் கொள்கை-யாகிய 'சீவகாருணிய ஒழுக்கத்திற்குச்' செயல்வடிவம் கொடுப்பதாக சத்திய தருமச்சாலை அமைந்தது. அவரைப் பின்பற்றி வருகின்றவர்-களுக்கு இறைவனை அடைய வழிகாட்டும் இடமாக சத்திய ஞானசபை உருப்பெற்றது.

இருக்கின்ற ஒரு சமயத்தை அப்படியே பின்பற்றிச் செல்கின்ற-வர்கள் புதிய வழிபாட்டு முறையைக் கூறுவதில்லை. ஆனால் வள்ளலார்

---

*1.* (முடி) உற்றதுரைத்தல் 6 - திருவருட்பா

தனக்கென்றொரு தனிப்பாதை அமைத்துக் கொண்டதால், அப்பாதையில் அவரைப் பின்பற்றி வருகின்றவர்களுக்கு, அவரது இறைக் கோட்பாட்டிற்கும், ஆன்மீகத் தத்துவத்திற்கும் ஏற்ற வகையில் ஒரு வழிபாட்டுமுறையை வகுத்துத் தருவது தேவையாயிற்று.

**கடவுட் கொள்கை:** வழிபடு பொருளும் வழிபாட்டு முறையும் ஒருவரது இறைக்கொள்கையை ஒட்டியே அமையும். வள்ளலார் பல தலங்களுக்குச் சென்றிருக்கின்றார். அங்கேயுள்ள தெய்வங்களைப் பற்றி எல்லாம் உள்ளமுருகப் பாடியிருக்கின்றார். தனது ஒன்பதாம் வயதில் முருகப்பெருமானால் ஆட்கொள்ளப் பெற்றதை அவரே கூறுகின்றார். அவரது முறையான ஞான வாழ்க்கை 12ஆம் வயதில் தொடங்கியது. இளமையில் அவரது வழிபடு கடவுளாக சேவற்கொடியோன் முருகனும், வழிபடு குருவாக அருட்செல்வர் திருஞான சம்பந்தரும், வழிபடுநூலாக வான்கலந்த மாணிக்கவாசகரின் திருவாசகமும் அமைந்திருந்ததை வள்ளலாரின் வாழ்க்கையைப் படிப்பவர்கள் அறிவார்கள். அவர் முதலில் முருக உபாசகராகவும் பின்னர் சிவபக்தராகவும் அதன் பின்னர் நடராச அன்பராகவும் வாழ்ந்தார். இறுதியில் சத்திய ஞானத்தை உணர்ந்து, தெளிந்த நிலையில் அருட்பெருஞ்சோதி அடியாராகத் திகழ்ந்தார்.[2] ஆதலால் தம்மைப் பின்பற்றுகின்றவர்களையும் அருட்பெருஞ்சோதியை வழிபடுகின்றவர்களாக மாற்றினார்.

"ஒன்றே தெய்வம்" என்ற கோட்பாட்டில் உறுதியான நம்பிக்கைகொண்ட வள்ளலார் சிறுதெய்வ வழிபாட்டையோ, உயிர்ப்பலி இடுதலையோ ஏற்றுக்கொள்ள வில்லை. இதனை அவர் மிகத் தெளிவாக,

*"நலிதரு சிறிய தெய்வமென்றையோ*
*நாட்டிலே பலபெயர் நாட்டிப்*
*பலிதரு ஆடு பன்றிக்குக் குடங்கள்*
*பலிகடா முதலிய உயிரைப்*
*பொலிவுரக் கொண்டே போகவும் கண்டே*
*புந்திநொந் துளநடுக் குற்றேன்*
*கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்*
*கண்டகா லத்திலும் பயந்தேன்,"[3]*

என்று கூறுகின்றார்.

2. இராமலிங்க அடிகள் வரலாறு-ஊரன் அடிகள் (பின் இணைப்பு) ப. 44.
3. (முன்) பிள்ளைப் பெருவிண்ணப்பம 63, - திருவருட்பா

கலையுரைத்த கற்பனையையோ, கண்மூடிப்பழக்க வழக்கங்-களையோ ஏற்றுக் கொள்ளாத வள்ளலார், உருவமற்ற எல்லாவற்றை-யும் ஊடுருவியும் கடந்தும் நிற்கின்ற எல்லாம் வல்ல சக்தியை இறைவனாக ஏற்றுக் கொள்கின்றார்.

''ஒன்றே கடவுள்'' என்ற தத்துவம் தமிழகத்திற்குப் புதிதல்ல. வள்ளலாருக்கு முன்பே பலர் இந்த உண்மையை எடுத்துரைத்திருக்-கின்றார்கள். எடுத்துக்காட்டாகத் தாயுமான சுவாமிகள்,

''வேறுபடுஞ் சமயமெலாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளேநின் விளையாட்டல்லான்
மாறுபடுங் கருத்தில்லை முடிவின் மோன
வாரிதியின் தித் திரள்போல் வயங்கிற்றம்மா''

என்று கூறுவதைக் குறிப்பிடலாம்.

வள்ளலார் ஒன்றாக இருக்கும்இறைவனை,

''உருவமும் அருவமும் உபயமும் உளதாய்
உளதல தாய்ஒளிர் ஒருதனி முதலே'' 4 என்று

கூறுவது எண்ணத்தக்கது.

*இறைவனை ஒளிவடிவாய்க் காணல்:* 'உருவராகியும், அருவின ராகியும், உருவருவினராயும்' இருக்கின்ற கடவுளை ஒளிவடிவாகக் கண்டு வழிபட்டவர் வள்ளலார். அவர் அளித்த

''அருட் பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப் பெருங் கருணை அருட்பெருஞ்சோதி'' என்னும்

அருமருந்தாகிய மந்திரமொழி வள்ளலார் கண்டு காட்டுகின்ற இறை-வனுக்கு இலக்கணம் வகுக்கின்றது. இறைவன் ஒளிவடிவானவன். அந்த ஒளி அளவற்றது. ஆதலால் இறைவன் பெருஞ்சோதியாக இருக்கின்றான். அவன் அருள் நிறைந்த ஒளி வெள்ளமாகத் திகழ்-கின்றான். வெறும் ஒளிமட்டும் இறைவன் இயல்பல்ல. இறைவன் கருணைக் கடலாகவும் காட்சி தருகின்றான். ஆதலால் அவனை நாடிச் செல்கின்றவர்கள் அடைக்கலம் பெறுவார்கள்.

இறைவனைப் பண்டு தொட்டு மக்கள் பல உருவங்களில் கண்டி-ருக்கின்றனர். மக்களின் கற்பனை வளங்களுக்கேற்ப இறைவன்

---

4. சற்குருமணி மாலை 5-திருவருட்பா 3689

எண்ணற்ற உருவங்களில் காட்சி தரக் காண்கின்றோம். மிகப் பழங் காலத்திலிருந்தே, இயற்கைச் சூழலில் வாழ்ந்த மனிதர்கள் பஞ்ச பூதங்களைத் தெய்வங்களாக வழிபட்டு வந்ததற்குச் சான்றுகள் உள்ளன. காடுகளில் வாழ்ந்த காலத்திலேயே தீயை வணங்குகின்ற பழக்கம் இருந்திருக்கின்றது.

ஒளி (தீ) க்கு உருவம் இல்லை. அது இருளைப் போக்குகின்றது. அறியாமை இருளைப் போக்கும் அடையாளமாக ஒளியிருக்கின்றது. அறிவியல் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைவது ஒளி. ஒளிக்கு ஆக்கும் சக்தியுண்டு. காக்கும் சக்தியுமுண்டு, அழிக்கும் ஆற்றலுமுண்டு. ஒளி இல்லையேல் உலகமில்லை. ஆதலால் ஒளிவடிவமாக இறைவனைக் காண்பது உயர்ந்த தத்துவத்தின் அடிப்படையில் அமைகின்றது.

வள்ளலாருக்கு முன்பும் இறைவனை ஒளிவடிவில் கண்டு உணர்த்தியவர்கள் பலருண்டு. எடுத்துக்காட்டாக மாணிக்கவாசகரைக் கூறலாம். அவர் இறைவனை, ''சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே'' 5 என்றும,

''மாறிநின்று என்னை மயக்கிடும் வஞ்சப்
புலன் ஐந்தின் வழியிடைத்து அமுதே
ஊறிநின்று என்னுள் எழு பரஞ்சோதி'' 6 என்றும்
''பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே'' என்றும்

கூறுவதை இங்கு நினைவுபடுத்தலாம்.

வள்ளலார் இறைவனைத் தனிப்பெருஞ் சோதியாய் காண்பதைத் திருவருட்பா முழுவதும் காணலாம். ''அருட்சோதி தெய்வம் என்னை ஆண்டு கொண்ட தெய்வம்'', ''அருட்சோதி தலைவர் எனக்கு அன்புடைய கணவர்'', ''அருட்சோதி ஆனேன் என்று அறையப்பா முரசு'', ''தனிசுயஞ் சோதி,'' ''பேர் ஒளி,'' ''ஒளியாகி உள் ஒளியாய் உள் ஒளிக்குள் ஒளியாய் ஒளி ஒளியின் ஒளியாய் அவ்வொளிக்குள்ளும் ஓர் ஒளியாய்'' என்று கூறுகின்றார். அருட்பெருஞ்சோதி அகவலில் மிகவிரிவாக இறைவனை ஒளியாக விளக்குகின்றார். எடுத்துக்காட்டாக,

---

5. அருட்பத்து, திருவாசகம்

6. கோயில் திருப்பதிகம், அறுபோக இலக்கணம்-முதல்பாட்டு.

"அருட்சிவ நெறிசார் அருட்பெரு நிலைவாழ்
அருட்சிவ புதியாம் அருட்பெருஞ் சோதி"

"அருள் ஒளி யென்தனி அறிவினில் விரித்தே
அருள்நெறி விளக்கெனும் அருட்பெருஞ் சோதி"

"மண்ணியல் பலபல வகுத்து அதில்பிறவும்
அண்ணுற அமைத்த அருட்பெருஞ் சோதி

"தீயினிற் பக்குவம் சேர்குணம் இயல்குணம்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ் சோதி"

ஆகிய வரிகளைக் கூறலாம்.

**தனிவகைக் கோவில்:** வள்ளலார் தமது தத்துவத்திற்கேற்ற வகையில் "சங்கம் சார் திருக்கோயிலை" வடலூரில் அமைத்தார். வடலூரை 'உத்தர ஞான சிதம்பரம்' என்று அழைத்த வள்ளலார், 25-1-1872-இல் "சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான சபை," என்னும் தனிப்பெரும் கோவிலை நிறுவித் திறந்துவைத்தார்.

இந்தக் கோவிலின் அமைப்பை, "சபை எண்கோண வடிவானது. தெற்கு நோக்கியது. சபையின் முன் மண்டபத்தில் கீழ்ப்புறம் பொற் சபையும் மேற்புறம் சிற்சபையும் உள்ளன. கிழக்கு நோக்கிய வாயிலை யுடைய சிற்சபை, தெற்கு நோக்கிய வாயிலையுடைய ஞானசபை, மேற்கு நோக்கிய வாயிலையுடைய பொற்சபை ஆகிய மூன்றும் ஆய்த எழுத்தைப் போன்று அமைந்துள்ளன. பொற்சபையும் சிற்சபையும் சிதம்பரத்தில் முன்னரே உள்ளவை. அடிகள் புதிதாகக் கண்டது ஞானசபையே. எண்கோண வடிவமான ஞான சபைக்குள் பன்னிருகால் மண்டபம் ஒன்றும் நாற்கால் மண்டபம் ஒன்றும் ஒன்ற-னுள் ஒன்றாக உள்ளன. நாற்கால் மண்டபத்தின் நடுவே அருட் பெருஞ்சோதி ஆண்டவர் எழுந்தருளியுள்ளனர்,"[7] என்று ஊரன் அடிகள் விளக்குகின்றார்.

வள்ளலார் கோவிலை நமது அகத்தையும் அதற்குள் இறை யொளி குடிகொண்டிருப்பதையும் குறிப்பால் உணர்த்தும் வகையில் அமைத்திருக்கின்றார். இதனை அவர்,

"சத்திய ஞானசபை யென்னுட் கண்டனன்
சன்மார்க்க சித்தியை நான் பெற்றுக்கொண்டனன்"

என்று கூறியிருப்பதிலிருந்து உணரலாம்.

---

7. இராமலிங்க அடிகள் வரலாறு - ப. 452

*சோதி வழிபாடு:* சத்திய ஞான சபையின் உயிர் மூச்சாக இருப்பது சோதி வழிபாடு. உயர்ந்த ஒரு தத்துவத்தை உருவகமாக உணர்த்தும் வகையில் சோதி வழிபாட்டை வள்ளலார் வகுத்திருக்கின்றார். வள்ளலார் தமது கையாலேயே திருவிளக்கையும் அதற்கு முன்னால் ஐந்தடி உயரமுள்ள ஒரு கண்ணாடியையும் அமைத்தார். கண்ணாடிக்கு முன்னால் ஏழு திரைகள் உள்ளன. இவை 1. கருப்பு 2. நீலம் 3. பச்சை 4. சிவப்பு 5. பொன்மை 6. வெண்மை 7. கலப்பு நிறம் கொண்டவையாகும். இவை ஒவ்வொன்றாக விலகிய பின்னர்தான் ஒளிவடிவிலிருக்கும் இறைவனைக் காணமுடியும்.

இங்குள்ள வழிபாட்டுத் தத்துவம் எண்ணி உணரத் தக்கது. தமது உள்ளம் விளக்கு. உள்ளத்தில் உள்ள இறைவன் ஒளிவடிவாய் இருக்கின்றான். அந்த ஆன்மீக ஒளியை நம்மால் உடனடியாகப் பார்க்க முடிவதில்லை. காரணம் அதனைப் பல மாயத் திரைகள் மறைத்துக் கொண்டிருக்கின்றன. அந்த மாயத் திரைகள் விலகினால் மட்டுமே அருட்சோதி ஆண்டவரைக் காணலாம்.

சோதியை மறைத்துக் கொண்டிருக்கின்ற ஏழு திரைகளும் தத்துவப்படலங்களே. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு சக்தியைக் குறிக்கின்றன. இவை பற்றி இருவகையான விளக்கங்கள் கூறப் பெறுகின்றன. ஊரன் அடிகள், *''கருப்புத்திரை — மாயாசக்தி, நீலத்திரை — கிரியாசக்தி; பச்சைத்திரை — பராசக்தி; சிவப்புத்-திரை — இச்சாசக்தி, பொன்மைத்திரை — ஞானசக்தி, வெண்மைத் திரை — ஆதிசக்தி; கலப்புத்திரை — சிற்சக்தி.''*[8]

உ. மா. துரைசாமிப் பிள்ளை என்பவர் கீழ்க்கண்டவாறு விளக்கம் தருகின்றார்:

1. *கருப்புத்திரை - மாமாயை—அரைசதுமறைக்கும்*
2. *நீலத்திரை— மாயாசக்தி—ஆருயிர்மறைக்கும்*
3. பச்சைத்திரை—*கிரியாசக்தி*—பரம வெளியதனை மறைக்கும்
4. சிவப்புத்திரை—பராசக்தி—சித்துரு வெளியை மறைக்கும்.
5. பொன்மைத்திரை—இச்சாசக்தி—பொருளுறு வெளியை மறைக்கும்

6. கலப்புத்திரை—ஆதிசக்தி—கருதனுபவங்களை மறைக்கும்''[9]

வள்ளலார் அருட்பெருஞ்சோதி அகவலில் ஏழுதிரைகளையும் பற்றி,

---

*8. வடலூர் வரலாறு ப. 64-65*

"கரைவின் மாமாயைக் கரும்பெருந் திரையால்
அரைசது மறைக்கும் அருட்பெருஞ்சோதி
பேருறு நீலப் பெருந்திரை யதனல்
ஆருயிர் மறைக்கு மருட்பெருஞ் சோதி
பச்சைத் திரையாற் பரவெளியதனை
அச்சுற மறைக்கு மருட்பெருஞ் சோதி
செம்மைத் திரையாற் சித்துரு வெளியை
அம்மையின் மறைக்கு மருட்பெருஞ் சோதி
பொன்மைத் திரையாற் பொருளுறு வெளியை
அண்மையின் மறைக்கு மருட்பெருஞ் சோதி
வெண்மைத் திரையான் மெய்ப்பதி வெளியை
அண்மையின் மறைக்கு மருட்பெருஞ் சோதி
கலப்புத் திரையாற் கருதனுபவங்களை
அலப்புற மறைக்கு மருட்பெருஞ் சோதி",

என்று விளக்குகிருர்.

வள்ளலார் ஞானசபையின் வழிபாட்டு முறையை விளக்கியுள்ளார். வழிபாட்டிற்குக் கூடுகின்றவர்கள் சபைக்கு வெளியே வாயிலுக்கருகில் நின்று மெல்லத் துதி செய்து வழிபடவேண்டும். புலாலுண்பாராகிய புறவினத்தார் சபைக்குப் புறத்தே நின்றுதான் வழிபட வேண்டுமென்பது அவர் கட்டளை. மற்றைய கோவில்களைப் போன்று இங்கு இசைக்கருவிகள் முழங்க, பிரசாதங்கள் படைத்து, தீப தூப ஆராதனைகளோடு வழிபாடு நடத்துவதில்லை.

வள்ளலார், "பசித்திரு, தனித்திரு விழித்திரு," என்று கூறிய வழிகாட்டும் மந்திரச் சொற்களையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

வள்ளலாரின் சன்மார்க்க விண்ணப்பங்கள் நாம் இறைவனிடம் போய் எவற்றை முறையிட வேண்டுமென்று கூறுகின்றன. எடுத்துக்காட்டாக "சுத்த சன்மார்க்க சத்திய சிறு விண்ணப்பத்தில்" இறுதியில் வருகின்ற கீழ்க்கண்ட பகுதியைக் கூறலாம்.

9. சிதம்பரம் இராமலிங்கசுவாமிகளின் சரித்திரமும் அருட்பா ஆராய்ச்சியும் - ப. 17.

''எல்லாம் உடைய அருட்பெருஞ் சோதி அற்புதக் கடவுளே, இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடையாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம் ஆசிரம முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்திற் பற்ருதவண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்தசன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித் தருளல் வேண்டும்.''

நிறைவுரை: வள்ளலாரின் தத்துவப்படி நமது வாழ்க்கையே வழிபாடாக மாற வேண்டும். சன்மார்க்க நெறியில் நிற்கின்றவரின் வாழ்க்கையில் தனியாக வழிபாடு என்று வேண்டியதில்லை. நம்மை யறிந்து, ஒளிவடிவாம் இறைவனருளைக் காண வள்ளலார் வகுத்த வழிபாட்டு முறை உற்ற துணையாக இருக்கின்றது. □

# 11. வள்ளலார் வகுத்த வாழ்க்கை நடைமுறை

இறவாப் பெருநிலையை அடைய அகமுகச் சோதனைகளில் ஈடுபட்டிருந்த வள்ளலார் தன்னை நாடிவந்த - உலகியலில் மூழ்கி ஆனல் கரையேறி அருளுலகிற்கு வர விரும்பிய-அன்பர்களுக்கு வழிகாட்டும் பணியையும் இரக்கத்தின் காரணமாக ஏற்றுக் கொண்டார். எல்லா மக்களும் இன்புற்று வாழ விரும்பிய அடிகளார் அதற்கான வழிமுறைகளை எடுத்துரைத்திருக்கின்றார்.

வள்ளலாரின் உள்ளத்தில் தோன்றிய கருத்து மலர்கள் கவிதைகளாக இதழ்களை விரித்தபோது, அவற்றை அவரே சொல்லோவியங்களாகத் தீட்டி வைத்தார். அவைதான் இப்பொழுது ஆன்மீகக் கருவூலமான 'திருவருட்பா'வாக நமக்குக் கிடைத்திருக்கின்றது. ஆனல் அவர் மனிதகுலத்திற்குச் செய்த உபதேசங்களை அவரே எழுதி வைக்கவில்லை. அவை எல்லாம் சொல்லாடல்களாகக் காலத்தேவையை ஒட்டி உரைக்கப்பட்டன.

வாய்மொழியாக சுவாமிகள் உரைத்தவற்றைத் தொகுத்து 'உபதேசப்பகுதி'' என்று ஆ. பாலகிருஷ்ணப்பிள்ளை 1951-இல் வெளியிட்டிருக்கின்றார். அதன் முன்னுரையில், ''இந்த உபதேசப் பகுதியில் அடங்கியுள்ளவற்றில் பெரும்பாலான, சுவாமிகள் தம்மை அடுத்த அன்பர்களுக்கு வாய்மொழியாக வடலூர் தருமச் சாலையிலும் மேட்டுக்குப்பம் சித்திவளாகத்திலும் உபதேசம் செய்தவற்றை, அவ்வன்பர்களில் ஒருசிலர் எழுதிவைத்த குறிப்புகளாகும்... ......... இக் குறிப்புகள், சுவாமிகள் உபதேசம் செய்து கொண்டிருக்கும்போதே நேர் நேராக அங்கங்கு அவற்றில் தாங்கள் கேட்ட அல்லது கிரகித்த சொற்களையோ அல்லது கருத்துக்களையோ குறித்துக் கொண்டு போனர்களோ, அல்லது உபதேசம் முடிந்தபிறகு அவர்களே ஞாபகம் கொண்டு எழுதினர்களோ, அல்லது அங்ஙனம் கேட்டவர்கள் சொல்லக்கேட்டு மற்றவர்கள் உடனுக்குடனே எழுதிவைத்தார்களோ என்னும் விவரம் ஒன்றும் தெரிந்து கொள்ளக்கூடவில்லை,'' [1]

---

1. *உபதேசப்பகுதி (பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு 1959) முன்னுரை ப. 15*

என்று கூறுவதை மனத்தில் வைத்துக் கொண்டு வள்ளலாரின் உபதேசப் பகுதியை ஆராய்வது தேவையாகும்.

**உலகியல் வாழ்க்கை :** 'நித்திய ஒழுக்கம் என்னும் உலகியல்' என்ற தலைப்பில் தொகுத்துத் தந்திருக்கின்ற வள்ளலாரின் கருத்துக்கள்,

1. சாதாரண நித்திய கரும விதி
2. பொதுவிதி
3. சிறப்பு விதி என்ற மூன்று தலைப்புக்களில் அடங்குகின்றன.

இவற்றில் காணப்பெறுகின்ற உபதேசங்கள் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்காகக் கூறப்பெற்றவையாகும். வள்ளலார் துறவு வாழ்க்கையைப் பின்பற்றிய பெருநெறியாளர். அவர் இல்லற வாழ்க்கையை நடத்திக் கொண்டிருப்பவர்களும் சன்மார்க்கத்தில் ஈடுபடலாமென்ற கருத்துக் கொண்டிருந்தாரென்று தெரிகின்றது. அவர் கூறியுள்ளவற்றைத் தனித்தனியாக விளக்கலாம்.

**உடலோம்பல் :** சில துறவிகளைப்போல வள்ளலார் உடலினை 'மாயை'யாகவோ வீடுபேற்றைப் பெறும் முயற்சிக்குத் தடைக்கல்லாகவோ கருதவில்லை. உடலில் தெய்வம் உறைவதை உணர்ந்த அவர் உடலினைக் கட்டிக் காத்தலின் இன்றியமையாச் சிறப்பினை வலியுறுத்துகின்றார்.

''இந்த உடம்பை அலட்சியம் பண்ணாமல் பொன்னைப்போல் பார்க்க வேண்டும்''[2] என்கின்றார். ஏன் உடம்பைக் கட்டிக்காக்க வேண்டுமென்பதை, ''முத்தியடைவதற்கு இம் மானிட தேகமே தக்கதாயும் வேறு தேகத்தாலதையடைவது அரிதாயும் இருப்பது ஆதலால், எவ்விதத்திலாயினும் தேகம் நீடித்திருக்கும்படி பாதுகாத்தல் வேண்டும்'',[3] என்று சுட்டிக் காட்டுகின்றார்.

நமது உடலை அளவுக்கு மிஞ்சிய, முறையற்ற உணவு, பெண்ணின்பம் (மைதுனம்) தூக்கம் (நித்திரை), அச்சம் (பயம்) ஆகிய நான்கும் கெடுக்கக் கூடியன. முதலிரண்டு குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

---

2. *உபதேசப்பகுதி-பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு 1959 ப. 113*
3. *உபதேசப்பகுதி-பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு 1959 ப. 17*

உடம்பினை ஓர் அகல் விளக்கோடு ஒப்பிட்டு, எப்படி கட்டிக்காக்கப் பெறுகின்ற அகல் விளக்கே அணையாமல் நீண்ட நேரம் எரியுமோஅது- போலமுயன்று வரைமுறைகளின்படி வாழ்பவர்களின் உடலே நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கும்மென்பதை அருமையாக விளக்குகின்றார்.

**அதிகாலை எழுதல் :** வள்ளலாரின் கருத்துப்படி, நாம் ''சூரியோதயத்திற்கு முன் நித்திரை நீங்கி எழுந்து, விபூதி தரித்துச் சிறிது நேரம் உட்கார்ந்து, கடவுளைத் தியானஞ் செய்தல் வேண்டும்'', [4] கதிரவன் உதிப்பதற்கு ஐந்து நாழிகைக்கு (அதாவது இரண்டு மணி நேரத்திற்கு) முன்பு எழவேண்டுமென்று குறிப்பிடுகின்றார்.

கதிரவன் உதியாக் காலை வேளையில் மனம் ஒரு நிலைப்பட்டிருக்குமென்பதை உள இயல் அறிஞர்கள் கூறுகின்றனர். ஒழுக்க முறைகளின்படி வாழ்ந்து, தங்களின் கட்டுப்பாட்டிற்குள் உடம்பினை வைத்துக் கொண்டிருப்பவர்களால்தான் அதிகாலையில் எழமுடியும். மற்றவர்கள் காலந்தாழ்த்தியே கண்விழிப்பார்கள்.

**காலைக்கடன்கள் :** வள்ளலார் எப்படி ஒருவர் முறையாகத் தனது காலைக்கடன்களை முடிக்க வேண்டுமென்பதை விளக்கியிருக்கின்றார். உடற்கழிவுகளைப் போக்கி, எப்படி உடலைச் சுத்தப்படுத்த வேண்டுமென்று கூறுகின்றார்.

வள்ளலார் உடலியலை நன்கு அறிந்தவர். யோகநிலையில் ஒருவர் ஈடுபட உடற்கூறுபற்றிய உண்மைகள் தெளிவாகத் தெரிய வேண்டும். நடைமுறை வாழ்க்கையில் 'நோயற்ற வாழ்வு வாழ' உடலைத் தக்க வகையில் உடற்கழிவைப் போக்குவதை அறிவியலடிப்படையில், மலங்கழிக்கின்றபோது, வலது கையால் இடது பக்கம் அடிவயிற்றைப் பிடித்திருத்தல் வேண்டும். ஜலம் கழிக்கும்போது இடது கையால் வலது பக்கம் அடிவயிற்றைப் பிடித்திருத்தல் வேண்டும். மலமாவது ஜலமாவது பற்றக் கழியும் வரையில் வேறு விஷயங்களைச் சிறிதும் நினையாமல், மலஜல சங்கற்பத்தோடு இருக்கவேண்டும். மலம் பின்னுந் தடைப்படுமானால், இடது பக்கமாக சற்றே படுத்து பிராணவாயுவை வலத்தே வரும்படி செய்துகொண்டு, மலசங்கற்பத்தோடு மலவுபாதி கழித்தல் வேண்டும். ஜலம் தடைப்பட்டால், வலதுபக்கமாகச் சற்றே படுத்து பிராண

---

4. உபதேசப் பகுதி-பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு 1959 4 6 ப. 6.

வாயுவை இடது பக்கம் வரும்படி செய்துகொண்டு, ஜல சங்கற்பத்தோடு ஜலவுபாதி கழித்தல் வேண்டும்''[5] என்று விளக்குகின்றார்.

''வேலங்குச்சி, ஆலம் விழுது இவைகளைக்கொண்டு பல்லழுக்கெடுத்து, அதன்பின் கரிசலாங் கண்ணித்தூள் கொண்டு உள்ளே சிறிது சாரம் போகும்படி பல்லில் தேய்த்து வாயலம்பின் பின்பு, பொற்றலைக் கையாந்தகரையிலே அல்லது கரிசலாங் கண்ணியிலே ஒரு பங்கு: தூதுளையில் முசுமுசுக்கையிலே கால் பங்கு, சீரகம் கால் பங்கு - இவைகளை ஒன்றாகச் சேர்த்து சூரணமாகச் செய்துகொண்டு, அதில் ஒரு வராகனெடையை ஒரு சேர் நல்ல ஜலத்திற் போட்டு, அதில் ஒரு சேர் பசுவின் பாலவிட்டுக் கலந்து, அதிலுள்ள ஒரு சேர் ஜலமுஞ் சுண்டக் காய்ச்சி அந்தப் பாலில் நாட்டுச் சர்க்கரை கலந்து சாப்பிடல் வேண்டும் .... ...''[6] என்று உடலைப் பேணிக் காக்க சித்த மருத்துவ முறைபோல ஒரு இயற்கை வழியினை உரைத்திருக்கின்றார்.

காலை இளவெயில் உடலில் படுதல் நல்லதல்ல. இளம் வெந்நீரில் குளித்தல் வேண்டும்.

**உணவு வகைகள் :** ''பசி கண்டவுடன் தடை செய்யாமல் ஆகாரம் கொடுத்தல் வேண்டும். ஆகாரம் கொடுக்கும்போது ஆலசியமுமாகாது மிகுந்த தீவிரமுமாகாது''[7] என்ற பொது விதியைக் கூறிஎவற்றையெல்லாம் சாப்பிடலாமென்றும், எவற்றை விலக்க வேண்டுமென்றும் கூறுகின்றார்.

***தடையின்றி உண்ணக் கூடியவை :*** *சீரகச் சம்பா பச்சரிசிச் சாதம், கருணைக் கிழங்கு, கத்தரிக்காய், வாழைக்காய், அவரைக்காய், முருங்கக்காய், பீர்க்கங்காய், கலியாண பூசணைக்காய் புடலங்காய், தூதுளங்காய், கொத்தவரைக்காய், புளியாதரைத் துவையல், கரிசலாங் கண்ணிங்கீரை, தூதுளைக் கீரை, முன்னைக் கீரை, பசலைக் கீரை, முருங்கைக்கீரை, பருப்பு, மிளகு, நெய், சீரகம்.*

***சிறிது சேர்க்கத் தக்கவை :-*** பேயன் வாழைப்பழம், ரஸ்தாளி வாழைப்பழம், மிளகாய், உப்பு, நல்லெண்ணெய், வெள்ளைப்பூண்டு. புலால் உணவை ஒதுக்க வேண்டும்.

---

5. உபதேசப்பகுதி-பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு 1959 4·6 ப. 6
6. உபதேசப் பகுதி-பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு 1959 ப. 6-7
7. உபதேசப் பகுதி-பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு 1959 ப. 7.

**முழுக்கத் தள்ள வேண்டியவை :**- கிழங்கு வகைகள், பழ-வகைகள், கடுகு.

இரவு உணவு : சூடான பதார்த்தங்கள், சிறுகத்தரி, முருங்கை, அவரை வற்றல் முதலியவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம். விலக்க வேண்டியவை—தயிர், கீரை, வாயுவான பதார்த்தம், குளிர்ச்சி-யானவை.

இரவில் பசுவின் பாலை நன்ருகக் காய்ச்சிக் குடிக்கலாம்.

வெற்றிலை போடலாம். முதல் எச்சிலைத் துப்பிவிட்டு, பின்-வரும் உமிழ்நீரைக் குடிக்கலாம். தாம்பூலத்தின் திப்பியை உமிழ்தல் வேண்டும்.

பொதுவாக உணவைப் பற்றி 1. எப்பொழுதும் ஒரளவு குறைவாகவே உண்ண வேண்டுமென்றும் 2. பசித்த பின்பே புசிக்க வேண்டுமென்றும் வலியுறுத்திக் கூறுகின்ருர்.

*பெண்களுடன் தொடர்பு :* இல்லறத்தில் வாழ்கின்றவர்கள் எப்படி பெண்களுடன் மிகவும் கட்டுபாட்டோடு உடல் தொடர்பு வைத்துக் கொள்ளலாமென்பதை விளக்கியிருக்கின்ருர்.

இல்லறத்தில் வாழ்பவர்கள் படிப்படியாகப் புலனடக்கத்தை மேற்கொள்ள வேண்டுமென்று வள்ளலார் அறிவுறுத்துகின்ருர். அளவு கடந்து புலன் நுகர்ச்சியில் ஈடுபடுவர்கள் அல்லற்படுவதைக் காண்கின்ருேம்.

**தூக்கம் :** பகல் உணவுக்குப் பிறகு சிறிது படுத்து, எழுந்து பணிகளில் ஈடுபடவேண்டும். ஆனல் ''நித்திரை வரும்படி படுக்கப்-படாது'' என்கின்ருர். பகலில் தூங்குவது நல்லதல்ல வென்பதே அவரது கருத்தாகும்.

*பொதுவானவை :* நாம் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய பொதுவான நெறிமுறைகளைக் கூறியிருக்கின்ருர். அவற்றைத் தொகுத்துக் கூறலாம்.

1. எப்பொழுதும் அச்சமின்றி இருத்தல்
2. பழி, பாவங்களுக்கு அஞ்சுதல்
3. எப்பொழுதும் மன உற்சாகமாக இருத்தல்

4. விலக்க வேண்டிய தீமைகள்— கொலை, கோபம், சோம்பல், பொய்மை, பொறாமை, கடுஞ்சொல்.

5. கூடாத பழக்கங்கள்– உரத்துப் பேசல், வேகமாக நடத்தல், ஓடி நடத்தல், வழக்கிடல், சண்டையிடல்.

6. எந்த வகையிலும் பிராணவாயுவை மிகுதியாகச் செலவிடாமல் பழகுதல்.

7. நாளைக்கு ஒருமுறை வெந்நீரில் குளித்தல்.

8. வாரம் ஒரு தடவை எண்ணெய் தேய்த்து முழுகுதல்.

9. புகைக்குடி, கஞ்சாக்குடி, கட்குடி, சாராயக்குடி முதலிய குடிகள் கூடாது.

10. மலஜலம் சிறிதும் அடக்கக்கூடாது.

11. சுக்கிலத்தை வீணில் விடக்கூடாது.

12. எந்தப் பணியையும் சிவ சிந்தனையோடு செய்ய வேண்டும்.

ஒழுக்க நெறி : வள்ளலார் நாம் இறைவனை அடைய உயர்ந்த ஒழுக்க நெறியில் நிற்க வேண்டுமென்று கூறுகின்றார். அவர் ஒழுக்க நெறியை 1. இந்திரியவொழுக்கம். 2. கரணவொழுக்கம். 3. ஜீவ-வொழுக்கம் 4. ஆன்மவொழுக்கம் என்று நான்கு வகைகளாகப் பிரிக்கின்றார்.

இந்திரிய ஒழுக்கம் கன்மேந்திரிய ஒழுக்கம், ஞானேந்திரிய ஒழுக்கமென இருவகைப்படுகின்றது. நமது ஐம்புலன்களும் பின்பற்றத் தக்க நெறிமுறைகள் உள்ளன. கொடிய சொல் விலக்கி இனியன கேட்டல், தூயவனவற்றையே தொடுதல், அன்புடன் பார்த்தல், நாவடக்கம், இன்சொல்லாடல், பொய் சொல்லாதிருத்தல், பிற உயிருக்கு கேடுவரின் தடுத்தல், பெரியோரோடு தொடர்பு கொள்ளுதல், எல்லா வகைகளிலும் உடலைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருத்தல் ஆகியவை இதில் அடங்கும்.

கரண ஒழுக்க மென்பது உள்ளம் பின்பற்ற வேண்டிய நெறி-முறையாகும். மனத்தை 'சிற்சபை'யில் நிறுத்தல் வேண்டும். இதனை 'அறிவாகிருதி ஆக்கல்' என்று வள்ளலார் குறிப்பிடுகின்றார். உள்ளம் புருவ மத்தியில் ஒன்றினால் இந்நிலை கைக்கூடும். மனம் நல்லன வற்றையே எண்ணி, பற்றிப் படரவேண்டும். 'தான்' என்ற அகந்தையே நீக்கி, இயற்கையின் தன்மையை ஒட்டி மனத்தைச் சீராக வைத்துக் கொள்வது கரண ஒழுக்கமாகின்றது.

ஜீவ ஒழுக்கத்தை, ''ஆண் மனிதர் பெண் மனிதர் முதலிய யாவர்களிடத்திலும், ஜாதி சமயம் மதம் ஆசிரமம் சூத்திரம் கோத்திரம் குலம் சாஸ்திர சம்பந்தம் தேசமார்க்கம் உயர்ந்தோர் தாழ்ந்-தோரென்னும் பேதம் நீங்கி, எல்லாருந் தம்மவர்களாய் சமத்திற்-கொள்ளுவது,''[8] என்று வள்ளலார் விளக்கியுள்ளார்.

ஆன்ம ஒழுக்கம் யானை முதல் எறும்பு ஈருக உள்ள எல்லா வகை ஜீவர்களிடத்திலும் இரக்கம் கொள்வதைக் குறிக்கின்றது. எல்லா உயிர்களிடமும் இரக்கம் காட்டி, ஆன்மாவைச் சபையாகவும் அதனுள் விளக்கம் பெறுகின்ற ஒளியைப் பதியாகவும் கண்டு முழுமை-யாக நிற்க வேண்டும். இந்நிலையில் ஆன்மா உயர்ந்து அருட்பெருஞ் சோதியில் கலக்கின்றது.

வள்ளலார் கூறுகின்ற ஒழுக்க நெறியினை உணர்ந்து பின்-பற்றினுல் மனிதர்கள் 'வெறும் கலகமானிடப் பூச்சிகளாக' இருக்க-மாட்டார்கள். அமர நிலை எய்துகின்ற வழிமுறை மனித குலத்திற்கு முன்னுல் விரியும். கடுமையான சாதனைகளின் மூலமாகத்தான் இந் நிலையை அடைய முடியுமென்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

நிறைவுரை : சுருக்கமாக நமது அன்ருட வாழ்க்கை எப்படி இருக்க வேண்டுமென்பதை, ''ஆகாரம் அரை, நித்திரை அரைக்கால், மைதுனம் வீசம், பயம் பூச்சியம் ஆகப் பெறுதல்'' என்று கூறுவது நினைவில் கொள்ளத்தக்க ஒன்ருகும்.

நமது அன்ருட வாழ்க்கை முறை நமது வாழ்க்கை நோக்கத்திற்கு உகந்ததாகவும் ஏற்றதாகவும் இருக்க வேண்டும். இறைவனை அடைய விரும்புகின்றவர்கள் என்ன செய்ய வேண்டு மென்பதைக் கீழ்க்கண்ட சொற்களில் கூறிவிடுகின்ருர் :—

''இந்தத் தேகத்தில் புருவ மத்தியில் நமது ஆன்ம அறிவென்கிற கற்பூரத்தில், கடவுள் அருளென்கிற தீபம் விளங்குவதாகப் பாவித்துப் பார்த்து, அதில் பழகிப் பழகிக் கடவுளிடத்தே உண்மையாகிய அன்பையும் சீடர்களிடத்து உண்மையாகிய காருணியத்தையும் இடையிடாமல் வைத்து, ஓங்கார, பஞ்சாக்ஷர, ஞாபகஞ் செய்தல் வேண்டும். சிவபஞ்சாக்ஷர ஞாபகம் செய்தல் வேண்டும்; அவசியம்!'' □

8. உபதேசப் பகுதி--பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு 1959 ப.50

# 12. வறுமைத் துன்பம்

சமுதாய வாழ்க்கையில் பலவகையான சிக்கல்கள் தோன்றுகின்றன. அமைதியாக இருக்க வேண்டிய சமுதாய வாழ்க்கையில் போராட்டங்கள் நடைபெறுவதற்கும், அமைதியற்ற நிலை ஏற்பட்டு மக்கள் அல்லற்படுவதற்கும் இத்தகைய சிக்கல்களே காரணமாகின்றன.

சமுதாயத்தில் காணப்படுகின்ற சிக்கல்களை அவை தோன்றும் அடிப்படையை ஒட்டி இருவகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று இயற்கைக் காரணங்களால் ஏற்படுபவை. மழையின்மையால் தோன்றுகின்ற பஞ்சம், கொடிய புயல் பூமியதிர்ச்சி,வெள்ளம் போன்றவற்றால் ஏற்படும் துயர்கள் முதல் வகையைச் சார்ந்தவை. இரண்டாம் வகை செயற்கையானவை. மனிதர்களால் உருவாக்கப்படுபவை. பிறப்பால் ஏற்படுத்தப் பெற்ற சாதிமுறை ஏற்றத் தாழ்வுகள், வரதட்சணை, இல்லாமை போன்றவை இரண்டாம் வகையைச் சார்ந்தவை.

வறுமைத் துன்பம்: நமது சமுதாயத்தில் வறுமை நெடுங் காலமாக ஒரு நோயைப் போல இருந்து வருகின்றது. எத்தனையோ வகையான செல்வங்களையும் வளங்களையும் கொண்டிருக்கின்ற பாரத ''புண்ணிய பூமியில்'' வாட்டுகின்ற வறுமைத்துயர் வளர்ந்துவரும் சிக்கலாக இருப்பதனைப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. நமது நாட்டு மக்களில் நூற்றுக்கு நாற்பது பேர் வறுமை வட்டத்திற்குள் உயிர்வாழப் போராடிக் கொண்டிருக்கின்றனர். வறுமை-வெளிப்படையாகவே தெரிகின்ற ஒன்றாக இருப்பதால் இதனை விளக்க வேண்டிய தேவை இல்லை.

வறுமைத் துன்பம் இயற்கையான, செயற்கையான இருவகைக் காரணங்களாலும் தோன்றுகின்றது. வான் மழை பொய்ப்பதாலோ, அளவு கடந்து பருவம் மாறி மழை பொழிவதாலோ வறுமைத் துன்பம் ஏற்படலாம். இந்தியா போன்ற வேளாண்மை நாட்டில் மழை வளம் குன்றுகின்ற போதெல்லாம் உயிரினங்கள் பெருந்துயருக்கு ஆளாவதனைக் காண்கின்றோம்.

நமது சமுதாய, பொருளாதார, அரசியல் அமைப்பு முறைகளாலும் வறுமை வளர்கின்றது. சமுதாயத்தில் இருக்கின்ற மக்களைச் ' சொத்துடையவர்கள் - சொத்து இல்லாதவர்கள்'' ''உயர்ந்த ஊதியம் கிடைக்கும் வேலைகளில் இருப்பவர்கள் - வேலையற்றவர்கள்'', ''எதையும் செய்து எளிதாகப் பணம் பெறும் ஆற்றல் பெற்றவர்கள் - ஆற்றல் அற்றவர்கள்'', ''அரசியல் அதிகாரமுள்ள வல்லவர்கள் - ஆட்பட்டுக் கிடக்கின்ற மற்றவர்கள்'', ''செல்வாக்கும் சொல்வாக்கும் பெற்றவர்கள் - வயிற்றுக்குச் சோறின்றி வாயில்லாப் பூச்சிகளாக வாழ்பவர்கள்'' என்று பலவகைகளாகப் பிரிக்கலாம். இந்தப் பிரிவுகள் எல்லாம் சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

இயற்கை, உயிர் இனங்களுக்குப் போதுமான வளங்களை வழங்கியிருக்கின்றது. ஆனால் தந்நலம் கொண்டவர்கள் செயற்கை முறைகளை வகுத்து, தங்களது தேவைகளுக்கு மேல் பேராசையினால் சேர்த்து வைத்து. உடைமை உரிமை கொண்டாடி, முடிந்த அளவு சுரண்டி பக்கத்திலிருக்கின்றவர்கள் பசித்திருக்கப் பார்த்தும் பார்க்காமல் இருக்கின்றனர்.

நமது நாட்டில் வறுமைத் துயரம் வளரப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் இரண்டு தலையாய காரணங்களைச் சுட்டிக் காட்டலாம். முதலாவதாக, இன்றுள்ள முதலாளித்துவ அமைப்பு முறையில் இலாப நோக்கமும் சுரண்டலும் வேகமாக வறுமையை வளர்க்கின்றன.

இரண்டாவதாக, உழைப்பை 'உடல் உழைப்பு' 'மூளை உழைப்பு' என்று பிரித்து உடல் உழைப்புக்கு ''பிழைத்திருக்கக் கூலியும்', மூளை உழைப்பிற்கு ''உண்டு களித்து வாழ்ந்திருக்கக் கூலியும்'' கொடுக்கின்றனர். நமது நாட்டில் தோன்றிய நான்கு வர்ணப் பாகுபாடு இத்தகையப் பிரிவு முறைக்கு ஆக்கம் அளித்தது. சூத்திரர்களுக்கு உடல் உழைப்பை ஒதுக்கிவிட்டு, மற்றைய மூன்று இனங்களும் (சத்திரியர், பிராமணர், வைசியர் ஆகியோர்) மூளை உழைப்பைத் தங்களுக்கேற்றதாகக் கொண்டனர். பெரும்பாலும் சமுதாயத்தில் உடல் உழைப்பைச் சார்ந்திருப்பவர்களே வறுமைத் துன்பத்தில் வாடுகின்றனர்.

**வறுமையின் விளைவு:** செல்வ ஏற்றத் தாழ்வு போராடுகின்ற 'இருப்பவர்கள் - இல்லாதவர்கள்' (முதலாளிகள் - தொழிலாளிகள்)

என்ற இரண்டு இனங்களைத் தோற்றுவிப்பதோடு நின்று விடுவதில்லை. இந்த ஏற்றத் தாழ்வின் விளைவாக உருவெடுக்கும் வறுமைத் துன்பம் மிகுகின்ற பொழுது ''பசிப்பிணி'' மனித குலத்தை அச்சுறுத்துகின்ற வகையில் வடிவம் பெறுகின்றது.

போரின் விளைவுகளைவிட வறுமையின் விளைவுகள் கடுமையானவைகளாகவும் கொடுமையானவைகளாகவும் இருக்கின்றன வறுமை பற்றுகின்ற பொழுது உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றி, 'விலங்கு' நிலைக்குத் தள்ளப்பட்டு மக்கள் அல்லற்படுகின்றனர்.

''இல்லாமை'' என்னும் நெருப்பால் ஏற்படும் அழிவுகள் பலவாகும். இல்லாமை பசிப்பிணியாய் உருவெடுத்து முதலில் தனி மனிதர்களையும், பின்னுல் நாட்டின் பண்பாட்டையும் அழிக்கின்றது. இதனுல்தான் சமுதாய நோக்குள்ள சான்ருேர்கள் எல்லாம் வறுமையை விரட்டுகின்ற பணியை ஒரு ''பேரறமாக''க் கூறியிருக்கின்றனர்.

**வள்ளலாரின் அணுகு முறை:** மண்ணுலக மக்களின் வாழ்க்கை ''அழியாத அருள் வாழ்வாக'' மலர ''அருட் பெருஞ் சோதி''யின் ஆற்றலை வேண்டிப் பெற்ற வள்ளலார் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த ஆன்மீக மெய்ஞ்ஞானியாக வாழ்ந்தார் தனிவாழ்க்கையில் பற்றுக்களைத் துறந்த வள்ளலார், சமுதாய வாழ்க்கையைத் துறந்து செல்லவில்லை. தனிமனித மேம்பாட்டிற்குச் சமுதாய வாழ்க்கையும் மக்கள் தொடர்புகளும் துணையாக இருக்க வேண்டுமென்று கருதினுர்.

''உலகியல்'' வாழ்க்கையைப் பற்றிய தெளிவான கருத்துக் கொண்டிருந்தார். இதனை,

> "ஒத்தாரும் தாழ்ந்தாரும் உயர்ந்தாரும் எவரும்
> ஒருமையுளர் ஆகிஉல கியல்நடத்த வேணடும்'',

என்று கூறுகின்ருர். மக்களினத்தை மட்டுமின்றி உயிர்களை எல்லாம் ''ஒன்ருகக்'' கருதுகின்ற வள்ளலாரின் ''ஆன்ம நேய ஒருமைப் பாட்டுத்'' தத்துவம் ஓர் ஏற்றத் தாழ்வற்ற இலட்சிய சமுதாயத்தை அமைக்க வழிகாட்டுகின்றது.

வள்ளலார் உயிரினம் படுகின்ற வறுமைத் துயரை தன்னுள்ளத்தில் பொங்கி வழிகின்ற கருணையின் மூலம் தன் துயராக உணர்ந்து கசிந்துருகுகின்ருர். இதனை அவரது,

''வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோறு இரந்தும் பசியறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டுஉளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
நேர்உறக் கண்டுஉளம் துடித்தேன்
ஈடில் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சில்
இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்''[1] என்ற

பாடல் தெளிவாகக் காட்டுகின்றது.

வள்ளலாருக்கு வறுமைத் துன்பம் நேரடியாகத் தெரியும். அவரது குடும்பம் வறுமையில் வாடியது. அண்ணனின் குறைந்த வருவாயில் வாழ்ந்த குடும்பத்தில் வளம் இருந்திருக்க வழியில்லை. வள்ளலார் பசித்திருந்ததுண்டு. இல்லாமல் வாடியதுண்டு. ஆனால் யாரிடமும் எப்பொழுதும் எதையும் கேட்டதில்லை. மற்றவர்கள் கொடுத்த பொழுது கூட வாங்க விரும்பவில்லை. நாளைக்கு ''இருவேளை உணவு'', ''ஒரு வேளை உணவு'' என்று குறைத்துக் கொண்டார். ''பசித்திரு''த்தலைப் பின்னால் தன்னையறிய, நெறிப்படுத்த ஒரு வழி முறையாகக் கருதினார். ஆனால் மற்றவர்கள் பசித்திருப்பதை அவரால் பார்த்துப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை.

ஆன்மீகச் சோதனைகளில் ''விழி''த்திருந்து ஈடுபட்ட வள்ளலார் ''தனி''த்திருந்தே பெரும்பொழுதைக் கழித்த போதிலும் மக்களை-விட்டு ஒதுங்கியிருக்கவில்லை. அவரோடு தொடர்பு கொண்டவர்கள் எல்லாம் பெரும்பாலும் வாழ்க்கையின் அடித்தட்டில் இருந்த மக்களே. அவர்களது 'உலகியல் வாழ்க்கையை' அடிக்கடி கேட்கின்ற நிலை அவருக்கு ஏற்பட்டது. அப்படிக் கேட்ட பொழுதெல்லாம் அவரது உயிர் இரக்கங் கொண்ட ஒப்பற்ற உள்ளம் என்ன பாடுபட்ட தென்பதை,

''பரைத்தனி வெளியில் நடம்புரிந்தருளும்
பரமனே! அரும்பெரும் பொருளே!
தரைத்தலத்து இயன்ற வாழ்க்கையில் வறுமைச்
சங்கடப் பாவியால் வருந்தி

1. திருவருட்பா (ஊரன் அடிகள் 1972 பதிப்பு) 3471

*நரைத்தவர் இளையவர் முதலினோர் எனைஓர்*
*நண்பன் என்று அவரவர் குறைகள்*
*உரைத்தபோ தெல்லாம் நடுங்கியென் உள்ளம்*
*உடைந்தது உன்உளம்அறி யாதோ!*''[2] என்று கூறுகின்றார்.

வள்ளலார் வறுமைத் துன்பத்தைப் பற்றி எண்ணிய பொழுது சமுதாய, அரசியல், பொருளாதார அமைப்பு முறைகளின் அடிப்படையில் சிக்கலை அணுகவில்லை. புற அமைப்புக்களை ஒட்டிய காரணங்களுக்கெல்லாம் மனிதனின் ''உள்ளம்'' தான் அடிப்படையாக இருக்கின்றதென்ற தெளிவின் காரணமாக தனி மனிதனை மையமாக வைத்துக் கொண்டு சிக்கலை அணுகுகின்றார்.

அணுகுமுறை தனிமனித வழி அமைந்தாலும், அதில் சமுதாய நலக் கண்ணோட்டம் உள்ளடங்கியிருப்பது கவனிக்கத்தக்கதாகும். ''எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க வேண்டும்'' என்ற பெரிய இலட்சியத்தை நோக்கியே வள்ளலாரின் சிந்தனையும், செயலும் அமைந்திருந்தன.

**வள்ளலார் கண்ட காரணங்கள்** : இருப்பவர்கள் தங்களது உள்ளங்களைக் கல்லாக்கிக் கொள்வதாலேயே எங்கும் வறுமை இருப்பதாகக் கருதுகின்றார். சில செல்வர்களிடம் காணப்படுகின்ற ''கஞ்சத்தனத்தையும் ஈயாப் பண்பையும்'' தன்மீது ஏற்றிக் கொண்டு

''*உடுத்திலேம் சிறிதும் உண்டிலேம் எனவந்து*
*ஓதிய வறிஞருக்கு ஏதும்*
*கொடுத்திலேன் கொடுக்கும் குறிப்பிலேன்*''[3] என்று கூறுவது குறிப்பிடத்தக்கது.

வள்ளலார் வாழ்ந்த காலத்தில் பாரதநாடு ஆங்கிலேயரின் ஆட்சியில் பாழ்பட்டுக் கிடந்தது. அவர்கள் அடித்த ''வாணிபக் கொள்ளைக்கு'' அளவில்லை. ''எரியும் வீட்டில் பிடுங்கினது ஆதாயம்'' என்பது போல இங்கிருந்த வணிகர்களும் செல்வர்களும் ஏழைகளைக் கசக்கிப் பிழிந்தனர். ''பணம் இல்லார்க்கு இடுக்கண் புரிந்து உண்ணும் சோற்றுப் பணம் பறித்து'' மற்றவர்கள் துன்பத்தில்

2. *திருவருட்பா-3420*
3. *திருவருட்பா-3352*

உழல, ஆடம்பரமாகிய ''பொய் வாழ்க்கை'' வாழ்ந்து கொண்டிருப்-பவர்களாலேயே துன்பம் பெருகுவதாகக் கருதினர்.

பணத்தாசை மிக்கவர்கள் வட்டியின் மூலம் மற்றவர்களைச் சுரண்டி வாழ்கின்றனர். மிகுதியான வட்டியில் கடன்பட்டவர்கள், இருப்பதை எல்லாம் இழந்தும் மீள முடியாமல் துன்பப்படுவதைக் காணலாம். தன்னையே 'வட்டியைப் பெருக்குபவன்' நிலையில் பாவித்து

''வட்டியைப் பெருக்கிக் கொட்டியே ஏழை
மனைகவர் கருத்தினேன் ஒட்டைச்
சட்டியே எனினும் பிறர்கொளத் தரியேன்
தயவிலேன் சூதெலாம் அடைத்த
பெட்டியே நிகர்த்த மனத்தினேன்''[4] என்று கூறுகின்றார்.

இரக்கமற்று வட்டியின் மீதே குறியாக இருக்கின்றவர்களைச் சாடுகின்ற வகையில்,

''வட்டிமேல் வட்டிகொள் மார்க்கத்தில் நின்றீர்
வட்டியை வளர்க்கின்ற மார்க்கத்தை அறியீர்
பெட்டிமேல் பெட்டிவைத் தாள்கின்றீர் வயிற்றுப்
பெட்டியை நிரப்பிக்கொண் டொட்டியுள் இருந்தீர்
பட்டினி கிடப்பாரைப் பார்க்கவும் நேரீர்
பழங்கஞ்சி ஆயினும் வழங்கவும் நினையீர்
எட்டிபோல் வாழ்கின்றீர் கொட்டிபோல் கிளைத்தீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே'',[5] என்று

பாடுகின்றார்.

அன்றைய சமய நிலையைப் பற்றி ம. பொ. சிவஞானம், ''வள்ளலார் காலத்துக்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழகத்தில் வறுமைக் கொடுமை வாழ்ந்து வந்திருக்கின்றது. ஆயினும் வாழ்த்துக் கூறும் மடமை வாழவில்லை. வள்ளலார் காலத்தில்–வறுமை, சமுதாயம் பெற்ற சாபமாகக் கருதப்பெற்றது. பட்டினி பாவத்தின் பரிசாகவும், பட்டினி கிடப்போன், பாவத்தின் சின்னமாக-வும் - பாவியாகவும் கருதும் இழிநிலை இருந்தது. பட்டினி கிடக்கும் பாவிக்கு உணவளிப்பவனும் பாவத்தில் பங்கு பெறுகிறுன் – என்று

4. திருவருட்பா 3351
5. திருவருட்பா 5561

கூடப் பயமுறுத்தப்பட்டது. இந்தக் கொடுமை கண்டு உள்ளங் குமுறிய வள்ளலார், 'இதனை நினைந்திடுந்தோறும் உள்ளம் எரிகின்றது; உடம்பும் எரிகின்றது! என்று கூறினார்,''[6] என்று குறிப்பிடுகின்றார்.

ஒருவர் வறுமையில் வாடுவதை அவரது ஊழ்வினைப்பயன் என்று கருதி, அவருக்கு உதவாமல் ஒதுங்கியிருப்பதை வள்ளலார் ஏற்றுக் கொள்ளவில்லை. முற் பிறப்பின் செயல்களின் விளைவாக வறுமையில் வாடுகின்றாரென்பதை உலகியல் அடிப்படையில் உறுதிப்படுத்த இயலாமல் இருக்கலாம். மண்ணுலக வாழ்வில் சிலர் தங்களது சோம்பேறித்தனம், வேண்டாத பழக்கங்கள் போன்ற குறைகளினால் வறுமையில் வாடுவதைப் பார்க்கலாம். மற்றவர்களால் ஏமாற்றப்பட்டவர்களும், சுரண்டப்பட்டவர்களும் வறுமையால் வாடுகின்ற நிலையும் இருக்கின்றது. நல்லவர்களை, மற்றவர்களுக்குப் பயன்பட வாழ்ந்தவர்களை வறுமை சூழ்வதை அறிஞர்கள் புதிராகவே எண்ணிப் பார்க்கின்றனர். வள்ளலார் என்ன காரணத்தினால் ஒருவர் வறுமைத் துன்பத்திற்கு ஆளானாலும் அதனை நீக்குதல் தேவையென்று கருதுகின்றார்.

தீர்வுகள் : வறுமையை ஒழிக்க 'வன்முறையான புரட்சியை வழிமுறையாகக் கூறுகின்றவர்கள் உள்ளனர். சட்டத்தின் மூலமாகத் தக்க நடவடிக்கைகள் எடுக்கலாமென்று கருதுகின்றவர்களும் இருக்கின்றனர்.

ஆன்மீகச் செல்வரான வள்ளலார் புரட்சியின் மூலமாகவும் சட்டத்தின் மூலமாகவும் வறுமையை ஒழிப்பதைவிட, வாழ்க்கையில் வாய்ப்புள்ளவர்கள் வறுமையின் விளைவான பசியைப் போக்குவதை ''ஆன்ம இலாபத்தை'' அடையத்தக்க பணியாகக் கருதுகின்றார்.

வள்ளலார் தமது ''சீவகாருண்ய ஒழுக்கம்'' நூலில் பசியின் கொடுமையையும், அதனைப்போக்க வேண்டிய அவசியத்தையும் பல முறைகளில் வலியுறுத்துகின்றார். வள்ளலாரின் பசி பற்றிய கருத்தை விளக்கும் வகையில் சுவாமி சரவணானந்தா, ''கடவுள் தயவே இன்று பசியின் தத்துவமாக அறியப்படுகின்றதால், மனிதன் கடவுளை அடைவதற்கு, கடவுள் தயவைப் பூரணமாகப் பெற்று வாழ்வதற்கு ஜீயதயவு பூண்டவனாகி பிறர்க்குப் பசியினால் துன்பமும் அழிவும்

6 வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, இன்பநிலையம், சென்னை 1, 1964 ப. 130

நேராதபடி உண்டி வழங்கும் உயிர்த்திருப்பணியை மேற்கொண்டொழுக வேண்டும்''[7] என்று கூறுகின்றார்.

வள்ளலார் ''அருட் பெருஞ் சோதி'' ''தனிப் பெருங் கருணையாக'' இருக்கின்ற இறைவனை அடைய நாமும் இரக்கத்தின் உருவமாக மாறவேண்டுமென்று கருதுகின்றார். நாம் இரக்கத்தைப் பெற ஏற்ற வழியாக 'சீவகாருண்ய ஒழுக்கம்' அமைகின்றது. இதனை அவர், ''பசியினால் வருந்துன்பத்தையும் கொலையினால் வரும் துன்பத்தையும் நிவர்த்தி செய்விப்பதே சீவகாருண்யத்திற்கு முக்கிய லட்சியமென்று அறியவேண்டும்''[8] என்று விளக்குகின்றார்.

வள்ளலார் இரக்கத்தை வலியுறுத்தி வெறும் சொற்பொழிவு நிகழ்த்திவிட்டு மட்டும் செல்லவில்லை. இல்லாதவர்கள் இரந்து உயிர் வாழ்தலை விரும்பாத அவர், அவர்கள் கேட்காமலே பசியைப் போக்குகின்ற அமைப்புத் தேவையென்று எண்ணினார். அவரது முயற்சியினால் 23-5-1867-இல் வடலூரில் சத்திய சுத்த சன்மார்க்க தருமச்சாலையை நிறுவினார்.

வள்ளலாரின் தருமச்சாலைக்கும் தமிழகத்தில் சாதிகளின் பெயராலும் சமயங்களின் பெயராலும் அமைந்திருக்கின்ற எண்ணற்ற தருமச்சத்திரங்களுக்கும் மடங்களுக்கும் அடிப்படையில் வேறுபாடு உண்டு. திரு. அ. லெ. நடராஜன், ''நாட்டு மக்களில் மிகப் பெரும் பாலோர் பரம ஏழைகளாய் இருப்பதையும், பசியாலும் பிணியாலும் அவர்கள் நலிவுறுவதையும் கண்டு அடிகள் உள்ளம் உருகினார்கள். தருமசிந்தையுள்ள பணக்காரர்களோ உயர்சாதி இந்துக்களுக்கு மட்டும் அன்ன சத்திரம் முதலியன கட்டி அன்னம் பாலித்தார்களேயல்லாமல், ஏழை எளிய மக்களைக் கருத்தில் கொண்டு அன்ன சத்திரங்களை அமைக்கவில்லை''[9] என்று கூறுவது ஆய்வுக்குரியதாகும்.

வள்ளலார் சாதி-சமய வேறுபாடுகளைக் கடந்து நின்று பசிப் பிணியைப் போக்க வேண்டுமென்று எண்ணியதால், மனித குலத்திற்குப்

---

7. வள்ளலார் கண்ட ஒருமை வாழ்வு, இராமலிங்கர் பணிமன்றம்- சென்னை-86 ப. 94
8. சீவகாருணிய ஒழுக்கம், இராமசாமி அன் சன்ஸ், சென்னை, 1927 ப. 15
9. வள்ளலார் வாழ்வும் வாக்கும், இராமலிங்கர் பணிமன்றம், சென்னை, 1974 ப. 160

பொதுவானதாக தனது சத்திய தருமச்சாலையை அமைத்தார். அதனை நிறுவுவதற்குரிய இடத்தையும் தேவையான பணத்தையும் சாதாரண மக்களிடமே பெற்றுர் என்பது குறிப்பிடத்தக்கது. என்றும் அணையாத அடுப்பை மூட்டி உணவளிக்கும் அறப்பணியைத் தொடங்கிய வள்ளலார் மக்கள் வழங்குகின்ற அறக்கொடைகளின் மூலம் தருமச் சாலைப் பணிகள் தட்டின்றி நடக்க ஏற்பாடு செய்துள்ளார்.

வள்ளலார் தான் அமைத்த தருமச்சாலை சோம்பேறிகளின் மடமாக்கக் கூடாதென்ற கருத்துக் கொண்டிருந்தார். பசியால் வாடு-கின்ற உடலுக்கு உணவளித்து, உயிர் தழைக்கச் செய்தால், ஆற்றல் பெற்ற உடல் உழைக்கும் நிலைக்கு வரும். பின்னுல் உழைத்து வாழ்-கின்றவனுக ஒருவனை மாற்ற இடைக்கால உதவியாக உணவளிப்பது அறச்செயலாகின்றது.

நிறைவுரை: வள்ளலார் வறுமையைப் போக்கும் பணியில் அரசும், செல்வர்களும் மட்டும் ஈடுபட்டால் போதாதென்று கருதினுர். ஓரளவு வாய்ப்புடைய நாட்டு மக்களெல்லாம் இந்தப் பணியில் ஈடு பட்டால் முதலில் மக்களினமும் காலப் போக்கில் எல்லா உயிரினங்-களும் இன்பமாகவும் அமைதியாகவும் வாழுமென்று எண்ணினுர்.

வள்ளலார் வழியில் தொண்டு செய்ய இன்றும் மிகுந்த வாய்ப்புக்கள் இருப்பதனைக் காணலாம். □

# 13. வள்ளலாரும் பசிப்பிணியும்

தமிழகத்திற்குத் தனிச்சிறப்பைத் தேடித்தந்த ஆன்மஞானிகளில் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள் தலையாயவராவார். இன்றைய தமிழகம் எத்தனையோ வகையான பக்திமார்க்கங்களில் ஏதோ ஒருவகையான சன்மார்க்க நெறியை உபதேசித்துவிட்டுச் சென்றவராக மட்டுந்தான் அவரைக் கருதிக் கொண்டிருக்கின்றது. அன்பில் கனிந்து அருளில் கசிந்துருகிய செந்தமிழ் ஞானியான வள்ளலாரின் சமயக் கண்ணோட்டம் பெரும்பாலான மக்களுக்குத் தெரியாத நிலையிலேயே இருக்கின்றது.

நற்றவ யோகி: ஒரு காலத்தில் ஊரைவிட்டு ஒதுங்கி மக்களை மறந்து காடுமலை சென்றேறி கடுந்தவம் செய்கின்றவர்களைத்தான் யோகிகளென்று எண்ணினர். இத்தகைய யோகிகளின் முயற்சி களெல்லாம் தாங்கள் முக்திபெற முயல்வதாகவே இருந்தது. இதனால் அவர்கள் பெருக்கிக் கொண்ட உள்ளொளி மனித குலத்திற்கு வழி காட்டுவதாக அமையவில்லை. அத்தகைய யோகிகளின் வாழ்க்கை வியத்தகு நிலையில் இருந்தது. ஆனால் சமுதாயப் பயன் இல்லை. கருத்துப் புரட்சியும் மறுமலர்ச்சியும் ஏற்பட்ட தற்காலத்தில் யோகிகளைப் பற்றிய கருத்தும் கண்ணோட்டமும் மாறிவந்துள்ளன.

மனிதர்களோடு மனிதராக வாழ்ந்து, தான் மேம்பட்டு உயர் கின்ற வேளையில் மற்றவர்களும் உயர்ந்தோங்கி வழிகாட்டி, கைகொடுத்துத் தொண்டு செய்கின்ற வாழ்க்கையைத்தான் உயர்வானதாகக் கருதுகின்ற நிலை வளர்ந்திருக்கின்றது. இதனை மகாகவி பாரதியார் மிகவும் எளிமையாகவும் தெளிவாகவும்,

"உற்றவர் நாட்டவர் ஊரார்—இவருக்கு
உண்மைகள் கூறி இனியன செய்தல்
நற்றவம் ஆவது கண்டோம்—இதில்
நல்ல பெருந்தவம் யாதொன்றும் இல்லை.
பக்கத் திருப்பவர் துன்பம்—தன்னைப்
பார்க்கப் பொறாதவன் புண்ணியமூர்த்தி;

ஒக்கத் திருந்தி உலகோர்—நலம்
உற்றிடும் வண்ணம் உழைப்பவன் யோகி,'' 1

என்று கூறுகின்றார். வள்ளலாரின் வாழ்க்கை, அவர் ஒரு புண்ணிய மூர்த்தியாக ஊருக்கு உழைக்கும் யோகியாகத் திகழ்ந்ததைக் காட்டு-கின்றது.

வள்ளலாருக்கு முன்னால் எத்தனையோ ஞானிகள் தோன்றியிருக்-கின்றார்கள். அவர்கள் சிறந்த தத்துவங்களை வழங்கியிருக்கின்றார்கள். அவர்களின் மரபுவழியில் வந்ததாகத் தன்னைத் தானே கூறிக்கொள்-கின்ற வள்ளலாரின் இதயத்தில் மெய்ஞ்ஞானம் மட்டும் பொங்கவில்லை; இரக்கம் நிரம்பி வழிந்தது. இதனை,

''வாழைஅடி வாழைஎன வந்ததிருக் கூட்ட
மரபினில்யான் ஒருவன் அன்றோ வகைஅறியேன் இந்த
ஏழைபடும் பாடுனக்குந் திருவுளச்சம் மதமோ
இது தகுமோ இதுமுறையோ இதுதருமந் தானோ
மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளல்யான் உனக்கு
மகன் அலனோ நீஎனக்கு வாய்த்ததந்தை அலையோ
கோழைஉல குயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருள்நின் அருள்ஒளியைக் கொடுத்தருள்க'' 2

என்ற வள்ளலாரின் வாக்குத் தெளிவாகக் காட்டுகின்றது.

''உலகுயிர்த்துயரம் இனிப் பொறுக்க மாட்டேன்,'' என்ற சொற்கள் இந்த வையகத்திலுள்ள துயர்களை எல்லாம் அவர் தனது துயராக உணர்ந்து துடித்ததைக் காட்டுகின்றன. இந்நிலையை நீக்க இறையருளை வேண்டி நின்ற அடிகள், அதற்கான செயல்களையும் மேற்-கொண்டதன் மூலமாக மரபு வழியிலிருந்து மாறுபட்டுச் சென்று சிறப் படைகின்றார். காலத்திற்கேற்ற நற்றவ யோகியாகத் திகழ்கின்றார்.

**சமுதாய அமைப்பும் பசிப்பிணியும்:** அற்றார் அழிபசி தீர்க்கின்ற அறத்தை இறைவனை அடைகின்ற பெருநெறிகளில் ஒன்றாக இணைத்த வள்ளலாரின் செயற்கரிய செயலைப் புரிந்து கொள்ள சமுதாயத்தின் உள்ளார்ந்த நோயாக இருக்கின்ற பசிப்பிணியைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

1. பாரதியார் கவிதைகள் - 'உயிர் பெற்ற தமிழர் பாட்டு' - ப.473
2. திரு அருட்பா - 3803

இறைவனின் அருளை இயற்கை வெளிக்காட்டுகின்றது. மனிதனின் இயல்பான தேவைகளுக்கு வேண்டியவற்றை எல்லாம் இயற்கை வாரி வழங்குகின்றது. ஆனால் மனிதனின் செயலோ இயற்கையோடு மாறுபட்டு வேறுபட்டு நிற்கின்றது. அவனிடம் தலை தூக்கிய தன்னல உணர்வுகளும், அறிவின் துணையில் அவன் உருவாக்கிய சமய, சமுதாய, பொருளாதார, அரசியல் அமைப்புகளும் பிறப்பால் ஒன்றாக இருக்கும் மனிதர்களிடம் எண்ணற்ற வேற்றுமைகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் உருவாக்கியிருக்கின்றன.

இயற்கை அளித்தவற்றில் தனது தேவைக்கு மட்டும் மனிதன் எடுத்துக் கொண்டிருந்தவரை, சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வும் இல்லாமையும் தோன்றவில்லை. ஆனால் என்று இயற்கைச் செல்வங்களை குறிப்பாக நிலத்தை - மனிதன் தனிவுடமையாக்கி கொண்டானோ, அன்றே ''இருப்பவர்கள்'' ''இல்லாதவர்கள்'' என்ற இரண்டு இனங்கள்தோன்றிவிட்டன. இத்தகைய அமைப்பை அரசியல் சட்ட திட்டங்கள் கட்டிக் காத்தன. சமுதாய நம்பிக்கைகள் இறைவனின் பெயரால் 'விதியை'க் கூறி ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்தின. இந்தப் பின்புலத்தில் பொருளாதார வளர்ச்சியும், வறுமைச் சிக்கலும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

தமிழகத்தின் பொற்காலம் என்று கருதப் பெறுகின்ற சங்க காலத்திலேயே 'இல்லாமை' பசிப்பிணியாக - தனிமனிதனை வாட்டும் சமுதாய நோயாக இருந்ததை இலக்கியங்கள் காட்டுகின்றன. தங்களது வறுமை நிலையைக் கேட்பார் மனங்கனிந்து பொருள் வழங்கும் நிலையில் பாடிய புலவர்கள் இருந்திருக்கின்றனர்.

மனிதர்களை மிருகங்களின் நிலைக்கு இறங்கச் செய்கின்ற பசியின் கொடுமையை நன்குணர்ந்து பாடிய முதல் பெருமை திருவள்ளுவரைச் சேரும். ''பழைய பாடல்களில் வறுமையால் வாடியவர்களின் காட்சி ஒரு புறமும், அவர்களின் வறுமையைத் தீர்க்கவல்ல செல்வர்களின் வளமான வாழ்வின் காட்சி மற்றொரு புறமும் அமைந்திருக்கும். வறுமையின் கொடுமையைத் தெளிவாக எடுத்துக் கூறியும், இரந்து வாழும் பொல்லாத நிலையைக் கடிந்து கூறியும் திருவள்ளுவர் புரட்சி செய்துள்ளார்.''[3] என்று டாக்டர் மு. வரதராசனார் கூறுகின்றார்.

3. தமிழ் இலக்கிய வரலாறு - ப. 72

அழிபசிக் கெதிரான புரட்சிக் கருத்துக்களை உணர்ச்சியுடன் வெளியிடுகின்ற பல குறள்மணிகள் இருக்கின்றன. 'இன்மை'யை ஒரு பாவியாகக் கருதுகின்ற வள்ளுவர், அதன் வெங்கொடுமையை அதற்குப் பலியான ஒருவனே கூறுவதைப் போல,

''இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு''[4]

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது''[5]

என்றும் கூறுகின்றார்.

இதற்கு மாற்றாகச் செல்வர்கள் ஈந்து, இசைபட வாழ்கின்ற நிலை வேண்டுமென எண்ணிய வள்ளுவர், ''வறியார்க்கொன்று ஈவதே ஈகை'' என வலியுறுத்தி, பசிப்பிணியைத் தீர்க்கும் வழிமுறையாக,

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை'' [6]

''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி''[7]

என்று கூறுகின்றார்.

சமுதாயத்தில் ''அற்றவர்களுக்கு'' அளிக்கின்ற அறம் போற்றப்பட்ட போதிலும், அதனைப் பின்பற்றுகின்ற மனம் எல்லாச் செல்வர்களுக்கும் வரவில்லை. இதனால் இந்தச் சமுதாயத்தில் பசிப்பிணி தொடர் நோயாக, தீராத பிணியாக என்றும் இருப்பதனைக் காண்கின்றோம்.

**சமயமும் பசிப்பிணியும்:** சமயம் பொதுவாக மேலுலக வாழ்விற்கு வழிகாட்ட முயல்கின்றது. ஆனால் அது முழுக்க இவ்வுலக வாழ்வைப் புறக்கணிப்பதில்லை. அப்படிப் புறக்கணிக்கின்ற சமயங்கள் மனிதர்களின் வாழ்வில் வேரூன்றுவதில்லை.

தன்னையறிந்து, அதன் மூலம் இறைவனை அடைய முயன்ற வேதகால ஞானிகள் ஒருவகையில் இயற்கையோடு கலந்த வாழ்க்கை

4. திருக்குறள் - 1048
5. திருக்குறள் - 1049
6. திருக்குறள் - 322
7. திருக்குறள் - 226

நடத்தினர். அவர்களுக்குப் பின்னல் வந்தவர்கள் உடலை வாட்டி உள்ளொளி பெருக்க முயன்றனர். எடுத்துக்காட்டாக, சமண சமயத்தைக் கூறலாம். இந்து சமயமும் அதனோடு தத்துவத்தில் மாறுபட்டுச் சண்டையிடுகின்ற சமயங்களும் காலப் போக்கில் அல்லற்பட்டு ஆற்ருது அழுத கண்ணீரோடு அழிபசித்தீயில் வெந்து கொண்டிருந்தவர்களைப் பற்றி மிகுதியாகக் கவலைப்படவில்லை. இந்நிலையில் புத்த சமயம் பசிப்பிணியைத் தீர்க்கும் அறத்தைப் பெரிதும் வலியுறுத்தியது. இதற்குச் சான்று மணிமேகலை.

மணிமேகலை காப்பியத்தில் வருகின்ற ஆபுத்திரனும், (அவன் கையிலிருந்த அமுத சுரபியும்) மணிமேகலையும் - அக்காலப் பசிப்பிணிக் கெதிராக நடந்த அறப்போரைக் கூறுகின்றனர். பசியின் கொடுமையையும், பசியைப் போக்குதலின் பெருமையையும் மணிமேகலையில் வருகின்ற தீவதிலகை,

''குடிபிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாண்அணி களையும் மான் எழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவிஅது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக்கு என் நா நிமிராது.''
''ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்ரு மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே''[8]

என்று கூறுவதைக் காண்கின்ருேம்.

இடைக் காலத்திலும் பிற்காலத்திலும் சமயப் பெரியார்கள் வறுமைத் துயரில் மக்கள் படும் பாட்டை உணர்ந்த போதிலும், அதனைப் போக்கும் நிலையை உணர்ந்து மிகுதியாக வலியுறுத்தவில்லை. ஒருவேளை விண்ணுலக வாழ்வில் அவர்கள் கொண்ட வேட்கை மண்ணுலக வாழ்வைப் புறக்கணிக்கச் செய்திருக்கலாம் இந்நிலையை மாற்றுகின்ற திருப்பு முனையை முதன் முதலில் வள்ளலாரே தோற்றுவித்தார்.

---

8. மணிமேகலை - பாத்திரம் பெற்ற காதை 76-83; 92-96

**வள்ளலார் காலச் சூழல்:** வள்ளலார் 1823-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5-ஆம் நாளில் பிறந்தார். 1874-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30-ஆம் நாள் சித்திபெற்ருர். அடிகளார் வாழ்ந்த பத்தொன்பதாம் நூற்ருண்டில் இந்தியா அன்னியரின் ஆட்சியில் அல்லற்பட்டுக் கொண்டிருந்தது.

இந்தக் காலத்தில் ஆங்கிலக் கல்வியும், ஆங்கில ஆட்சி முறையும் வாணிப நடவடிக்கைகளும் நமது நாட்டில் ஊடுருவி வளர்ந்தன. இராசராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் போன்றவர்களால் சமய மறுமலர்ச்சி ஏற்பட்டபோதிலும், சமுதாய, பொருளாதாரச் சீர்கேடுகள் மிகுந்து கொண்டிருந்தன.

இங்கிலாந்திலுள்ள தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்களை உற்பத்தி செய்து கொண்டும், அங்கு செய்த நுகர் பொருட்களை வாங்குகின்ற சந்தையாகவும் இருந்த இந்தியாவின் உயிர்நாடி ஊனப்பட்டது. கிராமக் கைத்தொழில்களின் அழிவு கிராமங்களைச் சீர்குலையச் செய்தது. வையத்து நாட்டில் எல்லாம் தாழ்வுற்று வறுமை விஞ்சி தடுமாறிய பாரத மக்களில் பெரும்பாலானவர்கள் கஞ்சி குடிப்பதற்கு இல்லாமலும் அதன் காரணத்தை அறிகின்ற ஆற்றலும் தெளிவும் இல்லாமலும் இருந்தனர். இந்த நிலையில் அற்ருர் அழிபசி தீர்க்காமல் ஆன்மீக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடியாதென்பதை வள்ளலார் உணர்ந்து செயல் பட்டார்.

**வள்ளலாரின் உள்ளம்;** வள்ளலார் இறைவனைக் கருணைக் கடலாக உணர்ந்தவர். அவரது உள்ளமும் கருணைக் கடலாகவே காட்சி தருகின்றது. வள்ளலாரின் மென்மையான உள்ளத்தையும் அதில் தோன்றிய நுண்ணிய இரக்க உணர்வுகளையும் அவரது 'பிள்ளைப் பெரு விண்ணப்பம்'' பாடல்களில் காணலாம்.

தன்னை அடுத்தவர், நேயர், சூழ்ந்தவர், உறவினர், தாயர், கொண்டுடன் பிறந்தார், அயலவர் எனும் இக்குறிப்பினர் முகங்களில் இளைப்பைக் கண்டபோதெல்லாம் மயங்கி உள்ளம் கலங்கினுர்.

இவ்வுலகில் அம்மையர், துணைவர், அடுத்தவர், உறவினர், மேயர், வேர்த்த மற்றயலார் பசியினுல், பிணியால், மெய்யுளம் வெதும்பிய வெதுப்பைப் பார்த்த போதெல்லாம் பயந்து உள்ளம் பதைத்தார்.

தரைத்தலத் தியன்ற வாழ்க்கையில் வறுமைச் சங்கடப் பாவியால் வருந்தி நரைத்தவர் இளைஞர் முதலானோர், ஏனையோர், நண்பன் என்றவரவர் குறைகள் உரைத்த போதெல்லாம் பயந்து உள்ளம் பதைத்தார்.

ஊர்வீதிகளில் ஆவிபோனது கொண்டு உறவினர் அழுத அழுகுரல்கேட்ட போதெல்லாம் நடுங்கிப் பதைத்தார்.

அவரது உள்ளம் மனிதர்களின் துயர்கண்டு மட்டும் துடிக்க-வில்லை. எந்த உயிர் துன்பப்பட்டாலும் அதனுடன் அவரும் துன்பப்-படுகின்ற இரக்கத்தின் உச்ச நிலைக்குச் சென்றார். இதனை அவர்,

''வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
நேர்உறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா விகளாய் ஏழைகளாய் நெஞ்சு
இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்''[9]

என்று கூறுவதிலிருந்து நன்கு உணர முடிகின்றது.

அழி பசியின் கொடுமையை அவர் மிகவும் அழுத்தமாக, ''இதனால் நரகவேதனை, சனன வேதனை, மரணவேதனை என்கின்ற மூன்று வேதனைகளுங் கூடி அமைந்த வேதனையே பசிவேதனையென்றும், அகம் புறம் நாடு கீழ் மேல் பக்கம் என்கிற எவ்விடத்தும் நிறைந்து எக்காலத்தும் வேறுபடாத மோட்ச இன்பமே ஆகாரத்தினாலுண்டாகும் திருப்தியின்பம் என்றும் அறியப்படும்,'' என்று கூறுகின்றார்.

வள்ளலார் கடுநரக நகர் சந்தையைக் கண்டு அஞ்சி கிராமத்தை நாடி வந்தவர். கிராமங்களில் வறுமையின் கோரப்பிடியில் சிக்கி மனிதர்கள் படுகின்ற பாட்டை நன்குணர்ந்திருக்கிறார். இதனை அவரது கருத்துக்கள் கூறுகின்றன.

**பசிப்பிணிக்கு மருந்து :** வள்ளலார் பிணியைக் கூறிவிட்டு மருந்தை வேறுயாராவது தருவார்களென எண்ணிச் செல்லவில்லை.

9. திருவருட்பா - ஆறும்திருமுறை 13:62

எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் வேறுபாடின்றி வாழ்ந்த வள்ளலார் தான் உணர்ந்த சமுதாயக் குறையை நீக்கத் தானே முயல வேண்டுமெனக் கருதினர்.

இறைவனை அடைய முழுமையான ஞானயோகத்தையோ, பக்தி யோகத்தையோ கர்ம யோகத்தையோ அவர் பின்பற்ருமல் எல்லாவற்றையும் இணைத்துக் கொண்ட புது நெறியை பின்பற்றினர். அந்த நெறியில் மெய்ஞ்ஞானத்தின் ஆழம் இருந்தது. தன்னைத் தான் அறச்செய்கின்ற தூய பக்தி இருந்தது. தான் வாழ்கின்ற சமுதாயத்திற்குத் தான் செய்ய வேண்டிய கடமையுணர்வும் அதில் அடங்கியிருந்தது.

வள்ளலார் மனிதர்களுக்குச் செய்கின்ற தொண்டு இறைவனுக்குச் செய்கின்ற பணியாக இருக்குமென்று கருதினர். திருமூலர்,

''படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்குஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமோ''[10]

என்று கூறிய வழியில் இராமலிங்க அடிகளின் சிந்தனையும் சென்றிருக்கின்றது.

வள்ளலார் இறைவனை அடைய சன்மார்க்க வாழ்வு தேவையென்று கருதுகின்ருர். இத்தகைய சன்மார்க்க, வாழ்விற்கு உயிர்நாடியாக விளங்குவது சீவகாருண்யம். இதனை ''அடிகளின் கொள்கைகளில் தலையாயது சீவகாருண்யம். சீவகாருண்யத்தை அடிகள் இருவகையால் வற்புறுத்துவர். 1. புலால் மறுத்தல் 2. அற்ருர் அழிபசி தீர்த்தல்''[11] என்று ஊரன் அடிகள் குறிப்பிடுகின்ருர்.

வள்ளலாருக்கு முன்னும் சீவகாருண்ய ஒழுக்க நெறியைப் பற்றிப் பேசியவர்கள் உண்டு. அவர்கள் எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமல் வாழ்கின்ற வாழ்க்கையை உயர்ந்த வாழ்க்கையெனப் போற்றினர். வள்ளலார்தான் முதன்முதலில் பிற உயிர்களுக்குத்

10. சீவகாருணிய ஒழுக்கம்
11. இராமலிங் அடிகள் வரலாறு--ப. 315

தீங்கு செய்யாமலிருப்பது மட்டும் போதாது; அவற்றின் துயர்களைத் தீர்க்க முயல்வதும் சேர்ந்தது தான் சீவகாருண்யம் என்ற கருத்தை வலியுறுத்தினர். இதனை அவர், ''பசியென்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்ற போது ஆகாரத்தால் அவிக்கின்றதுதான் சீவகாருண்யம். பசியென்கிற விஷக்காற்றானது ஏழைகள் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்தில் ஆகாரங் கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே சீவகாருண்யம் ...... பசி-யென்கிற புலியானது ஏழை உயிர்களைப் பாய்ந்து கொல்லத் தொடங்குந் தருணத்தில் அப்புலியைக் கொன்று அவ்வுயிரை இரட்சிப்பதே சீவகாருணியம்,'' என்கின்றார்.

வள்ளலாரின் ஆத்மா மகாத்மாவாக வளர்ந்து ஒளி பெறத் தொடங்கியது அவர் பசிப்பிணி மருத்துவராக மாறிச் செயல்பட்ட நிலையில் என்பதனை அவரது வரலாறு கூறுகின்றது ''எவனுடைய இதயம் ஏழைகளுக்காக இரத்தம் வடிக்கிறதோ அவனையே நான் மகாத்மா என்பேன். மற்றவர்களோ துராத்மாக்களே யாவர்,''[12] என்று சுவாமி விவேகானந்தர் கூறியது இங்கு நினைக்கத்தக்கதாகும்.

வள்ளலாருக்கு முன்னால் அறியாமை இருளகற்றி ஞானத்தை வளர்க்க மடங்களை நிறுவிய மதத்தலைவர்கள் நமது நாட்டில் இருந்தனர். ஆனால் பசிப்பிணியைப் போக்க அறமனங்கொண்டாரின் துணையோடு சத்திய தருமச் சாலையை நிறுவி, வெற்றர்களின் துயர் துடைக்கச் செயல்பட்டபெருமை தற்காலத்தில் வள்ளலாரையே சாரும்.

*நிறைவுரை :* டாக்டர் டி. எம். பி. மகாதேவன், ''அவர் மகா-கருணையின் திருவுருவமாகத் திகழ்ந்தார்,''[13] என்று குறிப்பிடுகின்றார். பேரருளாளராக விளங்கிய இராமலிங்க அடிகளார் பசிப்பிணியற்றதாக மனிதருலகம் விளங்க வேண்டுமென்ற பெரு நோக்கில் அதன் தொடக்கமாகத் தருமச்சாலையைத் தொடங்கினர். ''வறுமையால் வாடுவோர் அற்ற சிறந்த சமுதாயமாக மனிதசமுதாயம் வாழ-வேண்டும் என்பதே வள்ளலார் உள்ளம்,''[14] என்று சாமி சிதம்பரனர் கூறுகின்றார்.

---

12. நமது தாய் நாடு ப. 47
13. Thiru Arutpa (English Renderings) Foreword - p. XI.
14. வடலூரார் வாய்மொழி ப. 86

நாட்டிலுள்ள பசிப்பிணியைத் தீர்க்க அறமனத்தவர்கள் அறச்சாலைகள் அமைத்து முயல்தல் வேண்டும். 'வறியவர்கள் செல்வர்களை நாடிச் செல்வதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை,''[15] என்று டாக்டர் சுப. அண்ணாமலை குறிப்பிடுவது இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. மனிதனை இரந்து உயிர்வாழ்கின்ற இழிநிலைக்குத் தள்ளாமல் இருக்கின்றவர்கள் மனம் நெகிழ்ந்து கொடுக்கின்ற நிலையையே வள்ளலார் வலியுறுத்துகின்றார்.

வள்ளலாரைப் பின்பற்றுகின்றவர்கள் தங்கள் அளவில் சன்மார்க்கர்களாக நிற்பதோடு அமையாமல் பசிப்பிணியைப் போக்கும் மருத்துவர்களாகவும் மாறவேண்டும். இன்று அடிகளின் இத்தகைய சமுதாயச் சீர்திருத்தச் சமயக் கருத்துக்களைத் தமிழகம் மறந்திருக்கின்றது. இதனை மனம் நொந்து ம. பொ. சிவஞானம், ''அவரியற்றியுள்ள பாடல்களில், சீர்திருத்தக் கருத்துக்கள் நிறைந்த பாடல்கள், அவற்றிற்குரிய பொருளோடு மக்களால் இன்றளவும் போற்றப்படவில்லை; மற்றுள்ள பக்திப் பாடல்கள் மட்டுமே மக்களால் பாடப்பட்டு வருகின்றன''[16] என்று கூறுகின்றார். வள்ளலாரை முழுமையாக அறிந்து பின்பற்றினால் மனித சமுதாயம் அல்லல் நீங்கி வாழ ஒரு புதுநெறி தோன்றக் காணலாம். □

15. The Life and Teachings of Saint Ramalingar. p. 49.
16. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு ப. 42

# 14. வள்ளலார் செய்த புரட்சி

பத்தொன்பதாம் நூற்றுண்டில் நமது தாய்த்திரு நாடு இருந்த நிலையை எண்ணிப்பார்த்தால், அது ஒரு நெஞ்சு பொறுக்காத நிலை என்பது விளங்கும். நமது நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள், வலிமையற்ற தோளோடும், மார்பிலே ஒடுங்கியும், பொலிவிலா முகத்தோடும், பொறியிழந்த விழியோடும், ஒலியிழந்த குரலோடும், ஒளியிழந்த மேனியோடும், கிலிபிடித்த நெஞ்சோடும், கீழ்மையென்றும் வேண்டுபவர்களாக, சாதி நூறு சொல்பவர்களாக, தருமமொன்றும் இயற்றுதவர்களாக, நீதி நூறு சொல்லி விட்டு காசொன்று நீட்டிஞல் வணங்குபவர்களாக, தீது செய்ய அஞ்சாதவர்களாக, முன்னுல் தீமை நின்ருல் ஓடுபவர்களாக, சோதிமிக்க மணியிலே காலத்தால் சூழ்ந்த மாசு போல வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இந்த இழிநிலையை மாற்ற முதன் முதலில் குரல்கொடுத்த தமிழ்த்திருமகன் இராமலிங்க அடிகளார்.

தமிழகத்தின் தவப்பயனுய்த் தோன்றிய வள்ளலார் சமுதாய நலனில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். ஆன்மீகத் துறையின் உச்சியை அடையத் தனித்திருந்த போதிலும், மனித குலத்தின் நன்மையை மனத்தில் கொண்டு அவர் செய்த பொதுநலத்தொண்டுகள் பலவாகும். அவருடைய எண்ணத்திலும் செயலிலும் சீர்திருத்த ஒளி மேலோங்கியிருந்தது.

தான் வாழ்ந்த காலச் சூழ்நிலையில் புரையோடிப் போயிருந்த சமய சமுதாய, அரசியல் பொருளாதாரச் சீர்கேடுகளை முழுமையாக அறிந்திருந்த வள்ளலார் அவற்றைப் போக்கி, புத்துலகம் ஒன்றைப் படைக்கும் விழைவு கொண்டிருந்தார். எண்ணியதை எவர்க்கும், எதற்கும் அஞ்சாது கூறுகின்ற துணிச்சல் கொண்டிருந்த வள்ளலார் நித்தியமான சத்தியங்களாகக் கூறியவை எக்காலத்திற்கும் பொருந்துகின்ற கருத்துக்களாக விளங்குவதைப் பார்க்கின்றேம்.

*புரட்சியாளர்:* வள்ளலார் பெரும் புரட்சியாளர். வெள்ளாடைத் துறவியாக, கருணையின் வடிவமாக, மெலிந்த உடலோடு காட்சி தந்த வள்ளலாரின் கருத்துக்களில் புரட்சிக் கனல் தெரித்தது. காரிருளில்

மின்வெட்டாய், முட்காட்டை அழிக்கும் ஊழித்தீயாய், மனித குலத்தைப் பற்றியிருந்த சீர்கேடுகளைப் போக்க வந்த புரட்சியாளராக வள்ளலார் திகழ்ந்தார்.

தமிழ்ப்பெரியார் திரு. வி. கலியாணசுந்தரனார், ''எத்தகைய மாற்றமும் ஒரு புரட்சியால் தான் ஆகும். புரட்சியெனின் சரித்திர மாணவர்களுக்கு (Bloody Revolution) இன்னோரதன்ன இரத்தக் களரிகள்தான் நினைவிற்கு வரும். இங்கு நான் கொள்ளும் பொருள் இரத்தக் களரி அன்று. மாற்றம் காண வேண்டுவனவற்றின் நடுவே நின்று மெல்ல மாற்றம் காணுதலே புரட்சியெனக் கொள்ளலாம். இது அறப்புரட்சி. இரத்தக் களரியின் வாயிலாக மாற்றம் கொணர்வது மறப்புரட்சியாகும். அது வேண்டுவதில்லை! அத்தகைய அறப்புரட்-சிக்கு அடிகோலியவர்-பலபாக்கள் அம்முறையில் மாற்றம் வர வேண்டிப் பாடியவர் நம் வள்ளலார் ஆவர். நம்முடைய இராமலிங்கர் ஒரு பெரும் புரட்சிக்காரர்''[1] என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்க தாகும்.

வள்ளலார் வாழ்க்கையை முழுமையாகக் கண்டு, முழுமை பெற முயன்று, முயற்சியில் வெற்றி கண்டார். மரணமிலாப் பெருவாழ்வை மக்களினமெல்லாம் பெற வேண்டுமென்று விரும்பிய அவர் மண்ணுலக வாழ்வில் மண்டிக் கிடந்த குறைகளைப் போக்குவதைக் கடமையாகக் கொண்டார். மனித மனத்தைப் பண்படுத்த விரும்பிய அவர், மன-மென்னும் வயலில் முளைத்திருந்த களைகளை நீக்கச் சொல்லாலும் செயலாலும் பாடுபட்டார்.

அன்புள்ளங் கொண்ட அடிகளார் குறைகளைச் சாடுகின்ற பொழுது வன்சொற்களையும் பயன்படுத்துவதைக் காணலாம். அவர் மனிதர்களை வெறுக்கவில்லை. ஆனால் இறைவனின் படைப்பு நோக்-கத்தை மறந்து, வேண்டாத தடைக்கற்கள் போன்ற பழக்க வழக்கங்-களையும் கட்டுப்பாடுகளையும் மரபுகளையும் அமைப்பு முறைகளையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற நடைமுறைகளை வெறுத்தார். ஆன்ம நேய ஒருமைப்பாட்டின் மூலம் சன்மார்க்கப் புத்துலகை அமைக்க எவை-யெல்லாம் தடைகளாக இருந்தனவோ, அவற்றை எல்லாம் தகர்க்க வேண்டுமென்ற தீவிர எண்ணம் கொண்டிருந்தார். இதனை அவரது பாடல்களின் மூலம் நாம் அறியலாம்.

---

1. தமிழ்க்கலை ப. 27.

*சாதி-சமயச் சண்டைகள்:* சமுதாயத்தைப் பண்படுத்தி நெறிப் படுத்தும் நோக்கில் உலகில் சமயங்களைத் தோற்றுவித்தார்கள். மனித குலத்தை ஒருமைப்படுத்தத் தோற்றுவிக்கப்பட்ட சமயங்கள் மனிதர்களைப் பல்வேறு சாதிகளாகவும், இனங்களாகவும் பகுத்துச் சண்டையிடச் செய்த சீர்கேட்டை வள்ளலார் கண்டார். இடைக் காலத்தில் ஏற்பட்ட குலம், கோத்திரம் என்னும் பிரிவுகளும், உயர்சாதி, தாழ்ந்த சாதி, தீண்டப்படாதவர்கள் என்னும் வேறுபாடுகளும் தமிழ-கத்தில் பேயாட்டம் போட்டுக்கொண்டிருந்தன.

உயர்ந்த குலத்தினர் - சாதியினர் எனப்பட்டவர்கள் தாழ்த்தப்-பட்டவர்களெனக் கருதப்பட்டவர்களை அடிமைகளாய், விலங்குகளாய் நடத்திய கொடுமை வளர்ந்து வந்தது. இதனைக் கண்டும் காணாதவர் களாகப் படித்தவர்கள் இருந்தனர். ஆனால் இந்நிலையைக் கண்டு மனம் கொதித்தார் வள்ளலார். அவர்,

''சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த
நிருத்தமிடுந் தனித்தலைவர் ஒருத்தர்அவர் தாமே
வீதியிலே அருட்ஜோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணம்இது கூவுகின்றேன் உமையே''[2]

என்று கூறுவதிலிருந்து அவரது மன உணர்வினை அறியலாம்.

சென்ற நூற்றாண்டில் நமது தாயகத்தில் சமய வேறுபாடுகளும் பிணக்குகளும் மோதல்களும் பெருகிக் கொண்டிருந்தன. இங்கிருந்த சைவ, வைணவ, சமண புத்த முகமதிய சமயங்களோடு புதிதாக நுழைந்த கிறித்தவ சமயமும் சேர்ந்து சமயப் போர்க்களத்தை உருவாக்கிக் கொண்டிருந்தன. ஒரு நாமம் ஓருருவம் இல்லா இறைவனுக்கு ஆயிரம் திருநாமம் வழங்கியதோடல்லாமல், அந்தப் பெயருக்காகவே சண்டையிட்ட நிலை சமயங்களுக்கே இழுக்கை ஏற்-படுத்தியது.

வள்ளலாருக்கு பயனற்ற சாதி சமய வேறுபாடுகள் வெறும் 'பிள்ளை விளையாட்டாகத்' தோன்றியது. இதனால்தான் அவர்,

2. திருவருட்பா 5566

"நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்றகலைச் சரிதம்எலாம் பிள்ளைவிளை யாட்டே
மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவார் இலைநீ
விழித்திதுபார் என்றெனக்கு விளம்பியசற் குருவே
கால்வருணங் கலையாதே வீணில்அலை யாதே
காண்பனஎல் லாம்எனக்குக் காட்டியமெய்ப் பொருளே
மால்வருணங் கடந்தவரை மேல்வருணத் தேற்ற
வயங்குநடந் தரசேஎன் மாலைஅணிந் தருளே"[3]

என்று கூறுகின்றார்.

இறையருளால் வள்ளலார் சாதி சமயக் குறுகிய வட்டங்களி-லிருந்து விடுபட்டநிலையை,

"சாதிசம யங்களிலே வீதிபல வகுத்த
சாத்திரக்குப் பைகள்எல்லாம் பாத்திரம்அன் றெனவே
ஆதியில்என் உளத்திருந்தே அறிவித்த படியே
அன்பால்இன் றுண்மைநிலை அறிவிக்க அறிந்தேன்"[4]

"சாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ் சோதி"[5]

"சாதியும் மதமுஞ் சமயமுந் தவிர்த்தேன்
சாத்திரக் குப்பையுந் தவிர்த்தேன்"

"இந்தச் சாதி இந்த மதம் எனும்
சழக்கை யெலாம் தவிர்த்த சத்தியனே"

"சாதி சமயச் சழக்கைவிட் டேனருட்
சோதியைக் கண்டேனடி - அக்கச்சி
சோதியைக் கண்டேனடி"

"மதித்தச மயமத வழக்கெல்லா மாய்ந்தது
வருணச்சி ரமமெனு மயக்கமுஞ் சாய்ந்தது"

"சாதி*குலம் சமயமெலாம் தவிழ்ந்தெனை மேலேற்றித்
தனித்ததிரு வமுதளித்த தனித்தலைமைப் பொருளே"

என்றெல்லாம் கூறியிருப்பது உலகிற்கு உண்மையை உணர்த்தி வழிகாட்டவேயாகும்.

தான் காண விரும்புகின்ற அருள் சார்ந்த அமைப்பில் சாதி - சமயங்கள் என்னாகு மென்பதை,

---

3. திருவருட்பா 4174
4. திருவருட்பா 5805
5. திருவருட்பா 4075

'இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப் புன்செயில் எருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம
வழக்கெலாம் குழித்தொட்டி மண்மூடிப் போட்டுத்
தெருட்சாருஞ் சுத்தசன் மார்க்கநன் நீதி
சிறந்து விளங்க ஓர் சிற்சபை காட்டும்
அருட்சோதி வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் சோதிஎன் ஆண்டவர் நீரே''[6]

என்று விளக்கமாகக் கூறுகின்றார்.

இறைவனை ஒளிவடிவில் கண்ட வள்ளலார் உலகிற்குச் சர்வ சமய சமரசத்தை எடுத்துரைத்தார். எல்லாச் சமயத் தத்துவங்களின் உயிரோட்டமாக உள் ஒளியாக, ஒலியாக விளங்குவது ஒன்றென்பதை உரைத்திட்டார். சமயங்கள் பின்பற்றிய புறச் சடங்குகளால் வேறுபடுகின்றன. சடங்குகள் எல்லாம் சிறுபிள்ளைகள் விளையாடப் போடுகின்ற கோடுகளைப் போன்றவை. மலர்களின் வண்ணங்கள் வேறுபட்டாலும், அவற்றின் இதயத்தில் ஊற்றெடுக்கும் தேன் இனிமையானதே. அது போல சமயங்களின் காரம் ''சத்திய''மாக இருக்கின்றது. இந்த உண்மையை வள்ளலார் உலகிற்கு வலியுறுத்துகின்றார்.

''அருகர் புத்தராதி யென்பேன் அயனென்பேன் நாரா
யணனென்பேன் அரனென்பேன் ஆதிசிவனென்பேன்
பருகு சதாசிவ மென்பேன் சத்திசிவ மென்பேன்
பரமமென்பேன் பிரமமென்பேன் பரப்பிரமமென்பேன்''

என்று எப்படி அழைத்தாலும் இறைவன் ஒருவன்தான் என்பதைக் கூறுகின்றார்.

சமயங்கள் உருவ வழிபாட்டைப் புகுத்திவிட்டன. எண்ணற்ற சிறு தெய்வங்களை உருவாக்கி அவற்றை வழிபடுகின்ற நிலையில் இறைவனை மறந்து, வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்ளாமலிருக்கும் மக்களுக்காக இரக்கப்பட்டார். உண்மையை உணராமலிருக்கின்ற உலக நிலை மாறவேண்டுமென்பதை,

'கலையுரைத்த கற்பனையே நிலையெனக்கொண் டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக

6, திருவருட்பா 4654

மலைவறுசன் மார்க்கம் ஒன்றே நிலைபெறமெய் உலகம்
வாழ்ந்தோங்கக் கருதியருள் வழங்கினைஎன் தனக்கே"[7]

என்று கூறுகின்றார்.

உலகில் பல சமயக் குழுக்கள் இருக்கின்றன. இவை எல்லாம் தங்களது கற்பனைக்கு ஏற்ற வகையில் கடவுளுக்கு எத்தனையோ உருவங்களைக் கற்பித்து, கதைகள் கட்டி, மக்களைத் தங்கள் பக்கம் கவரப் போட்டியிடுகின்றன. இதனைப் 'பிள்ளை விளையாட்டெனை' அறிவிக்கின்ற முறையில்,

"கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டியபல் சமயக்
கூட்டமும்அக் கூட்டத்தே கூவுகின்ற கலையும்
கள்ளம்உறும் அக்கலைகள் காட்டியபல் கதியும்
காட்சிகளும் காட்சிதரும் கடவுளரும் எல்லாம்
பிள்ளைவிளை யாட்டெனநன் கறிவித்திங் கெனையே
பிள்ளைஎனக் கொண்டு பிள்ளைப் பெயரிட்ட பதியே"[8]

என்று கூறியிருக்கின்றார்.

தெய்வங்களின் பெயரால் உயிர்ப்பலி கொடுக்கின்ற கொடுமையை வன்மையாகக் கண்டிக்கின்றார். அருள் உருவான இறைவனை அறியாமல் உயிர்ப்பலி மூலம் தெய்வத்தின் திருவருளைப் பெற நினைக்கின்ற பேதமையைக் கண்டு மனம் நொந்து,

"நலிதரு சிறிய தெய்வமென் றையோ
நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள்
பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே
புந்திநொந் துளநடுக் குற்றேன்,
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்
கண்டகா லத்திலும் பயந்தேன்"[9]

என்று கூறுகின்றார்.

7. திருவருட்பா 3768
8. திருவருட்பா 4173
9. திருவருட்பா 3472

வள்ளலார் ''இறைவன் ஒருவனே'' என்ற கருத்துக் கொண்டிருந்தார். அந்த இறைவனை ''அருட்பெருஞ்சோதியாகக்'' கண்டு கூறினார். அவருடைய சத்திய ஞானசபை இந்தக் கடவுள் தத்துவத்தை உலகிற்கு உணர்த்த அமைக்கப்பட்டதாகும். உலகில் இதுவரை எழுதப்பட்டிருக்கின்ற வேதாகமங்களும், புராண - இதிகாசங்களும், சாத்திரங்களும் ஒரு கடவுளுண்மையை வெளிப்படையாகக் கூருமல் மக்களை மயங்கித் தடுமாறச் செய்துவிட்டதைச் சுட்டிக் காட்டுகின்ருர் அவர்

''சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்வதன்றி
நேத்திரங்கள் போற்காட்ட நேராகவே—நேத்திரங்கள்
சிற்றம்பலவன் திருவருட்சீர் வண்ணம் என்றே
உற்றிங் கறிந்தேன் உவந்து''[10]

''வேதாக மங்கள் என்று வீண்வாதம் ஆடுகின்றீர்
வேதாக மத்தின் விளைவறியீர்—சூதாகச்
சொன்ன அலால் உண்மைவெளி தோன்ற உரைக்கவில்லைஎன்று
என்ன பயனோ இவை''[11]

என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் வள்ளலார் தமக்கு இறைவன் வேதநெறிகளை உணர்த்தியதை,

''வேதநெறி ஆகமத்தின் நெறிபவுரா ணங்கள்
விளம்புநெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும்
ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் காட்டி
உள்ளதனை உள்ளபடி உணரஉரைத்தனையே''

என்று கூறுகின்ருர். ஆனால் உலகோர் சூதினையறியாமல் இருப்பதனை எண்ணி மனம் கலங்குவதைக் காணலாம்.

வள்ளலார் சமயச் சடங்குகளையும், மரபுவழிக் கண்மூடிக் பழக்க வழக்கங்களையும் சாடியதை சைவ சமய மடாதிபதிகளும், மக்களின் அறியாமையைக் கொண்டு வயிறுவளர்த்துக் கொண்டவர்களும் விரும்பவில்லை. வள்ளலாரை 'நாத்திகர்' என்று பொய் கூறி அவர் பெயரைக் கெடுக்க விரும்பினர். அவர்

10. திருவருட்பா 5515
11. திருவருட்பா 5516
12. திருவருட்பா 917

''மருளான பற்பல மார்க்கங்க ளெல்லாம்
வழிதுறை தெரியாமல் மண்மூடிப் போக'' என்று கூறிச் சாடியதைக் கண்டு அஞ்சியவர்கள் அவருக்கு எதிர்ப்பு இயக்கம் நடத்தினர். புரட்சி மனம் கொண்ட வள்ளலார் எதிர்ப்பினைக் கண்டு அஞ்சவில்லை. உள்ளத்தில் உணர்ந்த உண்மைகளை, இறையருளால் கண்டு கொண்ட கருத்துக்களைத் துணிச்சலோடு தொடர்ந்து எடுத்துரைத்துக் கொண்டிருந்தார்.

**பொருளியலில் ஒருமைப்பாடு :** வள்ளலார் பற்றற்ற வாழ்க்கையை நடத்தினார். தனது தனிவாழ்வைப் பொறுத்தவரை மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்னும் மூன்று ஆசைகளையும், இளமையிலேயே வெற்றி கொண்டவராக விளங்கினார். இதனை அவர்.

''பொன்னாசை யோடும் புலைச்சியர்தம் பேராசை
மன்னாசை மண்ணுகின்ற மண்ணாசைப் பற்றறுத்தே
உன்னாசை கொண்டேஎன் ஒற்றிஅப்பா நான் மகிழ்ந்துன்
மின்னாரும் பொன்மேனி வெண்ணீற்றைப் பாரேனோ''[13]

என்று பாடுகின்றார்.

பொன்னையும் பொருளையும் போற்றுகின்றவர்கள் வாழ்க்கையில் உயர்ந்தனவற்றைப் போற்றுவதில்லை. அப்படிப் பட்டவர்களிடம் வள்ளலாரும் துன்பப்பட்டார் போலும். தனக்கு ஏற்பட்ட துயரை மனம் நொந்து

''பொன்னை உடையார் மிகுங்கல்விப்
பொருளை உடையார் இவர்முன்னே
இன்னல் எனும் கடல்வீழ்ந்திவ்
ஏழை படும்பா டறிந்திருந்தும்''[14]

என்று குறிப்பிடுகின்றார்.

அடிகளார் உலகியலை நன்கு உணர்ந்திருந்தார். தனக்கென்று யாரிடமும் எதுவும் அவர் கேட்டதில்லை. தேட்டிலே மிகுந்த சென்னையை விடுத்து அவர் சிறிய ஊரினை நாடி வந்ததற்குக் காரணமே பெரும்பொருளின் பின்னோடும் மக்களிடமிருந்து ஒதுங்கி

13. திருவருட்பா 971
14. திருவருட்பா 2750

வாழவேண்டுமென்றே விருப்பம்தான். தன்னுடைய இந்த மனநிலையை

''பொருளிலே உலகம் இருப்பதா தலினுல்
புரிந்துநாம் ஒருவர்பால் பலகால்
மருவினுல் பொருளின் இச்சையால் பலகால்
மருவுகின் ருன்எனக் கருதி
வெருவுவர் எனநான் அஞ்சிஎவ் விடத்தும்
மேவிலேன் எந்தைநீ அறிவாய்
ஒருவும்அப் பொருளை நினைத்தபோ தெல்லாம்
உவட்டினேன் இதுவும்நீ அறிவாய்''[15]

என்று வெளிப்படுத்துகின்ருர்.

தன்னளவில் பொருளை எண்ணவும் அஞ்சிய வள்ளலார், பொருளில்லாததகினுல் வாடுகின்ற மக்களை எண்ணி வாடினுர். ''பசியினுல் இளைத்தே வீடுதோறிரந்தும் பசியருு தயர்ந்த வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்,'' என்று கூறுகின்ருர். இங்கு ''வெற்றர்'' என்ற சொல்லாட்சி குறிப்பிடத்தக்கது. ஒன்றுமே இல்லாதவர்களைத்-தான் 'வெற்றர்கள்' என்று குறிப்பிடுவதுண்டு. அப்படிப்பட்டவர்கள் வாழ வழியற்ற நிலையில், ''இரந்தும் உயிர்வாழ'' வேண்டியவர் களாக இருக்கின்ருர்கள். அப்படிப் பிச்சை கேட்டும் பசியடங்கா நிலையில் இளைத்திருக்கின்ற மக்களைக் கொண்ட ஏற்றத் தாழ்வுள்ள பொருளாதார அமைப்பை வள்ளலார் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஏழைகளை – இல்லாதவர்களை இருவகையினராக வள்ளலார் பிரித்துப் பார்க்கின்ருர். ஒருவகையினர், ஒன்று மற்ற இரக்கத் துணிந்து விட்ட வெற்றர்கள். மற்ருெரு வகையினர் இல்லாமையைச் சொல்ல மனமின்றி வீட்டிற்குள்ளேயே அல்லற்படுபவர்கள். ''ஈடின் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சிளைத்தவர் தமை கண்டே இளைத்தேன்'' என்று தனது உள்ளமும் உடலும் இளைத்ததற்கான காரணத்தைக் கூறுகின்ருர்.

சமுதாயத்தில் சிலர் தேவைக்கு மேல் மிகுதியாகச் சேர்த்து வைப்பதால்தான் பலர் வாடுகின்ற நிலை ஏற்படுகின்றது. செல்வத்தைச் சேர்க்கின்றவர்களில் பெரும்பாலோர் இரக்கமற்ற வழிமுறைகளைப்

15. திருவருட்பா 3455

பின்பற்றுவதை வள்ளலார் கண்டார். அவற்றை எல்லாம் கடுமையான சொற்களால் கண்டிக்கின்றார்' எடுத்துக்காட்டாக

''வட்டிமேல் வட்டிகொள் மார்க்கத்தில் நின்றீர்
வட்டியை வளர்க்கின்ற மார்க்கத்தை அறியீர்
பெட்டிமேல் பெட்டிவைத் தாள்கின்றீர் வயிற்றுப்
பெட்டியை நிரப்பிக்கொண் டொட்டியுள் இருந்தீர்
பட்டினி கிடப்பாரைப் பார்க்கவும் நேரீர்
பழங்கஞ்சி ஆயினும் வழங்கவும் நினையீர்
எட்டிபோல் வாழ்கின்றீர் கொட்டிபோல் கிளைத்தீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே'' [16]

என்று கூறுவதைச் சுட்டிக் காட்டலாம்.

வள்ளலார் செல்வம் படைத்தவர்கள் அருள் மனம் பெற்றவர்களாக, 'அள்ளிக் கொடுக்கும் கருணையாளர்களாக' மாறினால் எல்லா உயிர்களும் இன்புற்றிருக்குமென்று எண்ணினார்.

''அருட்பெருஞ் சோதியைப் பெற்றே அகங்களித்தல் வேண்டும்'', என்று விழைந்த வள்ளலார் இந்த சமுதாயப் பொருளாதார அமைப்பு எப்படி இருக்க வேண்டுமென்பதை,

''ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமைஉளர் ஆகிஉல கியல்நடத்தல் வேண்டும்''

என்று அருமையாகக் கூறியிருக்கின்றார்.

*அருளாளர் ஆட்சி:* ஆங்கிலேயர்களின் ஆட்சி பரவிக் கொண்டிருந்த காலத்தில் வள்ளலார் வாழ்ந்தார். 'தடி எடுத்தவர்கள் எல்லாம் தண்டல்காரர்களாகி' மக்களைக் கசக்கிப் பிழிந்து வாட்டும் கொடுமை வள்ளலாரின் உள்ளத்தை வருத்தியது.

வள்ளலாருக்கு நேரடியாக அரசியலில் ஈடுபாடு இல்லை. ஆனால் ம. பொ. சிவஞானம் கூறுவதைப் போல, ''மனிதர்கள் நடத்தும் அரசாட்சி சன்மார்க்க நெறிவழி இயங்காவிடில், ஞானியர் நடத்தும் அருளாட்சி சிறக்காது. அதனால் உலக அரசியலில் துன்

16. திருவருட்பா 5561

மார்க்கந் தொலேந்து சன்மார்க்கந் தழைக்க வேண்டுமென்று விரும்பினர் இராமலிங்கர்.'' [18]

அடிகளார் அடிமைப்பட்டுக் கொண்டிருந்த தாயகத்தில் சிற்றதிகாரக் கூட்டங்கள் செய்த கேடுகளைக் கண்டு அஞ்சியதை,

''நடுநிலே இல்லாக் கூட்டத்தைக் கருணே
நண்ணிடா அரையரை நாளும்
கெடுநிலே நினேக்கும் சிற்றதி காரக்
கேடரைப் பொய்யலால் கிளத்தாய்
படுநிலே யவரைப் பார்த்தபோ தெல்லாம்
பயந்தனன் சுத்தசன் மார்க்கம்
விடுநிலே உலகநடைஎவாங் கண்டே
வெருவினேன் வெருவினேன் எந்தாய்'' [19]

என்று குறிப்பிடுகின்றார்.

அடிகளார் அருள்மனம் கொண்டவர்களின் கையில் ஆட்சி இருக்க வேண்டுமென்ற கருத்துக் கொண்டிருந்தார். தனது கருத்தை,

''கருணே இலா ஆட்சி கடுகி ஒழிக
அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க-தெருள் நயந்த
நல்லோர் நினேத்த நலம்பெறுக நன்றுநினேத்து
எல்லோரும் வாழ்க இசைந்து''[20] என்று

வெளிப்படையாகவே கூறியிருக்கின்றார்.

**உலகெலாம் தழைக்க:** ''உலகெலாந் தழைப்பப் பொதுவினில் ஓங்கும் ஒருதனித் தெய்வத்திடம்'' நம்பிக்கை கொண்ட வள்ளலார் அருள் வழியில் சென்றால் உலகம் வாழும் என்பதை உயர்த்தினர். எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கின்ற தெளிவு மக்களுக்கு ஏற்பட்டு விட்டால், இறவாப் பெருநிலேயை அடைகின்ற ஆவல் தோன்றிவிட்டால் வெம்மைச் சிறுசெயல்கள் குறைந்து விடுமெனக் கருதினர். அதற்கான புரட்சிக் கருத்துக்களை அள்ளி வழங்கியிருக்கின்றார்.

''ஒருமையில் உலகெலாம் ஓங்க'' வள்ளலார் வழிகாட்டுகின்றார். ஏற்றத் தாழ்வற்ற, எல்லோரும் இனிது வாழ்கின்ற சமுதாயத்தைப் படைக்க விரும்புகின்றவர்களுக்கு முன்னோடியாக வள்ளலார் நிற்கின்றார். □

18. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு ப. 362
19. திருவருட்பா 3474

# 15. வள்ளலாரும் பாரதியும்

பழம்பெரும் நாடான பாரத நாடு விழிதுயிலில் முடங்கிக் கிடந்த வேளையில் ஆன்மீக அடிப்படையில் அறங்கூற வந்தார் வள்ளலார். அவருக்குப் பின்னால் புதுயுகத்தைத் தோற்றுவிக்கும் உள்ளார்ந்த வேகத்தோடு எல்லாத் துறைகளிலும் அறங்கூற வந்தார் பாரதியார். வள்ளலார் ஓர் அருள் கவிஞர். அவரது அகக்கண்ணும் உட்செவியும் திறக்க அருட்பெருஞ் சோதியாய், தனிப்பெருங் கருணை-யாய் கவிதை ஊற்றுப் பொங்கியது. மகாகவி பாரதியார் மண்ணகத்-தில் நின்று கொண்டு விண்ணகத்தைத் தொட்ட கவிஞர். இருவரும் வேறுபட்ட வாழ்க்கை முறைகளையும் கண்ணோட்டங்களையும் கொண்டி-ருந்த போதிலும், இளமை முதலே கவிதை படைத்த வரகவிகள்.

வள்ளலார் மண்ணுலகில் தனக்கென அமைத்துக் கொண்ட தவ வாழ்வின் மூலம் சித்தியாகிய முக்தி பெற்றவர். பாரதியார் அந்த முக்தி நிலை வேண்டி நின்றவர். இரண்டு பேரின் எண்ணங்களிலும் காணுகின்ற கருத்தொற்றுமைகள் நமது கருத்துக்களை வளப்படுத்தத் தக்கன.

இரு வேறு வாழ்க்கை: திருவருட்பிரகாச வள்ளலார் என்று போற்றப்பெறும் இராமலிங்க அடிகள் 1823 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5ஆம் நாள் தோன்றினார். இளமையில் பள்ளியில் சென்று படித்தது குறைவு. ஓதாது இறையருளால் கற்றது மிகுதி. உலக வாழ்க்கையில் ஒட்டாத உள்ளம் பெற்ற அவர் இயல்பாகத் துறவுள்ளம் கொண்டிருந்தார். இதனை அறியாத குடும்பத்தார் கூட்டிவைத்த திருமணத்தாலும் அவரைக் கட்டிப் போட முடியவில்லை. கோவில்கள் பல வழிபட்ட வள்ளலார் தனது 35ஆம் வயதில் வடலூரை அடுத்த கருங்குழியில் புதிய வாழ்வைத் தொடங்கினார். இருளாகிய மருளைப் போக்கும் ஒளிச்சுடராக அருட்பா விரைந்து வளர்ந்தது. 1865-இல் சன்மார்க்க சங்கத்தையும், 1867-இல் சத்திய தருமச் சாலையையும், 1872-இல் ஞானசபையையும் வடலூரில் தோற்றுவித்த வள்ளலார் 1874-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30ஆம் நாள் மேட்டுக்குப்பத்தி-லுள்ள சித்திவளாகத் திருமாளிகையில் சித்தி பெற்றார். அவர் எண்ணம் போல் எல்லாம் நடைபெற்றன.

மகாகவி பாரதியாரின் வாழ்க்கை வேறுவகையானது. வள்ளலார் சித்தி பெற்று எட்டு ஆண்டுகள் கழித்து 1882-ஆம் ஆண்டு டிசம்பர் 11-இல் பாரதியார் பிறந்தார். வறுமைத் துன்பம் இருந்த-போதிலும் தமிழிலும் வடமொழியிலும் வளமான புலமை பெற்றிருந்-தார். பத்திரிகையாசிரியராகப் பணியாற்றினார். இல்லறத்தில் ஈடுபட்ட கவிஞர் தனது வாழ்க்கையை நாட்டுக்காக அர்ப்பணித்தார். தேசியம், சமுதாய சீர்திருத்தம், நாட்டு விடுதலை, ஆன்மீகம், சமயம், பொருளாதார முன்னேற்றம் என்று வாழ்க்கையில் எத்தனை துறைக-ளுண்டோ அத்தனை துறைகளிலும் மறுமலர்ச்சியைக் காண அல்லும் பகலும் எழுத்தாலும் செயலாலும் பாடுபட்டவர் பாரதியார். அவர் அடைய விரும்பியவை மிகுதி. அடைந்தவை கொஞ்சம். அவரது மண்ணுலக வாழ்வு 1921 செப்டம்பர் திங்கள் 11-ஆம் நாள் நள்ளிரவு தாண்டிய வேளையில் நிறைவெய்தியது.

மென்மையுள்ளம் கொண்ட வள்ளலார் வெங்கொடுமையும் சாக்காடும் பொய்மையும் பொல்லாங்கும் கொண்ட மண்ணுலக வாழ்க்கையைக் கண்டு மனம் நடுங்கினார். ஆதலால் ஆடம்பர, ஆரவார வாழ்க்கையை வெறுத்து ஒதுங்கி வாழ்ந்தார். இதனை அவர்,

*''தேட்டிலே மிகுந்த சென்னையில் இருந்தால்*
*சிலுகுறும் என்றுளம் பயந்தே*
*நாட்டிலே சிறிய ஊர்ப்புறங் களிலே*
*நண்ணினேன் ஊர்ப்புறம் அடுத்த*
*காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க்*
*களத்திலே திரிந்துள்ள இளைப்பை*
*ஏட்டிலே எழுத முடியுமோ இவைகள்*
*எந்தைநீ அறிந்தது தானே''* [1]

என்று கூறுகின்றார்.

மகாகவி பாரதியார் சென்னையிலும் புதுச்சேரியும் வாழ்ந்தவர். இந்த உலகத்துக் கொடுமைகளுக்கெதிராகப் போர்க்கொடி உயர்த்தி-யவர். அவரது உள்ளத்தை அவரது பாடல்கள் காட்டுகின்றன. ''பொதுமக்கள் வாழ்வோடு தண்ணீரில் மீன் மாதிரிப் பழகிய பாரதி, தனது படைப்பாற்றல், படைப்புப் பணி முழுவதையும் மக்கள் விடுதலைக்-கும் நல்வாழ்வுக்குமே தத்தம் செய்த பாரதி, இருபதாம் நூற்றுண்டைய

---

1. *திருவருட்பா-6 பிள்ளைப் பெரு விண்ணப்பம் 58*

மக்களின்-சிந்தனை ஓட்டங்களையும் உணர்ச்சிப் பெருக்குகளையும் அழகு சொட்டச் சித்தரிப்பதில் நேர் நிகரற்ற கலைஞனாகப் பொலிந்தான்''[2] என்று ஜீவா குறிப்பிடுகின்றார்.

*கால வேறுபாடு:* வள்ளலார் வாழ்ந்த பத்தொன்பதாம் நூற்றாண்டில் பாரத நாடு அடிமைச் சேற்றில் ஆழப் புதைந்து கிடந்தது. வடக்கில் இராமகிருஷ்ணபரமஹம்சர், சுவாமி விவேகாநந்தர், இராஜாராம் மோகன்ராய், தயானந்த் சரஸ்வதி போன்றவர்களால் தோற்றுவிக்கப்பெற்ற சமய, சமுதாய மறுமலர்ச்சி மெதுவாகப் பரவிக் கொண்டிருந்தது. தெற்கில் தேக்க நிலை தொடர்ந்தது. இத்தகைய சூழலில் இராமலிங்கர் அந்நிய ஆட்சியைப் பற்றி அதிகமாகச் சிந்திக்க வில்லை. அவர் மருளாட்சி நீங்கி அருளாட்சி வரவேண்டுமென்ற நோக்கில்,

> ''அச்சந் தவிர்ந்தே அருளிற் செலுத்துகின்ற
> விச்சை அரசே விளங்கிடுக-நச்சரவம்
> ஆதிக் கொடியஉயிர் அத்தனையும் போய்ஒழிக
> நீதிக் கொடிவிளங்க நீண்டு.
>
> கருணை இலா ஆட்சி கடுகி ஒழிக
> அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க-தெருள் நயந்த
> நல்லோர் நினைத்த நலம் பெறுக நன்றுநினைத்
> தெல்லோரும் வாழ்க இசைந்து''[3]

என்று கூறுகின்றார். 'கருணை இலா ஆட்சி' என்று அடிகள் கூறுவதை ஆங்கிலேயரின் ஆட்சி என்று கொள்ள இடமில்லை. பொதுவாகவே கொள்ள வேண்டியிருக்கின்றது.

பாரதியார் காலத்தில் அரசியல் விழிப்புணர்ச்சி தோன்றிவிட்டது கோகலே, திலகர், லாலா லஜபதிராய், விபின் சந்திரபால் போன்றவர்களும், தெற்கில் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரம் போன்றவர்களும் அகில இந்திய - தேசிய காங்கிரசில் சேர்ந்து தொண்டு செய்த பின்புலத்தில் காந்தியடிகள் என்ற புதிய அறத்தலைமை உருவாவதை பாரதியார் வரப்போகின்ற விடுதலையைத் தீர்க்கத் தரிசனத்தோடு கண்டு ஆனந்தப் பள்ளு பாடினார். அவர் கொட்டிய போர் முரசு

---

2. பாரதியைப் பற்றி ஜீவா-ப. 6
3. திருவருட்பா-136 சன்மார்க்க உலகின் ஒருமை நிலை 4-5.

ஆங்கில ஆட்சியைக் கதிகலங்கச் செய்தது. காலச் சூழலில் வீரம் பொழிந்த தேசியக் கவியாகப் பாரதி விளங்கினர்.

வள்ளலார் கருணையின் திருவுருவம், குளிர்தரு நிழல், நிழல் கனிந்த கனி, தீஞ்சுவைத் தண்ணீர், சுகந்த மணமலர், மெல்லிய பூங்காற்று, அருள் விளக்கு, அருள் சுடர்.

மகாகவி பாரதியார் அக்கினிக் குஞ்சு, கோடையிடி, சுழன்றடிக்கும் புயல், மின்வெட்டு, காட்டாற்று வெள்ளம், புரட்சியின் வடிவம்.

வள்ளலாரும் பாரதியாரும் மாறுபட்ட இயல்புகளைக் கொண்டவர்கள்; ஆனால் முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டவர்கள் அல்ல. முன்னவர் ஆன்மீகத்தின் அடியையும் முடியையும் கண்டவர். தனித்திருந்து, விழித்திருந்து, பசித்திருந்து நவம் மேற்கொண்டவர், ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி ஒளிமயமானவர். பின்னவர் மக்களின் வாழ்க்கையை எல்லாம் ஊடுருவிக் கண்டு, மக்களோடு கலந்து போராட்ட வாழ்வை மேற்கொண்டவர். முன்னவர் பக்தியாலும், ஞானத்தாலும் இறைவனைக் கண்டவர். பின்னவர் கர்மயோகத்தாலும், ஞானயோகத்தாலும் இறைவனை உணர்ந்தவர்.

முன்னோடி: மகாகவி பாரதியாருக்குச் சில வழிகளில் இராமலிங்கர் முன்னோடி. இரண்டு பேரும் தங்களை ஒரு நீண்ட மரபு வழியில் வந்தவர்களாகக் கருதிக் கொண்டனர். வள்ளலார்,

'வாழைஅடி வாழைஎன வந்ததிருக் கூட்ட
மரபில்யான் ஒருவன் அன்றோ......''[4]

என்று கூறுகின்றார். இதனை ஊரன் அடிகள் ''திருவள்ளுவர், திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்திகள், மாணிக்க வாசகர். பட்டினத்தார், தாயுமானர் என வாழையடி வாழையாக வரும் திருக்கூட்ட மரபில் சென்ற நூற்றாண்டில் சன்மார்க்கமுந் தமிழும் தழைத்தினிதோங்க நந்தமிழகத்தே வந்துதித்த செந்தமிழ்ஞானி திருவருட் பிரகாசவள்ளலார் இராமலிங்க அடிகள் ஆவர்''[5] என்று விளக்கம்கூறுகின்றார்.

---

4. திருவருட்பா 32 பிரியேன் என்றல்-4.
5. இராமலிங்க அடிகள் வரலாறு-முன்னுரை ப.

இத்தகைய மரபுவழி உணர்வு பாரதியாரிடமும் இருந்தது. பாரதியார்,

''எனக்கு முன்னே சித்தர்பலர் இருந்தாரப்பா!
யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்''[6]

என்று கூறுகின்றார். பாரதியார் காலத்தில் வள்ளலாரையும் ஒரு சித்தராகவே கருதினர். இதனால் பாரதியாரை வள்ளலாரின் வழிச் செல்ல வேட்கை கொண்டவராகக் கருத இடமுண்டு.

பாரதியார் வள்ளலார் வாழ்ந்த வடலூருக்கு அருகில் பாண்டிச்சேரியில் வாழ்ந்தவர். ஆதலால் வள்ளலாரைப் பற்றி மிகுதியும் கேள்விப்பட்டிருக்க வாய்ப்புண்டு. பாரதியார் காலத்தில் திருவருட்பா வெளிவந்துவிட்டது. 1867ஆம் ஆண்டில் தொழுவூர் வேலாயுத முதலியார் முதல் நான்கு திருமுறைகளை வெளியிட்டார். அவர் ஐந்தாம் திருமுறையை 1880இல் அச்சிட்டார். சோட சாவதானம் சுப்பராய செட்டியார் ஆறும் திருமுறையை 1885-இல் வெளியிட்டார். இதிலிருந்து பாரதியாருக்கு திருவருட்பா கிடைத்திருக்கக்கூடுமென்பதை அறியலாம்.

பாரதியார் திருவருட்பாவை ஆழ்ந்து படித்திருக்கின்றாரென்பதற்கு ஓர் அகச்சான்றுமிருக்கின்றது. மகாகவி பாரதியார் ''கோக்கலே சாமியார் பாடல்'' என்றொரு கவிதை எழுதியுள்ளார். அதன் மேலே, ''இராமலிங்க சுவாமிகள் 'களக்க மறப் பொதுநடம் நான் கண்டு கொண்ட தருணம், என்று பாடிய பாட்டைத் திரித்துப் பாடியது'' என்ற குறிப்புக் காணப்பெறுகின்றது வள்ளலார் ஆறும் திருமுறையில் 'அத்துவித ஆனந்த அனுபவ இடையீடு' என்ற தலைப்பில் 'திருச்சிற்றம்பலம்' பற்றிப் பாடுகையில்,

''களக்கம் அறப் பொதுநடம் நான் கண்டு கொண்ட தருணம்
கடைச்சிறியேன் உளம்பூத்துக் காய்த்ததொரு காய்தான்
விளக்கமுறப் பழுத்திடுமோ வெம்பி உதிர்ந்திடுமோ
வெம்பாது பழுக்கிலும் என் கரத்தில் அகப்படுமோ
கொளக்கருது மலமாயைக் குரங்குகவர்ந்திடுமோ
குரங்குகவ ராதெனது குறிப்பில்அகப் படினும்

6. பாரதியார் கவிதைகள் பாரதி அறுபத்தாறு-1.

துளக்கம் அற உண்ணுவனே தொண்டைவிக்கிக் கொளுமோ
ஜோதிதிரு உளம் எதுவொ ஏதும் அறிந் திலனே''[7]

என்று கூறுகின்றார்.

மகாகவி பாரதியார் கோக்கலே கூறுவதைப் போல,

''களக்கமுறும் மார்லிநடம் கண்டு கொண்ட தருணம்
கடைச்சிறியேன் உளம்பூத்துக் காய்த்தொரு காய்தான்
விளக்கமுறப் பழுத்திடுமோ? வெம்பிவிழுந் திடுமோ?
வெம்பாது விழினுமென்றன் கரத்திலகப் படுமோ?
வளர்த்தபழம் கர்சானென்ற குரங்குக வர்ந்திடுமோ?
மற்றிங்ஙன் ஆட்சிசெய்யும் அணில்கடித்து விடுமோ?
இளக்கமற யான்பெற்றிங் குண்ணுவனோ, அல்லால்
தொண்டைவிக்கு மோஏதும் சொல்லரிய தாமே?''

என்று பாடுகின்றார். இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது பாரதியார் வள்ளலாரை எவ்வளவு போற்றி, உள்ள ஈடுபாட்டோடு திருவருட்பாவைப் படித்திருந்தால், சில சொற்களை மட்டும் மாற்றி ஆன்மீக உருவங்களை அரசியல் கருத்திற்கேற்ப அப்படியே பயன் படுத்தியிருப்பார் என்பதை அறியலாம்.

**தமிழ்த் தேனீக்கள்;** வள்ளலாரும் பாரதியும் தமிழ்மொழியிடம் தனிப்பெரும் வேட்கை கொண்டவர்கள். இருவரின் மொழிப்பற்றும் ஈடு இணையற்றது. பிறமொழிகளின் மீது வெறுப்பை வளர்க்காது தாய்மொழியாம் தமிழின் தனித்தன்மை கண்டு கூறிய இவர்களது மொழிப்பற்று மற்றவர்களுக்கு வழிகாட்டத்தக்கது.

வள்ளலார் தமது ''சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெருவிண்ணப்பத்தில் ''இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசத்தையும் பெருமறைப்பையும் போதுபோக்கையும் உண்டு பண்ணுகின்ற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாது, பயிலுதற்கும் மறிதற்கும் மிகவும் மிலேசுடைய தாய்ப் பாடுதற்கும் துதித்தற்கு மிகவுமினிமையுடைய தாய் சாகாக் கல்வியை இலேசிலறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி யொன்றனிடத்தே மனம் பற்றச் செய்து அத்தென் மொழிகளாற் பல்வகைத் தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித்தருளினீர்'' என்று கூறுகின்றார். இதனைப்பற்றி

7. திருவருட்பா ப. 1082

ஊரன் அடிகள், ''தென் மொழியினிடத்தே மனம் பற்றச் செய்து என்று கூறுது தென்மொழி ஒன்றைனிடத்தே எனக் கூறுவதால், அடிகள் தமிழ்மொழி ஒன்றிலேயே பற்றுக் கொண்டிருந்தார்களென்பது பெறப்படும். தமிழ் தவிர ஏனைய மொழிகளில் பற்றில்லாதவர்களே யொழிய அறிவில்லாதவர்களல்ல. அடிகளின் அறிவு, பேரறிவு, முற்றறிவு, அடிகள் மொழித் திறமுற்றுணர்ந்தோராவர். அவர்களது புலமை பன்மொழிப் புலமையும் பல்கலைப் புலமையும் ஆகும்,''[8] என்று குறிப்பிடுகின்றார்.

மகாகவி பாரதியாரும் தமிழாகவே மாறினார். அவரது உயிரும் உணர்வும் தமிழாகத் திகழ்ந்ததை அவரது படைப்புக்கள் காட்டுகின்றன. ''உலகத்திலேயுள்ள சாதியார்களிலே இந்து சாதி அறிவுத் திறமையிலே மேம்பட்டது; இந்த இந்து சாதிக்குத் தமிழராகிய நாம் சிகரம்போல் விளங்குகிறோம்; எனக்கும் நாலைந்து மொழிகளிலே பழக்கம் உண்டு. இவற்றிலே தமிழைப் போல் வலிமையும் திறமையும் உள்ளத் தொடர்பும் உடைய மொழி வேறு ஒன்றுமேயில்லை,''[9] என்று கூறுகின்றார் பாரதியார். அவர் தமிழ் பற்றிப் பாடல்களில் கூறுவனவற்றில் சிலவற்றைத் தொகுத்துக் கூறலாம்:-

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்குங் காணோம்''
''சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே''
''தனிமைச் சுவையுள்ள சொல்லை - எங்கள்
தமிழிலும் வேறெங்கும் யாங்கண்டதில்லை''
''தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்''
''வானம் அளந்தத னைத்தும் அளந்திடும்
வளர்மொழி வாழியவே''
''வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே''
''செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே''[10]

---

8. இராமலிங்கரும் தமிழும் ப. 17.
9. பாரதியாரின் கட்டுரைகள் - தமிழ்
10. மகாகவி பாரதியார்--கவிதைகள்.

வள்ளலார் தமது திருவருட்பாவாலும், உரைநடை நூற்களாலும், உரைகளாலும், பிற நூற்களைப் பதிப்பிப்பதன் மூலமும் என்றுமுள தென்தமிழை மேலும் வளப்படுத்தினர். மகாகவி பாரதியாரும் பல்பொருளும் செறிந்த எண்ணற்ற கவிதைகளாலும், கட்டுரைகளாலும், காவியங்களாலும் தமிழை மேம்படுத்தினர். இரண்டு பேரும் தமிழ்த்தாயின் தவப்புதல்வர்கள்.

*சமுதாயச் சீர்திருத்தம்* : வள்ளலார் சமுதாயச் சீர்திருத்தங்களின் முன்னேடியாகத் திகழ்கின்றார். ''எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம் உயிர்போல்'' எண்ண வேண்டுமென்று உரைத்த வள்ளலார் சாதி சமய வேறுபாடுகளால் மனித குலம் பிரிந்து சண்டையிட்டு மண்டைகளை உடைத்துக் கொள்வதைக் கண்டு மனம் வருந்துகின்றார். அவர்

*''சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே*
*சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச் சண்டையிலே*
*ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்*
*அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே*
*நீதியிலே சன்மார்க்க நிலைகளிலே நிறுத்த*
*நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர் அவர் தாமே*
*வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய*
*மேவுகின்ற தருணம் இது கூவுகின்றேன் உமையே''*[11]

என்று உளமுருக உரைக்கின்றார்.

வள்ளலாரின் சமுதாயச் சீர்திருத்தக் கருத்து ''ஆன்ம நேய ஒருமைப் பாட்டில்'' மலர்ந்தது. அண்டம் தழுவியது. இதனை ''இன்று நாடெங்கும் பேசப்பட்டு வரும் ஒருமைப் பாட்டிற்கு வித்திட்டவர் வள்ளற் பெருமானே. இன்று நாம் பேசும் ஒருமைப்பாடு சாதாரண தேசிய ஒருமைப்பாடு (National Integration) ஆனல் பெருமான் கண்ட ஒருமைப்பாடோ அனைத்துலக—சர்வதேச—ஒருமைப்பாடு (International Integration). அனைத்துலக ஒருமைப்பாடெனச் சொன்னாலும் சாலாது. அண்ட ஒருமைப்பாடு (Universal Integration) அண்டாண்ட ஒருமைப்பாடு எனக் கூறலே பொருந்தும். பெருமானின் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைத் தத்துவத்திற்கு மேல்

---

*11. திருவருட்பா புனித குலம் பெறுமாறு புகலல்--1.*

ஒரு தத்துவமும் இல்லை''[12] என்று ஊரன் அடிகள் தெளிவாக விளக்குகின்றார்.

மகாகவி பாரதியாரும் பல இடங்களில் சாதி சமய வேறுபாடுகளைச் சாடுகின்றார். அவர்,

''வேதிய ராயினு மொன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினு மொன்றே''
''சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொலல்பாவம்''
''இழிவு கொண்ட மனிதரென்ப
இந்தியாவில் இல்லையே''
''மனிதரி லாயிரஞ் சாதி—என்ற
வஞ்சக வார்த்தையை யொப்புவதில்லை''

என்றெல்லாம் கூறுவதை எண்ணிப் பார்க்கலாம். அன்பில் உலகம் ஒன்றாகி ஓங்க வேண்டுமென்ற பேராவல் கொண்ட பாரதியார்,

''பாருக்குள்ளே சமத் தன்மை—தொடர்
பற்றுஞ் சகோதரத் தன்மை,
யாருக்குந் தீமைசெய் யாது—புவி
யெங்கும் விடுதலை செய்யும்'' என்று பாடுவதைக்

கேட்கின்றோம். வள்ளலார் வழியில் பாரதி நடைபோடுவதற்கு இது சான்று.

**கடவுள் பற்றிய கருத்துக்கள்:** வள்ளலாரும் பாரதியாரும் வளர்ச்சி நிலைகளில் பல தெய்வங்களையும் பாடியிருக்கின்றனர். இறுதியில் ஒரு நிலையை எட்டிப் பிடித்தார் வள்ளலார். சத் சித் ஆனந்தமாக இருக்கும் இறைவனை அருட்சுடராகக் கண்டு அதில் இரண்டறக் கலக்க வள்ளலாரால் முடிந்தது. இந்த நிலையைப் பாரதியாலும் உணர முடிந்தது.

இரண்டு பேரும் சிறு தெய்வ வழிபாட்டைச் சாடுகின்றனர். வள்ளலார்,

''நலிதரு சிறிய தெய்வமென் றையோ
நாட்டிலே பலபெயர் நாட்டிப்

---

12. வடலூர் திருவருட் பிரகாச வள்ளலார் தெய்வ நிலையங்களின் வரலாறு. ப. 8.

பலிதர ஆடு பன்றிக் குடங்கள்
பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே
புந்திநொந் துளநடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெவ் கோயில்
கண்டகா லத்திலும் பயந்தேன்"[13] என்று கூறுகின்றார்.

வள்ளல் பெருமானின் கடவுள் கொள்கையை

"அருட் பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங் கருணைஅருட்பெருஞ்சோதி" என்பதாலும்
"அருள் விளக்கே அருட்சுடரே அருட்சோதிச் சிவமே
அருள் அமுதே அருள்நிறைவே அருள்வடிவப் பொருளே
இருள்கடிந்தென் உளமுழுதும் இடங்கொண்ட பதியே
என் அறிவே என் உயிரே எனக்கினிய உறவே
மருள்டிகந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே
மன்றில் நடம் புரிகின்ற மணவாளா எனக்கே
தெருள் அளித்த திருவாளா ஞானஉரு வாளா
தெய்வநடத் தரசே நான் செய்மொழி ஏற்றருளே"[14]

என்பதாலும் தெளிவாக அறியலாம்.

பாரதியார் கருத்துக்களும் இவை போன்றே உருப்பெற்று வளர்ந்திருக்கின்றன.

பாரதியார்,

"ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்! — பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளீரோ?
மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கும் மதியிலிகாள்! — எத
னூடும் நின்றோங்கும் அறிவொன்றே தெய்வமென்
றோதி யறியீரோ?" என்றும்

"பாருக்குள் தெய்வம் ஒன்று," "தெய்வம் உண்மையென்று தானறிதல் வேண்டும்," என்றும் "உண்மையின் பேர் தெய்வம்," என்றும

13. திருவருட்பா 13 பிள்ளைப் பெரு விண்ணப்பம்-63
14. திருவருட்பா 57 அருள் விளக்க மாலை -1.

கூறுவதைக் காணலாம். பாரதியார் சக்தியை வழிபட்டவர். இறைவனை ஞாயிருக-ஒளிவடிவாகக் கண்டவர்.

**இறவா நிலையும் அமரவாழ்வும்:** வள்ளலாரின் தத்துவத்தின் உயிர் இறவா நிலையடைதல். சாகாக் கலை கற்றவர் வள்ளலார். அவர்,

*''திரைந்து நெகிழ்ந்த தோலுடம்பும்*
*செழும்பொன் உடம்பாய்த் திகழ்ந்தேனே.''* என்றும்
*''பொன்வடிவம் தாங்கினேன் சத்தியமாத்தான்'' ''ஊன் உடம்பே ஒளி உடம்பாய் ஓங்கி நிற்க,'' 'ஒளிவடிவம் பெற்றேன்,''*
*''எத்தாலும் என்றும் அழியா வடிவுதந் தென்னுள் நின்னை வைத்தாய்,'' ''இம்மையில் என்தனக்கழியாத் திருவடிவம் தந்தானை''* என்றும் கூறுகின்றார்.

மேலும் பல இடங்களில் ''சாகாதவனே சன்மார்க்கி,'' ''என் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந்தானே'' 'மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்,'' என்றும் கூறுகின்றார்.

மகாகவி பாரதியார் இந்நிலையை ''அமர வாழ்வு'' என்கின்றார். அவர் 'புதிய ஆத்தி சூடி' பரம் பொருள் வாழ்த்தில்,

*''பலவகையாகப் பரவிடும் — பரம்பொருள்*
*ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்*
*அதனிலை கண்டார் அல்லலை யகற்றினார்*
*அதனிருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம்''*

என்று கூறுகின்றார். அவர்,

*''எப்போதும் ஆனந்தசுடர் நிலையில் வாழ்ந்*
*துயில்கட் கினிது—செய்வோர்*
*தப்பாதே இவ்வுலகில் அமரநிலை பெற்றிடுவார்''*
*''நீங்காத சிவசக்தி யருளைப் பெற்றோம்*
*நிலத்தின் மிசை அமரநிலை யுற்றோமப்பா''*

என்றெல்லாம் கூறுவதைப் பார்க்கலாம்.

பாரதியார் இல்வாழ்வில் ஈடுபட்டுக் கொண்டே இறவா நிலையை அடைய முயன்றதை அவரோடு நெருங்கிப் பழகியவர்கள் கூறுகின்றனர். ''பாரதியார் சாகாமல் இருக்க வழி கண்டுபிடிக்கப் போவ

தாக முன்பு ஒருநாள் சொன்னார்,'' [15] என்று யதுகிரி அம்பாள் நினைவு கூறுகின்றார். ''பாரதி அறுபத்தாறு'' என்ற கவிதையில் பாரதியார் மிகத் தெளிவாக,

'பார்மீது நான்சாகா திருப்பேன், காண்பீர்''
''நலிவுமில்லை; சாவுமில்லை, கேளீர், கேளீர்''
''அச்சத்தை வேட்கைதனை அழித்து விட்டால்
அப்போது சாவுமங்கே அழிந்து போகும்'' என்று

கூறுவதைக் காண்கிறோம். இவை வள்ளலார் அடைந்த மரணமிலாப் பெருவாழ்வில் பாரதி கொண்ட நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன.

**நிறைவுரை:** வள்ளலார் வாழ்ந்த புறவாழ்வு குறைவு; அக வாழ்வு அளவு கடந்தது. அக வாழ்வை ஓரளவு திருவருட்பா வெளிப் படுத்துகின்றது. வள்ளலாரைச் சித்துக்கள் செய்பவராகக் கண்ட வர்கள் உண்டு. ஆனால் அவரது தத்துவம் நித்தியமான சத்தியத்தில் நிலைத்திருப்பதை அறிஞர் உலகம் ஒப்புக் கொள்கின்றது.

பாரதியாரின் புறவட்டம் விரிவானது. அகவட்டம் புதிர். அவரது படைப்புக்கள் புறநோக்கைக் காட்டுவதைப் போல அக உணர்வுகளை முற்றும் காட்டவில்லை. அவருக்குக் அதற்குக் காலம் கிடைக்கவில்லை. இருந்தாலும் அவர் தனது வாழ்க்கை நோக்கைக் கோடிட்டுக் காட்டத் தவறவில்லை.

இருவரின் வாழ்க்கை நோக்கங்களும் தத்துவங்களும் இன்னும் விரிந்த ஆய்வுக்களங்களை அமைத்துத் தருகின்றன. □

---

15. பாரதி நினைவுகள் ப. 74

## துணை நூல்கள்


1. அசலாம்பிகை அம்மையார் — பண்டித-இராமலிங்க சுவாமிகள் சரிதம்
2. இராமலிங்க சுவாமிகள் — திருவருட்பா
3. உபதேசப்பகுதி — பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு 1959
4. இராமலிங்க சுவாமிகள் — மனுமுறை கண்ட வாசகம் மணி திருநாவுக்கரசு முதலியார் பதிப்பித்தது 1926)
5. இராமலிங்க சுவாமிகள் — ஜீவகாருண்ய ஒழுக்கம், தூயமலர் பதிப்பகம், சென்னை-2, 1965
6. இளங்கோவடிகள் — மணிமேகலை
7. ஊரன் அடிகள் — இராமலிங்க அடிகள் வரலாறு
8. ஊரன் அடிகள் — இராமலிங்கரும் தமிழும்
9. ஊரன் அடிகள் — வடலூர் திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையங்களின் வரலாறு
10. ஊரன் அடிகள் — வடலூர் வரலாறு
11. கந்தசாமி பிள்ளை, ச.மு. — இராமலிங்க சுவாமிகள்
12. கலியாண சுந்தரனார், திரு. வி. — இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்
13. கலியாண சுந்தரனார், திரு. வி. — தமிழ்க்கலை
14. கலியாண சுந்தரனார், திரு வி. — பரம் பொருள் அல்லது வாழ்க்கை வழி
15. கலியான சுந்தரனார், திரு. வி. — பொருளும் அருளும் அல்லது மார்க்சியமும் காந்தியமும்
16. சரவணனந்தா — அருள் அறிவியல் (அல்லது) மெஞ்ஞான விளக்கம்
17. சிதம்பரனார் சாமி — வடலூரார் வாய்மொழி
18. சிவஞானம், ம. பொ. — வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு
19. சிவகாமசுந்தரி, சு. — வள்ளலார்
20. சீநிவாசராகவன் — ஒரு நூற்றுண்டுத் தமிழ்க் கவிதை
21. சீவானந்தம், ப. — பாரதியைப் பற்றி ஜீவா
22. சரவணனந்தா சுவாமி — வள்ளலார் கண்ட ஒருமைவாழ்வு
23. சுவாமி விவேகாநந்தர் — நமது தாய்நாடு
24. தயானந்தன் பிரான்சிஸ் — இந்தியாவில் தற்கால சமய இலக்கியங்கள்

25. திருநாவுக்கரசு, வித்துவான் — மறைமலையடிகள் வரலாறு

26. துரைசாமிப்பிள்ளை, உ. மா. — சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளின் சரித்திரமும் அருட்பா ஆராய்ச்சியும்

27. நடராசன், அ. லெ. — வள்ளலார் வாழ்வும் வாக்கும் இராமலிங்கர் பணி மன்றம், சென்னை 1974

28. பரமசிவானந்தம், அ. மு. — தமிழக வரலாறு

29. பாரதியார் கவிதைகள், சக்தி வெளியீடு 1957

30. பாரதியாரின் கட்டுரைகள்.

31. பி. ஸ்ரீ. — இராமகிருஷ்ணரும் இராமலிங்கரும்

32. மறைமலையடிகள் - சைவசித்தாந்த ஞான போதம்

33. வரதராசனார், டாக்டர் மு. — தமிழ் இலக்கிய வரலாறு

34. யதுகிரி அம்மாள் — பாரதி நினைவுகள்

35. தமிழக வரலாறு (அறுவர் சொற்பொழிவுகள்)

36. திருக்குறள்

37. திருவாசகம்

38. திருமந்திரம்

39. Annamalai, Dr. Sp. — "The Life and Teachings of Saint Ramalingar"

40. Chetty, T V.G., — "Chidambaram Ramalinga Swami, His Life, Mission and Studies"

41. Majumdar, R. C., and K. K. Datta, — "British Paramountcy and Indian Renaissance".

42. Ramesh Dutt, — "The Economic History of India"

